
ஸ்ரீமத்
பிரம்மபுராணம்
Y. Tharjini
– கே.வி. குணசேகரம் –



# என்னுரை

**ப**திணென் புராணங்களையும் எழுதவேண்டும் என்ற நினைவு பலகாலமாக இருந்தது. இருப்பினும் அவற்றிற்கான மூலப்பிரதிகளை எடுக்க முடியவில்லை. இதற்கு முன் சிவபுராணம், கந்தபுராணம், கருடபுராணம், விஷ்ணுபுராணம், பகவத புராணம் என்பவற்றை எழுதி வெளியிட்டுள்ளேன். இப்போது பிரம்மபுராணத்தை வெளியிடுகிறேன். அடுத்துப் பத்ம புராணத்தை வெளியிடலாமென்று நினைக்கிறேன்.

**இ**ப்புராணத்தை மிகுந்த கவனத்துடன் கணினிமயப்படுத்தித் தந்த கோப்பாய் ஆரியன் கிரியேஷன்ஸ் நிறுவனத்துக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

கே.வி. குணசேகரம்

கோட்டக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)

## 1. புராண வரலாறு




**ப**திணென் புராணங்களில் முதலில் தோன்றிய புராணம் பிரம்மபுராணம் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதனால் இதனை ஆதிபுராணம் என்றும் கூறுவர். புராணங்களுக்குரிய இலட்சணங்கள் ஐந்தாகும். அவை பேரண்டப் படைப்பு, பிரளயம் மூலம் உலக அழிவு, பின் அண்டங்களின் தோற்றம், வெவ்வேறு மன்வந்திரங்கள், சூரிய சந்திர வம்சங்களின் வரலாறு, அரசர்களின் பரம்பரை வரலாறு. இவ் ஐந்து விடயங்களையும் பிரம்ம புராணம் விரிவாகக் கூறுகிறது.

**பொ**துவாகப் புராணங்கள் அரன், அரி, அயன் என்கின்ற மும்மூர்த்திகளைப் பற்றியே கூறுகின்றன. இருப்பினும் சிவனை மிகமிக உயர்வாகவும் சில புராணங்கள் கூறுகின்றன.

**பி**ரம்ம புராணம் ஒரு ராஜசீகப் புராணமாகும். பதிணென் புராணங்களையும் வேதவியாசர் எழுதினார். இவரைக் கிருஷ்ணதவைபாயனர் என்று அழைப்பார்கள். இவர் செந்தணலில் கருப்பு உருவத்துடன் தோன்றியவர் என்று கூறப்படுகிறது. இதனால் தான் இவருக்கு இப் பெயர் உண்டானது.

**ம**காபாரதத்தை எழுதிய பின்பு வேதவியாசர் பதிணென் புராணங்களாயும் எழுதினார். இருந்த போதும் பிரம்ம புராணத்தின் எட்டுப் பிரதிகள் கிடைக்காததால் அறிஞர்கள் மகாபாரதம், ஹரி வம்சம், வாயு புராணம், மார்க்கண்டேய புராணம், விஷ்ணு புராணம் ஆகிய நூல்களில் இருந்து செய்திகளைச் சேகரித்து அவற்றை ஒழுங்குபடுத்திப் பிரம்ம புராணமாக உருவாக்கினர் என்று கூறப்படுகிறது.

## 2. உலகச் சிருஷ்டி



**நை**மிசாரணிய வனத்தில் இருந்த வேதவியாசரின் சீடரான சூத முனிவரின் தபோவனத்தில் முனிவர்கள் பல கூடியிருந்தனர். உள்ளே சூதமுனிவர் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தனர். ஓமப்புகையில் வாசனையும், வாசனைத்

திரவியங்களின் நறுமணமான புகையும் ஆச்சிரமத்தைப் புனிதப்படுத்திக் கொண்டிருந்தது. உள்ளிருந்து கேட்கும் வேத ஒலியை முனிவர்கள் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தனர்.

**பி**ரார்த்தனை முடிந்ததும் சூத முனிவர் பூசை அறையை விட்டு வெளியே வந்தார். முனிவர்கள் எல்லோரும் எழுந்து நின்று அவரை வாழ்த்தி வரவேற்றனர். சூதமுனிவர் அங்கிருந்த முனிவர்களைப் புன்சிரிப்பால் வரவேற்றார். முனிவர்கள் தமக்கேற்படும் ஐயங்களை நிவர்த்தி செய்யவும், புராண வரலாறுகளைக் கேட்டறியவும் தினமும் அவரது தபோவனத்திற்கு வருவார்கள்.

“**கு**ருவே, எமக்கேற்படும் ஐயங்களை தெரிவித்து எம்மைப் பரிசுத்தப்படுத்துவீர்கள். தாங்கள் கூறும் புராணங்களின் வரலாறுகளையும் எம்பிரானான மகாவிஷ்ணுவின் பெருமைகளையும் கேட்டு வியப்பும், மகிழ்வும் அடைந்து வருகிறோம். இன்று தாங்கள் எமக்குப் பிரம்ம புராணத்தைப் பற்றி முழுமையாகக் கூறுதல் வேண்டும்” என்று வணங்கினர்.

**மு**னிவர்களே பகவானது பெருமைகளையும், மகிமைகளையும், அருட்செயல்களையும் புராணங்கள் அழகாகவும், சுவையாகவும் கூறுகின்றன. இதைக் கேட்பவர்கள் பாக்கியசாலிகள். சொல்பவர் அவர்களைவிடப் பாக்கியசாலியாவார். எத்தனைமுறை இவற்றைச் சொன்னாலும் கேட்டாலும் தெவிட்டாது. கேட்கக் கேட்கப் புதுமைமிக்கதாக இருப்பதோடு, கேட்பவர்களையும் சொல்பவர்களையும் மகாவிஷ்ணுவின் அருள் பற்றிப் பிடித்துக் கொள்ளும். அதனால் அவர்களுக்கு எந்தத் துன்பங்களும் வரவும் பகவான் விடமாட்டார்.

**உ**லகசிருஷ்டி பற்றி பகவதபுராணம் கூறுவது

“**உ**லகெங்கும் நீர் நிறைந்திருக்க பிரம்மனாகிய பகவான் விஷ்ணு அந்த நீரின் மேல் யோகத்துயில் கொண்டிருந்தார். நீருக்கு ‘நர’ என்ற பெயருண்டு. அயனம் என்றால் படுக்கை. அதனால் நீரின் மேல் துயில் கொண்டிருந்த விஷ்ணுவுக்கு நாராயணன் என்ற பெயர் உண்டானது.

**வி**ஷ்ணு பகவான் நீரின் மீது யோக நித்திரை செய்து கொண்டிருக்கும் போது, நீரின் அடியில் இருந்து ஒரு முட்டை வெளியே வந்தது. அதனுள் பிரமா வீற்றிருந்தார். அவர் முட்டையின் இரு பகுதிகளில் இருந்து சுவர்கத்தையும், பூமியையும் உருவாக்கினார். அவர் சுயம்புவாகச் செயற்பட்டு முன்பு உருவாக்கிய சுவர்க்கம், பூமி ஆகிய இரண்டிலும் இருந்து ஆகாயம், திக்குகள், காலம், மொழி, உணர்வுகள் ஆகியன உருவாகின. அதன் பின் பிரம்மாவின் மனதில் இருந்து மரீசி, அந்திரி, ஆங்கிரசர், புலஸ்தியர், கிரது, வசிட்டர் என்ற சப்த ரிஷிகளைத் தோற்றுவித்தார். அதன் பின்பு ருத்திரனையும் சனத்குமாரரையும் தோற்றுவித்தார்.

## 3. மேலும் சில படைப்புக்கள்



**பி**ன் நெடுங்காலம் பிரம்மா தவம் செய்து ஓர் ஆணையும், ஒரு பெண்ணையும் படைத்தார். அவர் படைத்த ஆணின் பெயர் சுவயம்புமனு. பெண்ணின் பெயர் சதரூபை. இவர்களின் மகன் மனு. மனு தோற்றுவித்தார்களே மானிடராவர். அத்தம்பதியினருக்கு வீரன், பிரியவிரதன், உத்தானபாதன் என்னும் மூன்று மக்கள் பிறந்தனர்.

**உ**த்தானபாதனுக்குத் துருவன் என்றொரு மகன் பிறந்தான். இவன் பெரிய தாயாரது கொடுமைகளைத் தாங்கமுடியாது மூன்று வயதில் காட்டுக்குச் சென்று தவம் செய்து துருவ நட்சத்திரமாக விளங்குகிறான். துருவனின் பரம்பரையில் தோன்றிய பிரசீனபர்கிக்கு பிரசேதனர்கள் என்று அழைக்கப்படும் பதின்மர் பிறந்தனர். அவர்களுக்குத் திருமணம் செய்து கொடுத்து படைப்புத் தொழிலைச் செய்விக்கப் பிரசீனபார்க் விருப்பியபோது அவர்கள் அதை விரும்பாது காட்டிற்குத் தவம் செய்யச் சென்றுவிட்டனர். அதனால் படைப்புத் தொழில் இல்லாமையால் உலகம் காடாகியது.

**அ**தைக்கண்டு சீற்றம் கொண்ட பிரசேதனர்களை வாயுவையும் அக்கினியையும் உருவாக்கி காடுகளை எரித்து அழித்தனர். அதைக் கண்டு பெரும் துயரங்கொண்ட சோமன், அழகிய பெண்ணான மரீசையுடன் சேர்ந்து வந்து பிரசேனர்களைச் சாந்தப்படுத்தி மரீசியைத் திருணம் செய்து வைத்தார். அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்குப் பெற்றோர் தட்சப் பிரஜாதிபதியென பெயர் சூட்டினர்.

## 4. தட்சனின் சந்ததியினர்



“**மை**த்திரேய மகரிஷி தொடர்ந்து சொன்னார், “விதுரரே, சுவாயம்புவமனுவின் சந்ததியை நீர் அறிந்து கொள்ள வேண்டும். சுவாயம்புவமனுவுக்கு தேவகுதி, ஆகுதி, பிரகுதி என்ற மூன்று பெண்களும் பிரியவிரதன், உத்தானபரதன் என்ற இரு ஆண்பிள்ளைகளும் பிறந்தனர். தேவகுதி கார்த்தப் பிரஜாதிபதிக்குத் திருமணம்

செய்து கொடுத்தார். இவர்களுக்குக் கபிலர் பிறந்தார். தனக்கு இன்னும் ஆண்பிள்ளைகள் பிறக்க வேண்டும் என்ற விருப்புடன் வாழ்ந்த சுவாயம்புவமனு தனது புதல்வியான ஆகுதியை ருசி என்ற பிரஜாபதிக்குத் திருமணம் செய்து கொடுக்கும்போது அவர்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தையைத் தனக்குத் தரவேண்டும் என்ற நிபந்தனையுடன் திருமணம் செய்து கொடுத்தார்.

**இ**ருவருக்கும் ஓர் ஆண் குழந்தையும், ஒரு பெண்குழந்தையும் பிறந்தது. ஆண்குழந்தை திருமாலின் அம்சம் கொண்டதாகவும் பெண்குழந்தை திருமகளின் அம்சம் கொண்டதாகவும் இருந்தது. ஆண்குழந்தைக்கு யக்ஞன் என்றும் பெண் குழந்தைக்கு தட்சினை என்றும் பெயர் சூட்டினர்.

**மு**ன்பு செய்த ஒப்பந்தப்படி சுவாயம்புவமனு தனது மகளுக்குப் பிறந்த ஆண்குழந்தையான யக்ஞனைத் தனது வீட்டுக்கு அழைத்து வந்து வளர்த்தார். ருசி தட்சினையை வளர்த்து வந்தார். பருவ வயது வந்ததும் யக்ஞனுக்கும் தட்சினைக்கும் சுவாயம்புவமனு திருமணம் செய்து வைத்தார்.

**சு**வாயம்புவமனு தனது மூன்றாவது மகளை தசன் என்ற பிரஜாபதிக்குத் திருமணம் செய்து வைத்தார். இருவருக்கும் பதினாறு பெண்கள் பிறந்தனர். அப் பெண்களில் ஒருத்தியை அக்கினி பகவானுக்கும், இன்னொருத்தியை பிதிருகளுக்கும், மற்றொரு பெண்ணான சதி என்பவளைப் பரமசிவனுக்கும் தட்சப் பிரஜாபதி திருமணம் செய்து கொடுத்தார்.


**த**ர்மத்திற்கு திருமணம் செய்து கொடுத்த பதின்மூன்று பெண்களில் மூர்த்தி என்பவள் நரன், நாராயணன் என்றும் இரு ரிஷிகளைப் பெற்றாள். இவர்கள் இருவரும் பூமியின் பாரத்தைக் குறைக்கப் பிறந்தமையால் இவர்கள் இருவரும் பிறக்கும் போது வானில் மங்கல வாத்தியங்கள் ஒலித்தன. தேவர்கள் பூமாரி சொரிந்தனர். இவர்கள் யது குலத்தில் கிருஷ்ணராகவும், குரு குலத்தில் அர்ச்சுனனாகவும் அவதரித்தனர்.

**த**ட்சப் பிரஜாபதியின் பதினாறாவது பெண்ணான சதி என்பவள் பரமசிவனைத் திருமணம் செய்தாள். பரமசிவனை தட்சண் எதிரியாக மதித்ததாள் சதி என்பவள் இளமைப்பருவத்திலிருந்து யோகமார்க்கத்தைக் கடைப்பிடித்து இறுதியில் தன்னுடலை நீத்தாள்.

**இ**வ்வாறு சூதமுனிவர் கூற இடைமறித்து ஒரு முனிவர் கேட்டார், “தட்சப் பிரஜாதிபதிக்கும் பரமசிவனுக்கும் இடையே பகைவரக் காரணம் என்ன?”.

“**மு**ன்பொருபோது மரீசி முனிவர் பெரியதொரு யாகம் செய்தார். அதற்கு இந்திரன் முதலான அனைத்துத் தேவர்களும் வந்திருந்தனர். தட்சப்பிரஜாபதி ஆணவத்துடன்

யாகசாலைக்கு வந்த போது பரமசிவனைத் தவிர ஏனைய தேவர்களும், முனிவர்களும், ரிஷிகளும் எழுந்து நின்று வணங்கி அவரை வரவேற்றனர். தனது மகளின் கணவனான பரமசிவன் எழுந்து நின்று தன்னை வரவேற்காததைக் கண்டு தட்சண் ஆத்திரத்துடன் சொன்னான், "தேவர்களே, முனிவர்களே, ரிஷிகளே எனது மகளின் கணவனான பரமசிவன் என்னை மதிக்கவில்லை. முறையின்படி நான் அவனது மாமன். மாமனை மருமகன் தனது தந்தையை மதிப்பது போல மதிக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். எனது அழகான மகள் இவனின் மீது மையல் கொண்டமையால் இவனது தகுதி, தரம், குலம் என்பவற்றை ஆராயாது திருமணம் செய்து கொடுத்துவிட்டேன். சுடலைச் சாம்பலைப் பூசி, சுடலையில் நடனமாடிப் பிச்சை பெற்று உண்ணும் இவனுக்கு எனது தகுதியும் தராதரமும் தெரியவில்லை" என்று வாய்க்கு வந்தபடி பரமசிவனைத் திட்டடினான்".



"**பி**ன், பிரமதேவரின் விருப்பமில்லாமல் சதியை இவனுக்குத் திருமணம் செய்யு கொடுத்தேன். அப்படியான இந்தப் பரமசிவனுக்கு யாகங்களின் போது அவிப்பாகம் பெறும் உரிமை இல்லை என்று கூறிவிட்டு நீரைக் கையில் எடுத்து ஆசமனம் செய்து விட்டு, "தேவர்களில் இழிந்தவனான இவனுக்கு வேள்வியின் போது அவிப்பாகம் பெறும் உரிமை இல்லாது போகட்டும்" என்று சபித்தான்.

**அ**தைக் கேட்டதும் பெருங்கோபங் கொண்டு எழுந்த நத்திதேவர் தான் பெரியவன் என்ற நினைப்போடு பரம்பொருளைச் சபித்த தட்சன் பேதபுத்தியுள்ளவனாகவும், நல்ல புத்தியில்லாதவனாகவும், விலங்குகளைப் போலக் காமத்தில்மயங்கட்டும். இறுதியில் ஆட்டின் முகத்துடன் அலையட்டும். என்று சபித்த நந்திதேவர் தட்சனுக்கு அனுசரணையாக இருந்த தேவர்களையும், முனிவர்களையும் சபித்தார். இவ்வாறு நந்திதேவர் சபித்ததால் ஆத்திரமடைந்த பிருகுமுனிவர் கடுங்கோபங் கொண்டு சிவனுக்கு ஆதரவாக இருப்பவர்கள் வேதமுறைக்கு ஒவ்வாத கருமங்களைச் செய்யப்பட்டும். சடை, எலும்பு, நீறு என்பவற்றைத் தரித்துக் கொண்டு அலையட்டும்" என்று சபித்தார். அதன்பின் சிவபெருமான் அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டார். அதன்பின்பு தட்சப்பிரஜாபதி மேன்மையான ஒரு யாகத்தைச் செய்ய விரும்பி தேவர்கள், முனிவர்கள், ரிஷிகள், பிராமணர்கள் எல்லோருக்கும் அழைப்பை அனுப்பினார். ஆனால் சிவபெருமானுக்கு அனுப்பவில்லை.

"**த**னது தந்தை மிகவும் சிறப்பாகச் செய்யும் யாகத்திற்குத் தானும் செல்ல வேண்டும் என்ற விருப்பம் சதிதேவிக்கு உண்டானது. அதனால் தனது கணவனான பரமசிவனிடத்தில் வந்து தனது விருப்பத்தைக் கூறினாள்.

**அ**தைக் கேட்ட பரமசிவன், “எனது பிரியசகியே, நல்லவர்கள் எம்மை அழைக்காவிட்டாலும் நாம் அவர்கள் செய்யும் யாகங்களுக்கோ அல்லது சடங்குகளுக்கோ செல்வது நியாயமானது. கல்வி, தவம், பொருள், அழகு, இளமை, நல்ல குணம் ஆகியன ஒருவரிடம் இருந்தால் அவர் சான்றோராக இருப்பார். பணம், பொருள், அதிகாரம் என்பன தீயவர்களிடம் இருந்தால் அவற்றால் தீமைகள் தான் உண்டாகும். தீயவர்கள் யாரையும் மதிப்பதில்லை. பிறரை மதிக்காதவர்களின் இல்லங்களுக்குச் சென்றால் அவமானம் தான் உண்டாகும். நல்லவர் ஒருவருக்கு ஒருவர் மீது கோபம் உண்டனால் அக் கோபம் அவரின் குடும்பத்தைச் சாராது. தீயவர் ஒருவர் கோபம் கொண்டால் அக் குடும்பத்தை வெறுத்துப் பகைப்பர் அதனால் உனது தந்தை உன்னைத் தனது மகள் என்று நினைக்கமாட்டார். எனது மனைவி என்றே நினைப்பார். அதனால் நீ அங்கு செல்வதை நான் விரும்பவில்லை”.

“**ப**ரமசிவன் சொன்னதை சதிதேவி ஏற்கவில்லை. அவள் தனது பெற்றோரையும் உறவினரையும் பார்க்க விரும்பித் தனியே தனது தந்தை நடத்தும் யாகத்திற்குச் சென்றாள். அவள் தனியாகச் செல்வதைக் கண்ட பூதகணங்களான மணிமான், மதன் ஆகிய இருவரும் அவளுக்குத் துணையாகச் சென்றனர்”.

**ச**திதேவி தட்சனது யாகசாலையைச் சென்றடைந்தபோது யாரும் அவளை வரவேற்கவில்லை. தாயாரும் சகோதரிகளும் பயத்துடன் வந்து அவளை ஆசனத்தில் அமருமாறு வேண்டிய போதும் அவள் ஆசனத்தில் அமரவில்லை. அங்கிருந்த முனிவர்கள், ரிஷிகள், பிராமணர்கள், மற்றும் உறவினர்கள் யாவரும் அவளைக் கவனிக்காதது போல இருந்தனர்.

**அ**ங்கு நடைபெறும் சம்பவங்களைப் பார்த்ததும் சதிதேவிக்குக் கோபம் பொங்கியது. தனது கணவனின் சொல்லைக் கேளாது வந்ததை நினைத்து வேதனைப்பட்டவாறு தட்சணின் முன் சென்று, “உலகத்தில் எவரைவிட மேலானவர் இல்லையோ, எவரைச் சகல உயிர்களும் வணங்குகின்றனவோ, அவரை உன்னைத் தவிர விரோதிப்பவர் யாருமில்லை. எனது கணவரின் நாமத்தை நினைத்தாலே செய்த பாவங்களை அனைத்தும் அழிந்து விடும். மங்களமான தெய்வத்தை எவன் ஒருவன் நித்திக்கிறானோ, அவனது நாக்கை நான் துண்டிப்பேன். நீ எப்போதும் எனது கணவனான உலகமுதல்வனை நிந்திக்கிறாய். அதனால் உன்னால் தரப்பட்ட இந்தப் பாவம் நிறைந்த உடலை நீத்துப் புனிதமான உடலைப் பெற விரும்புகிறேன். எனது கணவர் என் மீது மோகங் கொண்டால் உனது பெயரை முன்வைத்தே தாட்சாயிணி என்று அழைப்பார். அப்படியான எனது கணவரை விரோதிக்க உனக்கு எவ்வாறு மனம் வந்தது” என்று அழுதவாறு யாககுண்டத்தில் விழுந்து தனது உடலைத் துறந்தாள்.

**ச**திதேவி உயிர் துறந்ததும் அவளுடன் வந்த பூதகணங்கள் தட்சணைக் கொல்ல வந்தன. அதைக் கண்ட பிருகு முனிவர், மந்திரம் ஓத அந்த அக்கினியில் இருந்து ருபுக்கள்

என்னும் தேவர்கள் வெளிப்பட்டுக் கொள்ளிக் கட்டைகளை எடுத்துப் பூதகணங்களைத் தாக்கினர். அவர்களை எதிர்க்க முடியாது பூதகணங்கள் பின் வாங்கினர்.

**த**க்கனின் யாகசாலையில் நடந்தவற்றைக் கேள்விப்பட்ட சிவபெருமானுக்குக் கடுங்கோபம் வந்தது. அவர் கோபமிகுதியால் நெற்றிக் கண்ணைத் திறந்தார். அதிலிருந்து சிவனின் அம்சங்கள் அனைத்தும் கொண்ட வீரபத்திரர் வெளிப்பட்டார் அவனது தலை ஆகாயத்தைத் தொட்டது. ஆயிரம் கைகளும், முக்கண்களுடனும், கோரப்பற்களுடனும், நெருப்பைப் போலப் பிரகாசிக்கும் தலை முடியுடனும் தோன்றினார். மண்டையோடுகளால் ஆன மாலையை அணிந்திருந்தார். அவரது ஆயிரம் கரங்களிலும் பயங்கரமான ஆயுதங்கள் இருந்தன.

**அ**வர் சிவபெருமானைப் பணிந்து வணங்கினார்., “வீரபத்திரா, நீ என்னுடைய அம்சம். எனது படைத்தளபதியும் நீதான் நீ தட்சணின் யாகசாலைக்குச் சென்று யாகத்தை அழித்துவிடு. உன்னை எதிர்ப்பவர்களைக் கொன்றுவிடு” என்றார் சிவபெருமான்.

**சி**வபெருமானின் கட்டளையை ஏற்று, பெருங்கோபங் கொண்ட வீரபத்திரர் தக்கனின் யாகசாலையை அடைந்தார். யாகசாலைக்கு எதிரே பெரும் புழுதிப்படலம் கிளம்பியதால் பயந்த அந்தணர்களும், முனிவர்களும், தேவர்களும் என்ன நடைபெறுகிறது என்று நினைக்குமுன் வீரபத்திரரும் பூதகணங்களும் யாகசாலைக்குள்ப் பிரவேசித்தனர்.

**பூ**தகணங்கள் யாகசாலையை அழித்தன. சிலர் ரிஷிகளையும் முனிவர்களையும் தாக்கினார்கள். பலர் பயந்து ஓடினர். மணிமான் என்ற பூதகணம் பிருகு முனிவரைப் பிடித்துக் கட்டினான் வீரபுத்திரர் தட்சணைப் பிடித்துத் தாக்கிவிட்டுக் கட்டிப் போட்டார். சண்டீஸ்வரர் சூரியனையும், நந்திதேவர் பகனைப் பிடித்துக் கட்டினார். பூதகணங்கள் கோபங்கொண்டு தேவர்களைக் கொடூரமாகத் தாக்கினர்.

“**மீ**சையை முறுக்கிச் சிரித்த பிருகுவின் மீசையை அருவம் என்ற ஆயுத்தால் வீரபத்திரர் பிடுங்கினார். தட்சன் சிவபெருமானை நிந்தித்தபோது கண்சிமிட்டி ரசித்த பகனின் கண்களை பிடுங்கி எறிந்தார். அப்போது சிரித்த சூரியனது பற்களை வீரபத்திரர் உடைத்தார். அதன்பின் வீரபத்திரர் தட்சனின் தலையைத் துண்டித்தார். எனினும் தலை துண்டிக்கப்படாது இருந்தது. அதனால் வீரபத்திரர் தட்சனது தலையை திருகி எடுத்தார். பின் அத்தலையை தென்மூலையில் எரிந்த தீக்குள் போட்டார். அதன்பின் வீரபத்திரர் கையாலயத்திற்குச் சென்றார்.

**வீ**ரபத்திரராலும், பூதகணங்களாலும் தாக்குண்ட தேவர்களும், முனிவர்களும் பயத்தால் நடுநடுங்கியவாறு பிரமதேவரிடம் சென்று தம்மைக் காப்பாற்றுமாறு வேண்டினர். அவர்களுக்கு ஆறுதல் மொழிகளை கூறிய பிரமதேவர், “சிவபெருமானை விடச் சக்தி மிக்கவர் யாருமில்லை.

இதை அறிந்திருந்தும் தட்சனுக்காதரவனாகச் செயற்பட்ட உங்களை இந்தளவில் விட்டது நன்மையானது. அதனால் சிவபெருமானிடம் சென்று மன்னிப்புக் கேளுங்கள்" என்று கூறி அவர்களை அழைத்துக் கொண்டு கைலாயத்திற்குச் சென்றார்".

**சி**வபெருமான் கையாலமலையில் நின்ற பெரியதோர் ஆலமரநிழலில் முனிவர்களுக்கும், நாரதருக்கும் பிரம்ம உபதேசம் செய்து கொண்டிருந்தார்".

"**பி**ரமதேவர் சிவனுக்கு அருகில் சென்று வணங்கினார். பின்பு, "முழுமுதற் கடவுளே, தங்களை மதியாது தட்சன் பெருமெடுப்பில் யாகம் செய்தது மகாதவறு. தேவர்களும், முனிவர்களும், ரிஷிகளும் தங்களை அழையாது அவமதித்துவிட்டுத் தக்கன் செய்த யாகத்திற்குச் சென்றதும் தவறு. தாம் தவறு செய்துவிட்டோம் என்று அவர்கள் வருந்துகின்றனர். ஆகையால் தயாள குணம் கொண்ட தாங்கள், அவர்களை ஏற்று அருளவேண்டும்" என்று கேட்டார்.

**அ**தைக் கேட்ட சிவபெருமான், "ஆணவத்தால் அறிவு கெட்டு, மூர்க்கர்கள் நல்லவர்களுக்கும் தீங்கு செய்கின்றனர். இது எனக்குத் தெரியும். அதனால் அவற்றை அவர்களுக்கு உணர்த்தவே நான் திருவிளையாடல்களையும், தண்டணைகளையும் கொடுக்கிறேனே தவிரப் பழிவாங்கும் நோக்கம் எனக்கில்லை. இப்போது தட்சனும் அவனோடு சேர்ந்தவர்களும் உண்மையை உணர்ந்து விட்டனர். அதனால் அவர்கள் முன்பு போலாவர். தட்சனது தலை தென்முக அக்கினியில் எரிக்கப்பட்டதாலும், நந்திதேவரின் சாபத்திற்குள்ளானதாலும் யாகத்தில் கொல்லப்பட்ட ஓர் ஆட்டின் தலையை அவனுக்குப் பொருத்துங்கள்" என்றார்.

**தே**வர்கள், முனிவர்கள், ரிஷிகள் எல்லோரும் முன்னைய உருவைப் பெற்றனர். தட்சன் ஆட்டுத்தலையுடன் வந்து தனது பிழையைப் பொறுக்குமாறு வேண்டித் தான் செய்த யாகத்தை நல்ல முறையில் முற்றுப்பெறவைக்குமாறு வேண்டினான்.

**பி**ராமணர்கள் தடைப்பட்ட யாகத்திற்கான பிராயச்சித்தத்தைச் செய்துவிட்டு யாகத்தைத் தொடங்கிச் சிறப்பாகச் செய்து முடித்தனர். யாகநிறைவில் அங்கு தோன்றிய திருமால், தனக்குரிய அவிப்பாகத்தை ஏற்றுக் கொண்டார். பின்பு, "தேவர்களே, முனிவர்களே நானும் பிரமனும் சிவனும் ஒருவரே. மாயையைக் கொண்டு படைக்கவும் காக்கவும், அழிக்கவும் முறையே பிரமா, விஷ்ணு, சிவன் என்னும் பெயர்களைப் பெற்றுள்ளோம். பரப்பிரமத்திற்கும் மேலான நாம் மூவரையும் வேறு வேறானவர்கள் என நினைப்போர் அறிவிலிகளாவர். எம்முள் எவன் பேதத்தைக் காணாதிருக்கிறானோ அவன் முத்தியடைந்தவனாவான்" என்றார்.

“**யா**கத்தின்போது உயிர் துறந்த சதிதேவி இமாலய அரசனுக்கு மகளாகப் பிறந்து தவம் செய்து பரமசிவனைக் கணவனாக அடைந்தாள்” என்று தட்சனின் கதையை நிறைவு செய்தார் சூதமுனிவர். அதை கேட்டு முனிவர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தனர்.

## 5. பிரிதும் பிரித்துவியும்



**து**ருவனின் குலத்தைச் சேர்ந்த அங்கன் என்பவன் துருவனைப் போலச் சிறந்த விஷ்ணு பக்தன். அவன் தருமநெறி மீது அசையாத நம்பிக்கை கொண்டிருந்தமையால் துன்பப்படும் மக்களுக்கெல்லாம் தேவையான உதவிகளைச் செய்து வந்தான். அதனால் மக்கள் அவனைப் போற்றிப் புகழ்ந்தனர்.

**அ**வனது மனைவி மிருதுவி. மகள் கனிதை. அங்கனின் மனைவி கொடியவள். அவள் அங்கனுக்கு எதிரான செயல்களையே செய்து வந்தாள். அங்கன் தான தர்மம் செய்வது அவளுக்குப் பிடிப்பதில்லை. அதைத் தடுக்க அவள் முயற்சித்த போதும் அங்கன் அதற்கு இடங்கொடாது தொடர்ந்து தான தர்மங்களைச் செய்து வந்தான். இதனால் இருவருக்கிடையேயும் வாதப் பிரதிவாதங்கள் அடிக்கடி நிகழும். குடி மக்கள் அவளது செயல்களை மிகவும் கேவலமாக விமர்சித்தமையால் அவளுக்கு அவர்கள் மீது பெரும் வெறுப்பு உண்டானது.

**அ**ங்கனுக்கு வேணன் என்றொரு மகன் இருந்தான். அவன் தாயின் சொற்படி வாழ்ந்து வந்ததால், அவன் ஒரு தீயவனாக இருந்தான். அவனுக்குக் கடவுள் மீது நம்பிக்கை இருக்கவில்லை. தனது முயற்சியாலும், தனது அளவற்ற பலத்தாலும் உலகை வெவ்வலாம் என்று நினைத்துத் தீய செயல்கள் பலவற்றைச் செய்து வந்தான். மக்களைக் காரணமின்றிக் கொடுமைப்படுத்தினான். முனிவர்களது தவத்தைக் குழப்பினான். முனிவர்களைக் கொடுமையாகத் தண்டித்தான்.

**வே**ணனது கொடுமைகளைத் தாங்க முடியாத முனிவர்கள் அங்கனிடம் சென்று தாம் தவம் செய்ய முடியவில்லையென்றும், தாம் நல்லபடி தவம் செய்ய உதவுமாறும் வேண்டினர். தந்தை நீதியை எடுத்துக் கூறியும் வேணன் திருந்தவில்லை. மாறாக அவனின் தீய செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருந்தன. முனிவர்கள் படும் துன்பத்தைக் கண்டு கலங்கிய அங்கன் செய்வதறியாது தடுமாறினான்.

**இ**றுதியாக முனிவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அங்கன் தனது மகனான வேணனைப் படை வீரர்களைக் கொண்டு பிடிப்பித்து பலாத்காரமாக அவனது வலது தொடையைக் கடைத்தனர். அப்பொழுது மிகவும் அருவருக்கத்தக்க ஓர் அசிங்கமான குள்ள உருவம் அவனது வலது தொடையில் இருந்து வெளிப்பட்டது. அவ்வுருவத்தைப் பார்த்து அதிசயித்த சுத்தீரி முனிவர், அதற்கு நிஷாதன் எனப் பெயரிட்டார். அதன்பின் நிஷாதனது பரம்பரையினரை நிஷாதர்கள் என அழைக்கப்பட்டனர். அந்தப் பரம்பரையில் இருந்து தான் துஷாரர்கள், துண்டுரர்கள் தோன்றினார்கள்.

**அ**தன்பின் வேணனின் வலது கரத்தை முனிவர்கள் கடைந்தபோது 'பிருது' வெளிவந்தான். பிருது வெளிவந்த பின் வேணன் இறந்துவிட்டான். முனிவர்கள் பிருதுவைக் கனிவுடன் பார்த்தபோது அவனைச் சுற்றி ஓர் ஒளிவட்டம் காணப்பட்டது. அவனது கையில் ஒரு வில்லும் ஒரு கோடலியும் இருந்தது.

**பி**ருதுவுக்கு மிகவும் கோலாகலமாக முடிசூட்டப்பட்டது. அவனது முடிசூட்டு விழாவுக்கு அனைத்துத் தேவர்களும், முனிவர்களும், நவக்கிரகங்களும், சோமன், வருணன், குபேரன், அக்கினிதஷன், இந்திரன், பிரகலாதன், யமன், சித்திராதன், வாசுகி, தக்சன், கருடன், ஐராவதம், உச்சிரவசு போன்றோர் வந்து அவனை வாழ்த்தினர்.

**பி**ருது தர்மமான முறையில் நீதி தவறாது நாட்டை ஆண்டு வந்தான். மக்கள் மிக்க மகிழ்வுடன் எந்தவிதமான குறைகளுமின்றி மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். விழாக்கள், கொண்டாட்டங்கள் யாவும் கோலாகலமாக நடைபெற்றன. கோவில்களில் ஆகம முறைப்படி பூசைகள் நடைபெற்றன.

**மு**னிவர்கள் எந்தவிதமான குறைகளுமின்றித் தவம் செய்தனர். முனிவர்களுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் பிருது மன்னன் செய்து கொடுத்தான். மிக்க மகிழ்வுடன் மக்கள் வாழ்ந்தமையால் முனிவர்களுக்கு அவர்கள் உதவியாக இருந்தன. அதனால் மகிழ்வின் உச்சியில் இருந்த முனிவர்கள் பிருது மன்னனுக்கு மேலும் பல சிறப்புக்கள் ஏற்படவேண்டுமென்று நினைத்து பெரியதொரு யாகம் செய்தனர். யாகக் குண்டத்தில் இருந்து சூதர்களும், மகதர்களும் தோன்றினர்.

**சூ**தர்களும் மகதர்களும் பிருது மன்னனின் புகழை நாடு முழுவதும் பரப்பினர். அப்போது நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. மழை பெய்யாமையால் பூமி காய்ந்து வெடித்துவிட்டது. பயிர்கள் யாவும் அழிந்து விட்டன. மரம், செடி, கொடிகளெல்லாம் பட்டுப் போயின.

**ம**க்கள் அன்றன்று வாழ்வதற்கே மிகவும் கஷ்டப்பட்டனர். அதனால் அவர்கள் பிருது மன்னனின் அரண்மனைக்குச் சென்று தமது வறுமை நிலையை எடுத்துக் கூறினர். அதனால்

மிக்க கோபங்கொண்ட பிருது மன்னன் கையில் வில்லும் அம்பும் ஏந்திப் பூமியுடன் பெரும் போர் செய்ய ஆயத்தமானான்.

**பி**ருது மன்னன் பெருங்கோபங் கொண்டு தன்னைக் கொல்லத் துரத்தி வருவதை அறிந்த பூமாதேவி ஒரு பசுவாக மாறி ஓடத் தொடங்கினாள். அவள் பசுவாக மாறியதை ஞான திருஷ்டியினால் அறிந்த பிருகு மன்னன் பெருங்கோபங் கொண்டு பசுவைத் துரத்தினான். பிருது மன்னன் தர்மவான். எனினும் பகைத்தால் அவர்களைக் கொன்று நீதியை நிலைநாட்டுபவன் என்று தெரிந்த பூமாதேவி வேகமாக ஓடத் தொடங்கினாள். பிருது மன்னன் சளைக்காது பூமாதேவியைக் கொல்லும் நோக்குடன் துரத்திக் கொண்டிருக்கிறான் என்று உணர்ந்த பூமாதேவி சகல உலகங்களுக்கும் சென்றாள். பெரும் வீரனான பிருது மன்னனை எதிர்க்கக்கூடிய துணிவு யாருக்கும் ஏற்படவில்லை. அதனால் மிக்க பயத்துடன் பூமாதேவி சுயரூபத்துடன் அவன்முன் தோன்றி, "மன்னா, ஒரு பெண் என்று பாராது நான் அடைக்கலம் தேடிச் சென்ற இடமெங்கும் என்னைத் துரத்தி வந்து கொல்ல நினைக்கிறாய். இது தர்மமா? பெரும் பாவமென்று உனக்குத் தெரியாதா. நீதியில் சிறந்த மன்னனான நீ என்னை விட்டு விடு" என்று இரந்தாள்.

"**ச**ரி உன்னை நான் விட்டு விடுகிறேன். ஆனால் நீ எனது மக்களின் பசியைத் தீர்க்க வேண்டும்" என்றான் பிருது மன்னன்.

"**ம**ன்னா, முதலில் மேடு பள்ளமாக இருக்கும் நிலத்தை வில்லினால் சமன் செய் அதன்பின் மக்கள் வாழக்கூடிய இடங்களைத் தெரிவு செய்து குடியிருப்புக்களை அமை. பசுக்களை வளர்ப்பதற்கான இடங்களைத் தெரிவு செய்து தொழுவங்களை திட்டமிட்டு அமை. தானியங்கள் விளையக் கூடிய நிலங்களை உழுது பண்படுத்தி அதற்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய். அதன்பின் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களின் விளைச்சலை நான் அதிகரிக்கிறேன்" என்றாள்.

**அ**தைக் கேட்ட பிருது மன்னன் பூமாதேவி சொன்னபடி பூமியில் இருந்த மேடு பள்ளங்களை சீர் செய்து குடியிருப்புக்களை அமைத்தான். விளை நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய்தான். அதனால் மனம் மகிழ்ந்த பூமாதேவி பெரும் விளைச்சலைக் கொடுத்தாள். அதைக் கண்டு மன்னனும், மக்களும் மகிழ்ச்சியடைத்தனர். இவ்வாறு மன்னன் செய்த நற்காரியங்களால் நிலத்தை மன்னன் "பிருதிவி" என்று அன்புடன் அழைக்கத் தொடங்கினர்.

## 6. மன்வந்தரங்கள்



“**ம**காரிஷியே, இனி எனக்குச் சகல மனுவந்தரங்களையும் அவற்றின் அதிபதிகளையும், தேவர்களையும் பற்றிக் கூற வேண்டும்” என்று ஒரு முனிவர் கேட்டார்.

**மு**னிவர்களே, ஆதியில் சுவாயம்புவ மனுவில் இருந்து தொடங்கி, சுவாரோசிஷர், உத்தமர், தாமசர், ரைவதர், சக்ஷுசர் என்ற மனுக்கள் அறுவரும் சென்றனர். இப்பொழுது சூரிய குமாரனான வைவஸ்தவ மனுவின் அந்தரம் நடைபெறுகிறது.

**வ**சிட்டரின் பிள்ளைகள் சப்த ரிஷிகள். அயன், பரகதிவியன் மனுவின் குமாரர்கள். நான்காவது தாமச மனுவின் அந்தரத்திலே சுபாரர், கரிகரன், சத்தியர், சுதீகள் என்ற கணதேவதைகள். கணம் ஒன்றிற்கு இருபத்தேழு பேர்கள் இருந்தார்கள். சிபிச் சக்கரவர்த்தி நூறு அசுவமேத யாகங்களைச் செய்ததால், வஜ்ராயுதமேந்திய இந்திரனானான். யோதிர்த்தாமா, பிருகு, காரியன், சைத்திரன், அக்கினி, தகைன், பீவான் என்ற சப்த ரிஷிகள் இருந்தார்கள். நரன், கியாதி, சேது ரூபன், சானு, சங்கரன் முதலியோர் அந்தத் தாமச மனுவின் புத்திரர்கள் ஐந்தாவது ணவத மனுவந்தரத்தில் விபு என்பவன் இந்திரன் அமிதாபா, பூதனயர், வைகுண்டர், சுசமேதர் என்பவர்கள் தேவ கணங்கள் இவர்கள் கணத்திற்குப் பதின்நான்கு பேர்களாக இருந்தனர். இரணிய ரோமா, வேதசீரி, ஊர்த்துவபாகு, அபரன் வேதபாகு, சுதாமா, பர்ச்சனியன் என்பவர்கள் சப்த ரிஷிகள். பிரியவிரதனின் வம்சத்தில் பிறந்தவர்கள் நால்வர். பிரிய விரதர் ராஜரிசியாவார்.

**பி**ரியவிரதர் ஸ்ரீ விஷ்ணுவை தவத்தால் ஆராதித்து தனது குலத்தில் மனுவந்து உண்டாக வேண்டும் என்று வணங்கினார். ஆறாவது மனுவந்திரத்தின் அதிபதி சாசீசர் என்ற மனுவாகும். இனி இப்போது நடைபெறும். ஏழாவது மனுவந்திரத்திற்குச் சூரிய புத்திரரான சிரார்த்த தேவன் மனுவாக இருக்கிறான். இதில் ஆதித்தியர்கள், வசுக்கள், ருத்திரர் முதலானவர்கள் தேவதைகளாக இருக்கின்றனர். பரந்தரன் என்பவன் இந்திரன்.

**வ**சிட்டர், காசிபர், அத்திரி போன்ற யமதக்கனி, கௌத்தமர், விசுவாமித்திரர், பரத்வாசர் என்போர் சப்தரிஷிகள் ஒன்பது பேர் மனுவின் புத்திரர்கள் மகாவிஷ்ணுவின் சாத்வீக சக்தியானது சகல மனுவந்தாரங்களிடையேயும் வியாபித்துள்ளது. மகாவிஷ்ணு சுயாம்புவ மனு வந்திரத்தில் யக்சன் என்ற திருப்பெயருடன் அவதரித்தார். பின் உத்தம

மனுவந்திரத்திலே சத்தியன் என்ற திருப்பெயரோடு அவதரித்தார். பின் தாம்ச மனுவந்திரத்தில் கரி என்ற திருப்பெயரில் அவதரித்தார். பின் சாக்ஸ்ச மனுவந்தரத்தில் வைகுண்டர் என்ற திருப்பெயருடன் அவதரித்தார்.

**வை**சுவாத மனுவந்தரத்தில் வாமணனாக அவதரித்து, மூன்று அடிகளால் சகல உலகங்களையும் அளந்து அதைப் புரந்தனுக்கு அளித்தார். இவ்வாறு ஏழு மனுவந்திரங்களிலும் மகா விஷ்ணு திருவவதாரம் செய்து சகலரையும் காத்து வருகிறார்.

## 7. இனிவரும் மனுவந்தரங்களின் விளக்கம்



"**மு**னிவரகளே, இனி வரும் மனுவந்தரங்களைப் பற்றிக் கூறுகிறேன். சூரியனுக்கு சமிக்ஞை என்றொரு மனைவி இருந்தாள். அவள் விசுவகர்மாவின் மகள். சிரார்த்ததேவன், யமதர்மராஜன் என்ற இரு புத்திரர்கள் அவர்களுக்குப் பிறந்தனர். சமிக்ஞை சூரியனது வெப்பத்தைத் தாங்க முடியாததால் தனது சாயலைப் போன்ற ஒரு பெண்ணை உருவாக்கி அவளைச் சூரியனுக்கு மனைவியாக்கி விட்டுத் தவம் செய்யக் காட்டுக்குச் சென்றாள்.

**சூ**ரியன் சாயா தேவியுடன் கூடிச் சனியையும், மற்றொரு மனுவையும், தபதி என்ற பெண்ணையும் பெற்றாள். ஒரு நாள் யமன் கோபத்துடன் சாயாதேவியைக் காலால் உதைத்தான். அதனால் கோபங்கொண்ட சாயாதேவி அவனைச் சபித்தாள். அதனால் சூரியன் சாயாதேவியைக் கோபிக்க அவள் உண்மையைக் கூறிவிட்டாள். சூரியன் தனது யோக வலிமையால் சமிக்ஞை எங்கேயிருக்கிறாள் என்று அறிந்தான். அவள் ஒரு பெண் குதிரையின் வடிவில் வனத்தில் தவம் செய்து கொண்டிருப்பதைச் சூரியன் அறிந்து அவள் இருக்குமிடத்திற்கு ஓர் ஆண் குதிரை வடிவில் சென்று அவளுடன் கூடி அசுவினி தேவதைகள் இருவரையும், ரேவேந்தக் என்பவனையும் பெற்றான். பின் சமிக்ஞையைத் தனது இருப்பிடத்திற்கு அழைத்து வந்தான்.

**அ**தன் பின் விசுவகர்மா சூரிய மண்டலத்தைத் தனது சாணைச் சக்கரத்தால் தேய்த்து அவனது வெட்பத்தின் எட்டில் ஒரு பகுதியை அகற்றி விட்டான். சூரியனின் குறைந்த அப்பகுதியைக் கொண்டு விசுவகர்மா விஷ்ணுவுக்குச் சக்கரத்தையும், சிவனுக்குச் சூலத்தையும், குபேரனுக்கு சிபிகை என்ற ஆயுதத்தையும் செய்து கொடுத்தான்.

சூரியனுக்குச் சாயாதேவியிடம் பிறந்த மனுவைச் சாவாணி என்று அழைப்பர். எட்டாவது மனுவந்தம் சாவர்ணியினுடையதாகும். அவ்மனுவந்திரத்தில் சபதர், அமிதாபர், முக்கியர் என்ற தேவர்கள் உண்டாவார்கள். அவர்கள் கணத்திற்கு இருபத்தின்மராக இருப்பவர்கள் தீப்திமான், காலவர், சிராமர், இருபர், அசுவத்தாமாவியாசர், ருசியசிங்கர் ஆகியோர் சப்தரிசிகளாவர். பரிச் சக்கரவர்த்தி இந்திரனாவான். இனி ஒன்பதாவது மனு தக்சாவர்ணி என்பவராவார். அவர்களுக்கு அற்புதன் என்பவன் அதிபதியாவான். அவருக்கு ஆறு பிள்ளைகள். பிரமசாவர்ணி என்பவன் பத்தாவது மனுவாவான். சாந்தி என்பவன் இந்திரனாவான். பத்தாவது மனுவுக்கு புத்திரர்கள் பதின்மர். பதினொராவது மனு தர்மசாவக்னி என்பவர். விருசா என்பவன் இந்திரனாவான். ருத்திரசாவர்ணி என்பவர் பன்னிரண்டாவது மனுவாவார். ருதுதவா என்பவன் இந்திரனாவான். ரவுச்சியன் என்பவன் பதின்மூன்றாவது மனுவாவான். திவஸ்பதி என்பவன் இந்திரனாவான். பவுமன் என்பவன் பதின்னாலாவது மனுவாவான். கசி என்பவன் இந்திரனாவான். நான்கு யுகங்களின் முடிவில் வேதங்கள் யாவும் அழிந்து போகும். அப்போது சப்தரிசிகள் பூமிக்கு வந்து வேதங்களைப் புதுப்பிப்பார்கள். யுகங்தோறும் அந்தந்த மனுக்கள் தரும் சாத்திரத்தை இயற்றிவருவார்கள். தேவதைகள் மனுவந்தரம் முடியும் வரை அவிப்பாகங்களை உண்டு வருவார்கள். மனுவின் புத்திரர்களாலும் அவர்களின் வம்சத்தினராலும் பூமி காப்பாற்றப்பட்டு வரும்.

மனுவும் சப்த ரிஷிகளும் தேவர்களும், இந்திரனும் மனுவின் புதல்வர்களும் மகாவிஷ்ணுவின் கட்டளையை ஏற்று நிறைவேற்றுவார்கள். இவ்வாறு பதின்நான்கு மனுவந்தங்கள் கழியும் போது ஒரு கல்பகாலம் பூரணமாகும். அப்போது மகாவிஷ்ணு மூவுலகையும் உட்கொண்டு உலகம் யாவும் அழிந்தபின் மாகர்வை சலத்தில் ஆதிசேடன் மீது துயில் கொள்வான். அதன் பின் துயிலெழுந்து உலகைப் படைப்பான்.

இவ்வாறு மகாவிஷ்ணு ஒவ்வொரு ரூபமெடுத்து அந்தந்த ரூபங்களினால் உலகைப் படைத்துக் காத்துச் சங்கரித்து வருகிறான்'' என்றார் பராசர முனிவர்.

## 8 . சூரியனும் சூரிய வம்சமும்



முனிவர்கள சூதரை நோக்கி, ''பிரம்மரிஷியே, இனி எனக்குச் சூரியவம்சத்து அரசர்களின் வரலாற்றைக் கூறுங்கள்'' என்றான்.

''சூரிய தேவனுக்கு வைவஸ்வதமனு என்பவன் பிறந்தான். அவனுக்கு இஷ்வாகு, நாபாகன், திருஷ்டன், சரியாதி, நரிஷ்யந்தன், பிராம்சு, நாகோதீஷ்டன், கருஷன்,

பருசரத்ரன் என்ற ஒன்பது பிள்ளைகள் பிறந்தனர். இவர்களே ஒன்பது மனுக்களாவர். இஷ்வாகுவிற்கு நூறு பிள்ளைகள் பிறந்தனர். இவர்களுள் மூத்தவன் விகுசி, இரண்டாவது மகன் நாபாகன். நாபாகனுக்கு அம்பரீசன் என்பவன் பிறந்தான். அவன் மிகுந்த பலசாலியாவான். திருஷ்டனுக்கு தர்ஷ்டகன் என்பவன் பிறந்தான். இவன் பலவீனனாக இருந்தான். சரியாதிக்கு ஆனர்த்தனன் என்ற புதல்வனும், பேரழகு வாய்ந்த சுகன்னி என்ற புதல்வியும் பிறந்தனர். பேரழகு வாய்ந்த சுகன்னிக்கு குருடரான சவனர் என்னும் மகரிஷிக்கு கட்டிக் கொடுத்தார். பின் அஸ்வினி தேவதைகள் அவருக்குக் கண்பார்வையைக் கொடுத்தனர்.

**சு**கன்னியின் தந்தையான சரியாதி மன்னனுக்கு நாலாயிரம் மனைவிகள் இருந்தனர். அவர்களுக்குச் சுகன்னி ஒருத்தி தான் பெண் குழந்தை அதனால் எல்லோரும் அவள் மீது அளவில்லாத அன்பை வைத்திருந்தனர்.

**ச**ரியாதி மன்னனின் தலைநகருக்கு அருகே பெரியதொரு வனம் இருந்தது. அங்கிருந்த குளக்கரையில் பார்க்கவர் என்ற மா முனிவர் காற்றைக்கூடச் சுவாசிக்காது தவம் செய்தார். அவரைப் புற்று மூடி இருந்தது. ஒரு நாள் சரியாதி மன்னன் தனது மனைவியோடும், மகளோடும், படைவீரர்களோடும் அந்த வனத்திற்கு வந்தான். சுகன்னி தனது தோழிகளோடு அப்புற்றின் அருகே வந்து அதை விசித்திரமாகப் பார்த்தாள். அந்தப் புற்றில் இருந்த பொந்தில் இருந்து மின்மினிப் பூச்சியைப் போல ஒளி மின்னியது. இது என்னவாக இருக்கும் என்று நினைத்த சுகன்னி ஒரு முள்ளை எடுத்து அதனால் குத்திப் பார்த்தாள். அது முனிவரின் கண். முனிவர் தவம் கலைந்து எழுந்தபோது ஒரு பெண் தன்னருகே நிற்பதைக் கண்டு, ‘‘இவ்வாறு ஏன் செய்தாய்? தூரச் செல்’’ என்றார். அது சுகன்னிக்கு விளங்காததால் மேலும் அவரது கண்ணை முள்ளால் குத்தினாள். அதனால் முனிவருக்குப் பெரும் வேதனை ஏற்பட்டது, கோபமும் வந்தது.

**அ**ப்போது அரசனுக்கும், மனைவியர்க்கும் வந்த படைகளுக்கும் மலமும் சலமும் போகாது தடைப்பட்டது. அதனால் துன்பப்பட்ட அரசன் அனைவரையும் அழைத்து, ‘‘யார் யார் என்ன பாவம் செய்தீர்கள் சொல்லுங்கள்’’ என்றான், ‘‘அரசே தடாகத்தின் ஒருகரையில் பார்க்கவ முனிவர் தவம் செய்கிறார். அவருக்கு யாரோ துன்பம் செய்து விட்டனர்’’ என்று சிலர் கூறினர்.

‘‘**மு**னிவர்களே, இனி சூரியன் முதலான கிரகங்களின் நிலையைச் சொல்கிறேன். சூரியனது தேர் பதினாயிரம் யோசனை விசாலமுடையது. அந்தத் தேருக்கு காயத்ரி, பிருகதி, உஷ்ணிக், ஜகதீ, திருஷ்ருப், அனுஷ்ருப், பஷ்தி என்ற சந்தங்கள் ஏழுமே குதிரைகளாகப் பூட்டப்பட்டுள்ளன. சூரியன் தென்திசையை அடையும் போது ஜோதிச் சக்கரத்தின் கடைசியை அடைந்தவனாகி எறிந்த அம்பைப் போல் விரைவாக ஓடுவான். சூரிய பகவான் தான் இரவு பகல் ஏற்படக் காரணமானவன். யோகிகளுக்கு அவன் பற்றுக்கள் அகலக் காரணமாகவும்

இருக்கிறான். சூரியனின் வெப்பம் எங்கும் ஒரே அளவினதாகவே இருக்கும். அவன் திக்குக்கள் எதிலும் எவர்களுக்கு எங்கே காணப்படுகிறானோ, அங்கே உதயம் என்றும், அதற்கு நேர் எதிரே அஸ்தமனம் என்றும் கொள்ளப்படும். சூரியன் உதயமானது முதல் கிரணங்கள் வளர்ந்து நண்பகலுக்கு மேல் கிரணங்கள் சுருங்கப் பெற்று அஸ்தமனமாகிறான்.

**இ**ந்த உதய அஸ்தமனங்களைக் கொண்டு தான் கிழக்கு, மேற்கு என்று திசைகள் கணிக்கப்பட்டன. இதைக் கொண்டு வலது புறம் தென் திசை என்றும், இடது புறம் வடதிசை என்றும் கணிக்கப்பட்டது. மகாமேரு மலையில் இருக்கின்ற பிரமசபைக்குச் செல்லும் போது சூரிய கிரணங்கள் ஒளிமழுங்குவதால் அச்சபையைச் சூரியன் காய்வதில்லை. இது போன்ற உதய அஸ்தமனங்களால் கிழக்கு முதலிய திசைகள் ஏற்பட்டிருப்பதால், மேரு மலையானது சகல காலங்களிலும் வடக்காகவே ஆகின்றது. அதனால் பிரமசபையில் சூரிய ஒளி படாமையால் பகலும் இரவாகவே இருக்கும்.

**ஜோ**திச் சக்கரத்தில் திரிகின்ற சூரியன் தென்திசையிலிருந்து நீங்கி, உத்தராணயத்தின் முதலாவது மகரத்தில் வரும் போது, முன் வந்த பகல் இரவுகளை விட வேறுபாடுகள் உடையவனாக பகலிரவை உண்டாக்குவான். கும்பம் மீனம் என்ற இரு ராசிகளையும் கடந்து மேடராசியில் பிரவேசிக்கும் போது பகலிரவுகள் சரியாக வரும். பின் அங்கிருந்து சஞ்சரிக்கும் போது பகல் அதிகரிக்க இரவு குறையும். இவ்வாறு மிதுனம் வரை சூரியன் சென்று கர்க்கடக ராசிக்கு வரும் போது தட்சணாயனம் உண்டாகும். தட்சணாயத்தில் சூரியன் விரைவாகச் சஞ்சரித்துக் கொண்டு பன்னிரண்டு முகூர்த்த காலமான பகலினால் பதின்மூன்றரை நட்சத்திரங்களையும், பதினெட்டு முகூர்த்த காலமான இரவினாலே ஏனைய பதின்மூன்றரை நட்சத்திரங்களையும் கடக்கின்றான்.

**ம**றுபடியும் உத்தராணயத்திற்கு வரும்போது, மந்தாமாகச் சஞ்சரித்துக் கொண்டு, முன்னைய இரவு பகல்களை உண்டாக்குகிறான். அதனால் உத்தராணயத்தில் பகலின் வளர்ச்சி பதினெட்டு முகூர்த்த அளவாகவும், இரவில் பன்னிரண்டு முகூர்த்த அளவாகவும் இருக்கும்.

**இ**ரவை உசை என்றும், பகலை வியுஷ்டி என்றும் சொல்லப்படும். இந்த உசை, வியுஷ்டியின் நடுவில் இருப்பது சந்தி என்று சொல்லப்படும். இந்தச் சந்தி ஏற்படும் போது மந்தேகர் என்ற அரக்கர் சூரியனைப் புசிக்க முயல்கின்றனர். அவர்களுக்கு நித்திய மரணமும் உடல் அழியாது இருக்கும் என்று பிரமதேவர் சாபமிட்டிருக்கிறார். அவ் அசுரர்கள் சூரியனை உண்ண முயலும் போது சூரியனுக்கும் அசுரர்களுக்கும் இடையே கடும் யுத்தம் நடைபெறும் அப்போது பிராமணர்கள் மந்திரம் ஓதி நீரைத் தெளிப்பர். அந்த நீர் ஆயுதமாகச் செயற்பட்டு அசுரர்களை அழிக்கும்.

**அ**தன் பின் பிராமணர்கள் அக்கினி கோத்திரத்துடன் மந்திரம் ஓதச் சூரியன் மீண்டும் பிரகாசிப்பான். அந்த மந்திர வடிவானது விஷ்ணுவின் உருவில் இருப்பதால் தான் அசுரர்கள் அழிந்து போகின்றனர். விஷ்ணுவின் அருளால் சூரியன் பிரகாசிப்பதால் அவ் அசுரர்கள் அழிகின்றனர். அதனால் யாரும் சந்தியாவந்தணம் செய்யாது விடலாகாது. விட்டுவிட்டால் சூரியனைக் கொன்ற பாவத்தை அவன் அடைவான்.

**ப**தினைந்து நிமிடங்கள் ஒரு காஷ்டை, முப்பது காஷ்டைகள் ஒரு கலை, முப்பது கலைகள் ஒரு முகூர்த்தம், அவை முப்பது சேர்ந்தால் ஒரு நாளாகும். இதில் ஒரு முகூர்த்த காலமே சந்தியாவந்தனத்துக்கு உரிய காலமாகும். உதயம் தொடங்கிச் சூரியன் மூன்று முகூர்த்தம் செல்லும் அளவும் பிராதக் காலம். அது பகலில் ஐந்தில் ஒரு பங்காகும்.

**சூ**ரியன் கடகராசியில் இருக்கும் போது தட்சிணாயணமும் மகரராசியில் இருக்கும் உத்தராயணமும் ஆகும். சுவேத மலைக்கு வடக்கே சிருங்கவான் என்ற மலை இருக்கிறது. அதற்கு மூன்று முடிகள் உண்டு. ஒரு முடி தெற்கேயும், மற்றொன்று வடக்கிலும், இன்னொன்று மத்தியிலும் உண்டு தெற்கு முடியில் சூரியன் சஞ்சரிக்கும் போது தட்சணாயணமும், வடக்கு முடியில் சஞ்சரிக்கும் போது உத்தராயணமும், நடுவே சஞ்சரிக்கும் போது விஷூவமும் வருகிறது. கிருத்திகையின் முதல் பாகத்தில் சூரியன் இருக்கும் போது சந்திரன் விசாக நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் இருப்பான். சூரியன் விசாக நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் போது சந்திரன் கிருத்திகையின் முதலாம் பாகத்தில் இருப்பான். இந்தக் காலம் தான் மகாவிசுவம் என்ற புண்ணிய காலமாகும். அப்போது பிதுர்களின் நன்மைக்காகப் பிராமணர்களுக்குத் தானம் கொடுக்க வேண்டும்.

**மு**ன்பு லோகா லோகம் என்ற மலையைப் பற்றிச் சொன்னேன். அதன் நாற்புறங்களிலும் கர்த்தமப் பிரஜாதிபதியின் பிள்ளைகள் இருக்கிறார்கள். அகத்திய வீதிக்கு வடக்காகவும் அஜ வீதிக்குத் தெற்றாகவும் வைகவாகன வழிக்கு வெளியில் இருக்கின்ற மார்க்கம், பிதுர்யானமாகும். அதுதான் பிதுர்லோகத்திற்குச் செல்லும் வழியாகும். அங்கே சில முனிவர்கள் தவம் செய்து கொண்டிருப்பர். அங்கு வாழும் முனிவர்கள் பிரமாவின் நாள் வரை அவர்களும் உயிரோடு இருப்பர். அந்தக் காலத்தில் பூமி முதல் துருவன் இருக்கும் இடம் வரை அழிந்து விடும். சப்தரிஷிகளுக்கு மேலே வட புறத்தில் துருவ நட்சத்திரம் உள்ள இடம் மிகவும் பிரகாசமான ஆகாயமாகும்.

**அ**ந்தஸ்தானம் விராட் புரிசனுக்கு இருதய நாடிஸ்தானமாகும். அங்கே மகாவிஷ்ணு எழுந்தருளியிருக்கிறார். அதனால் அதற்கு விஷ்ணுபதம் என்ற பெயர் ஏற்பட்டது. அந்த ஸ்தானம் யோகிகளுக்கு பாவ புண்ணியங்களை ஒழிக்குமிடமாகும். அந்த உத்தமமான இடத்திற்கு யோகிகள் சென்று ஆனந்தத்தோடு இருப்பர். அவர்கள் அவ்வாறு ஆனந்தத்தோடு கூடியிருக்கும் இடம், விஷ்ணுவுடைய பரமபதமாகும். சராசரங்கள் யாவும் குறுக்காவும்

நெடுக்காகவும் கோர்க்கப்பட்டு எங்கே இருக்கின்றதோ, அந்த இடம் விஷ்ணுவின் பரமபதமாகும். எது ஆகாயத்தில் சூரியனைப் போல ஞானிகளுக்கு ஞானத்தால் பிரத்தியட்சமாக விளங்குமோ, அதுவே விஷ்ணுவின் பரமபதமாகும். அங்கே சென்றோர் மோட்சத்தை அடைவர். அதை மோட்சத்தானமான பரமபதம் என்று சொல்வர்.

**து**ருவன் அங்கே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறான். அந்தத் துருவனிடத்துத்தான் சகல கிரக நட்சத்திரங்களும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அவற்றில் மேகங்கள் நரட்டப்பட்டுள்ளன. அதில் மழை உண்டாக்கப்பட்டுள்ளது. மழை சகல சீவராசிகளுக்கும் போசனையாக இருக்கிறது. இவ்விதமான இந்த விஷ்ணு பதம் என்கின்ற பரிசுத்தமான மூன்றாவது ஸ்தானமானது மூன்று உலகங்களுக்கும் ஆதாரமாகவும் விருத்திக்கான ஏதுவாகவும் இருக்கிறது.

**மை**த்ரேயரே, விஷ்ணு பதத்தில் இருந்து தான் சகல பாவங்களையும் போக்க வல்ல கங்கை நதி உண்டாகித் தேவ மகளிரின் சரீரத்தில் பூசப்பட்ட குங்குமப் பூச்சினால் பொன் நிறமுடையதாக விளங்குகிறது. மகா விஷ்ணுவின் இடது திருவடியின் கட்டை விரல் நகத்தில் இருந்து பெருகிவரும் அந்தக் கங்கை நதியைத் துருவன் இரவும் பகலும் தனது தலையில் தாங்குகிறான். அதன் பின் சப்தரிஷிகள் பிராணாயாமம் செய்து, நீராடுகிறார்கள்.

**க**ங்கை நதியின் நீரால் சந்திர மண்டலம் நன்றாக நனைக்கப்பட்டு இரவில் சக்தி மிகுந்து பாய்கிறது. அதன் பின் அது மேருமலையில் விழுந்து சீதா, அழகநந்தா, சட்சு, பத்திரை என்ற பெயர்களைப் பெற்று நான்கு திசையும் பாய்ந்து உலகைச் சுத்தப்படுத்துகிறது. இந்நான்கு நதிகளில் ஒன்றான அழகநத்தை என்ற கங்கையைச் சிவன் தனது சடா முடியில் தரித்துள்ளார். அதன் பின் அக் கங்கை பூமிக்குப் பாய்ந்து சென்று சாகர குமாரர்களின் எலும்புகளை நனைத்து, அப்பாவிகளைச் சொர்க்கத்திற்கு அனுப்பி வைத்தது. இக் கங்கையில் நீராடினால் சகல பாவங்களும் நீங்கிப் புண்ணியம் உண்டாகும். புத்திரர்கள் அந்நீரால் பிதுர்களுக்குத் தர்ப்பணம் ஒரு முறை செய்தால், அந்தப் பிதுர்கள் நூறு ஆண்டுகள் திருப்தியடைவர்.

**க**ங்கை நதிக்கரையில் பிராமணரும் சத்திரியரும் மகா விஷ்ணுவை யாகங்களால் ஆராதித்து மிகுந்த செல்வத்தை அடைகின்றனர். யோகிகள் அக் கங்கை நீரில் நீராடிப் பாவங்களைப் போக்குவர்.

**அ**ந்தக் கங்கை நதியானது தன்னில் நீராடுபவர்களையும், உண்பவர்களையும், துதிப்பவர்களுக்கும், காண்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் உள்ள பாவங்களை நீக்கி வைக்கும். நெடுந்தூரத்தில் வசிப்போர், “கங்கை, கங்கை” என்று நமஸ்கரித்தால் மூன்று பிறவிகளில் அவர்கள் செய்த பாவமனைத்தும் அற்றுப்போய்விடும். இவ்வாறு மூன்று

உலகங்களையும் தூய்மைப்படுத்தும் கங்கை நதியானது விஷ்ணுவின் பாதக்கமலங்களில் இருந்தே உற்பத்தியாகிறது'' என்றார் சூதமுனிவர்.

## ௯. சிம்சுமார சக்கரம்



''**ம**காவிஷ்ணுவின் சிம்சுமாரம் என்ற நட்சத்திரக் கூட்டத்தின் வால் பகுதியில் துருவன் இருக்கிறான். அவன் அங்கிருந்து சுற்றிக் கொண்டு சந்திர சூரியர்கள் உட்பட்ட அனைத்துக் கிரகங்களையும் சுற்றித் திருப்புகிறான். அவைகள் சக்கரத்தைப் போல அவனைச் சுற்றிச் சுழல்கின்றன. சந்திர சூரியர்களும், ஏனைய கிரகங்களும், நட்சத்திரங்களும் காற்றின் வடிவமான கயிற்றினால் கட்டப்பட்டு, துருவனில் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றிலெல்லாம் நாராயணன் எழுந்தருளியிருக்கிறான். துருவன் அந்த உலக நாதனான மகா விஷ்ணுவை ஆராதித்து நட்சத்திரமயமான அந்த சிம்சுமாரத்தின் வாலினிடத்தில் இருக்கை பெற்றான்.

**அ**ந்த சிம்சுமாரத்திற்கு ஆதாரம் ஸ்ரீயப்பதியாகும். அந்தச் சிம்சுமாரம் துருவனுக்கு ஆதாரம். அந்தத் துருவன் சூரியனுக்கு ஆதாரம். அது போலச் சூரியன் தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் ஆதாரம். அது எவ்வாறென்றால் சூரியனின் அருளால் மழை பொழிய, உயிர்களுக்கான உணவு வகைகள் உண்டாகின்றன. உணவாலே தான் சகலதும் உண்டாகிறது. சூரியன் தனது உக்கிரமான கிரணங்களால் நீரை எடுத்து, சந்திரனிடம் ஒப்படைக்க, அந்தச் சந்திரன் மேகத்திடம் விட அந்த மேகங்களிலிருந்து மழை நீரானது உலகில் பொழிகிறது.

**ஆ**றுகள், குளங்கள், கடல்கள் ஆகியவற்றில் உள்ள நீரைச் சூரியன் கவர்ந்து மழையாகப் பொழிகிறான். ஆகாய கங்கையின் நீரைச் சூரியன் மேகங்களுக்குக் கொடுக்காது மழையாகப் பொழிவதும் உண்டு. அந்த நீர் மனிதனில் பட்டால் மனிதர் செய்த பாவங்கள் தீரும். மைத்ரேயரே, சூரியன் காணப்படும் போது எந்த நீர் மேகமின்றி ஆகாயத்திலிருந்து விழுகிறதோ அது தான் ஆகாய கங்கையின் நீராகும். ரோகிணி முதலிய இரட்டைப்பட்ட நட்சத்திரங்களில் சூரியன் உதித்துக் கொண்டேயிருக்கையில் வானத்திலிருந்து மேகமின்றி பொழியும் நீரானது சூரியன் பெய்யும் ஆகாய கங்கை நீராகக் கருதப்படும்.

**எ**ந்தத் தண்ணீராவது மேகங்களால் ஏற்கப்படுகிறதோ, அது பிராணிகளின் அமுதம் என்று சொல்லப்படும். அந் நீரைக் கொண்டு, சூத்திர நோக்கமுடைய மனிதர்கள் விதிப்படி பல வகைப்பட்ட யக்ஞுங்கயைச் செய்து, தேவதைகளைத் திருப்பிப்படுத்துகின்றனர்.

**அ**தனால் இந்த உலகம் மழையினாலே காக்கப்படுகிறது. அது எப்படியென்றால் உணவை உற்பத்தி செய்வது மழை. அந்த மழையை உண்டாக்குபவன் சூரியன். அந்தச் சூரியனுக்கு ஆதாரமாக இருப்பவன் துருவன். அந்தத் துருவனுக்கு ஆதாரமாக இருப்பது சிம்சுமார சக்கரம். அந்தச் சக்கரத்திற்கு ஆதாரமானவன் நாராயணன். நாராயணன் அந்தச் சக்கரத்தின் மத்தியில் சகல பிராணிகளையும் தாங்கிக் கொண்டிருக்கிறான்.

## 10. சூரியனின் ரதம்



**மு**னிவர்களே, சூரியன் சஞ்சாரம் செய்யும் தட்சண, உத்தராயண எல்லைகளின் நடுவே கிராந்திவிருத்தங்கள் நூற்றி எண்பத்து மூன்று. அம் மண்டலங்களில் தான் சூரியன் உத்தராயணத்தில் ஏறுவதும், தட்சணாயணத்தில் இறங்குவதுமான முன்நூற்று அறுபத்து நான்கு கதிகளினால் ஒரு வருடத்தைக் கழிக்கிறான். சூரியனது தேரான சூரியர்களாலும், ரிஷிகளாலும், கந்தர்வராலும், அப்ஸ்சரசுகளாலும், சர்ப்பங்களினாலும் ஏற்றப்பட்டிருக்கும் சூரியனது ரதத்தில் சித்திரை மாதத்தில் தாதா என்ற சூரியனும், கிரதஸ்தலை என்ற அப்ஸ்சரசும், புலஸ்தியர் என்ற முனிவரும், வாசுகி என்ற சர்ப்பமும், ரதபிருத்து இயக்கனும், கேதி என்ற அரக்கனும், தும்புரி என்ற கந்தர்வனும் வசிப்பார்கள். ஆனி மாதத்தில் மித்திரன் என்ற சூரியனும், அத்திரி என்ற முனிவரும், தக்சன் என்ற சர்ப்பமும், பவுருஷேயன் என்ற அரக்கனும், ஹாஹா என்ற கந்தர்வனும், ரதாய்வனன் என்ற யக்சனும் இருப்பார்கள்.

**ஆ**டி மாதத்தில் வருணன் என்ற சூரியனும், வசிட்டர் என்ற முனிவரும், சகஜநியை என்ற அப்ஸ்சரசும், கூ கூ என்ற கந்தர்வனும், நாகம் என்ற சர்ப்பமும், ரதன் என்ற ராட்சதனும், சித்திரன் என்னும் யசனும் வசிப்பார்கள். ஆவணி மாதத்தில் இந்திரன் என்ற சூரியனும், விசுவாவ என்ற கந்தர்வனும், சுரோதா என்ற யசனும், ஏலா புத்திரன் என்ற சர்ப்பமும், அங்கிரசு என்ற ரிஷியும், பிரமலோசை என்ற அப்ஸ்சரசும், சர்ப்பி என்ற ராட்சதனும் இருப்பார்கள்.

**பு**ரட்டாதி மாதத்தில் விவசுவான் என்ற சூரியனும், பிருகு என்ற முனிவரும், அனுமலோசா என்ற அப்ஸ்சரசும், சங்கபாலன் என்ற சர்ப்பமும், வியாக்கிரன் என்ற யசனும் இருப்பார்கள். ஐப்பசியில் பூஷா என்ற சூரியனும், வகருகி என்ற கந்தர்வனும், வாதன் என்ற ராட்சசனும், தனஞ்சயன் என்ற சர்ப்பமும், கௌதமர் என்ற முனிவரும் இருப்பார்கள். கார்த்திகையில் பர்ச்சனியன் என்ற சூரியனும், விசுவாசு என்ற கந்தர்வனும், பரத்துவாசர் என்ற முனிவரும், ஐராவதம் என்ற சர்ப்பமும், விசுவாகி என்ற அப்ஸ்சரசும், சேனஜித்து என்ற யசனும், ஆப என்ற இராட்சதனும் வசிப்பார்கள். மார்கழியில் அம்சன் என்ற சூரியனும், காசிபர் என்ற முனிவரும், தர்சயன் என்ற யசனும், மகாபத்மன் என்ற சர்ப்பமும், வித்தியுத்து என்ற இராட்சதனும், சித்திரசேனன் என்ற கந்தர்வனும் இருப்பார்கள். தைமாதத்தில் பகன் என்ற சூரியனும், கிருது என்ற முனிவனும், ஊர்ணாயு என்ற கந்தர்வனும், ஸ்பூர்ஜன் என்ற அரக்கனும், கார்கோடன் என்ற சர்ப்பமும், அரிஷ்நேமி என்ற யசனும், பூர்வசித்தி என்ற தேவ மங்கையும் வசிப்பார்கள். மாசிமாதத்தில் துவட்டா என்ற சூரியனும், ஜமதக்கனி என்ற முனிவரும், திலோத்தமை என்ற தேவதாசியும், கம்பளன் என்ற சர்ப்பமும், பிரம்மா பேதன் என்ற அரக்கனும், இருதசித்து என்ற யசனும், திருதராட்டிணன் என்ற கந்தர்வனும் வசிப்பார்கள். பங்குனியில் விஷ்ணு என்ற சூரியனும், விசுவாமித்திரர் என்ற முனிவரும், ரம்பை என்ற என்ற தேவ மங்கையும், சூரியவர்ச்சசு என்னும் கந்தர்வனும், சத்தியசித்து என்னும் யசனும், அசுவதரன் என்ற சர்ப்பமும், யக்ஞாபேதன் என்ற அரக்கனும் வாசம் செய்வர்.

"**ஒ**வ்வொரு மாதமும் அந்தந்த மாதத்துக்குரியவர்கள் ஸ்ரீ விஷ்ணுவின் சக்தியால் வியாபிக்கப்பட்டு சூரிய ரதத்தில் ஏறி இருந்து உலகை ஒளிரச் செய்கின்றனர். சூரிய மண்டலத்தில் பிரகாசிக்கும் சூரியனுக்கு ஒளி விருத்தியாகும்படி ரிஷிகள் துதிக்கிறார்கள், கந்தர்வர்கள் கானம் இசைக்கின்றனர், தேவமங்கையர்கள் நடனமாடுகின்றனர், அரக்கர்கள் சூரியனின் பின் செல்கிறார்கள், சர்ப்பங்கள் சுமக்கின்றன, இயக்கர்கள் கடிவாளத்தைத் தூக்கிப் பிடிக்கின்றனர், முனிவர்கள் சூரியனைச் சூழ்ந்து உபாசனை செய்கின்றனர், இவ்வாறு அவர்கள் தமது பணியைச் சிறப்புடன் செய்து வருகின்றனர்.

## II. சூரியனின் சிறப்புச் செயல்கள்



"**மா**முனிவரே, சூரியரதத்தில் இருக்கும் அனைவரது தொழில்களையும் கூறினீர்கள். ஆனால் சூரியனது தொழிலைப்பற்றிக் கூறவில்லை. அதனால் சூரியனது சிறப்பையும் தொழிலையும் கூறியருளுங்கள்" என்றார் ஒரு முனிவர்.

"**இ**ருக்கு, யசுர், சாமம் என்ற மூன்று வேதங்களின் வடிவாக

இருக்கும் மகா விஷ்ணுவின் சக்தியே சூரிய ரூப இருந்து காய்ச்சுவதுமல்லாமல் உலகின் பாவங்களைப் போக்கிக் கொண்டிருக்கிறது. அதனால் தான் ஆதித்தியன் முதலிய கணங்கள் ஏழிலும் ஆதித்தனே முக்கியமானவன். அந்தந்த மாதங்களுக்குரிய சூரியனது சக்தியாக விஷ்ணுவின் பிரபாகமே விளங்குகிறது. விடியற்காலையில் இரிக்குகளும், மதியவேளையில் யசுசுகளும், மாலைவேளையில் சாமங்களும் சூரியனின் சரீரமாகிச் சூரியனுக்குள்ளே விளங்குகின்ற மகா விஷ்ணுவைத் துதிக்கின்றன. அவ்வேளையில் ரிக், யசுர், சாம வேதங்கள் மகா விஷ்ணுவுக்குச் சரீரமாக இருக்கின்றன. இந்த விஷ்ணுவின் சக்தியானது பிரமாதிகளுக்குள்ளும் பிரவேசித்து அவற்றின் செயல்களைச் செய்கின்றன. ஆரம்பத்தில் விஷ்ணுவின் சக்தி இருக்கு வேதமான பிரமாவாகவும், ஸ்திதியில் யசுர் வேதமான விஷ்ணுவாகவும், முடிவில் சாப வேதமான ருத்திரனாகவும் விளங்கும் மகா விஷ்ணுவின் சக்தியே உதவி செய்து பிரகாசிக்கிறது. இவ்வாறு வேதத்திரய ரூபமான மகா விஷ்ணுவின் சுக்த சாத்வீக சக்தியானது சூரியனில் பிரவேசித்திருப்பதால், சூரியன் சிறப்புடன் பிரகாசித்துக் கொண்டு உலகில் உள்ள தீமைகளையெல்லாம் அழிக்கிறான்.

**அ**த்தகைய சூரியனின் பிதுர்கள், தேவதைகள், மனிதர்கள் முதலியோரை மகிழ்வித்து இரவு பகலை உண்டாக்கிக் கொண்டிருக்கிறான்'' என்றார் பராசர முனிவர்.

## 12. வைவஸ்வத மனுவின் மக்கள்



**வை**வஸ்வத மனுவுக்கு நெடுங்காலமாகியும் புத்திரர்கள் பிறக்காமையால் பெரியதொரு யாகம் செய்தான். அதன் பயனாக அவனுக்கு இஷ்வாகு, நிருகன், திருஷ்டன், சர்யாதி, நரிஷ்யந்தன், நாபாசன், அரிஷ்டன், கரூஷன், விருவுத்திரன் ஆகிய ஒன்பது புதல்வர்கள் தோன்றினர். அத்துடன் மனுமித்திரன் வருணன் என்ற இரு கடவுள்களை வேண்டி இள என்னும் பெண்ணைப் பெற்றான்.

**இ**ள, சந்திரனின் மகனான புதனை மணந்து புரூரவனைப் பெற்றான். அதன் பின் இள என்பவள் சுத்யும்னன் என்ற ஆணாக மாறிட, அவனுக்கு உத்கயன், சுயா, வினதஷ்லா ஆகிய புத்திரர்கள் பிறந்தனர். உத்கவன் ஒரிஸ்சவை ஆண்டான். காயா கயாவையும், வினதஷ்வர மேற்குப் பகுதியையும் ஆண்டனர்.

**சு**த்யும்னன், இளை என்ற பெண்ணாக இருந்தமையால் அவனால் ஆட்சி செய்ய முடியவில்லை. அதனால் அவனது ஆட்சியை புரூரவன் பெறான். வைவசுவத மனு இறந்த

பின்பு அவனது பத்துப் புத்திரர்களும் நாட்டைப் பகிந்து ஆண்டனர். இஷ்வாகு நாட்டின் மையப் பகுதியை ஆண்டு வந்தான்.

**மே**லும் தான் பலம் பெற இஷ்வாகு ஒரு பெரிய யாகம் சொல்ல விரும்பி யாகத்திற்குத் தேவையான இறைச்சி கொண்டு வருவதற்காகக் காட்டுக்கு அவனது மகனான விருசியை அனுப்பினான். வேட்டையாடிக் களைத்துப்போன விருசிக்குப் பசித்தது. அதனால் யாகத்திற்கென சேகரிக்கப்பட்ட இறைச்சியின் சிறு பகுதியை அவன் உண்டு விட்டான். ஞான திருஷ்டியால் இதை உணர்ந்த வசிட்ட முனிவர் மிக்க கோபங் கொண்டு இஷ்வாகு மன்னனிடம் சென்று யாகத்திற்கெனச் சேகரிக்கப்பட்ட இறைச்சியை உண்ட நாடு கடத்துமாறு சொன்னார். அன்று அவன் உண்டது ஒரு முயலின் இறைச்சியையே அதனால் அவனுக்கு 'சசதன்' என்ற பெயர் ஏற்பட்டது.

**இ**ஷ்வாகு மன்னன் கிடந்த பின்பு நாடு கடத்தப்பட்ட விகுசி சந்து நாட்டின் அரசரிமையைப் பெற்று நீதியாக நாட்டை ஆண்டு வந்தான். அந்த நாடு தான் அயோத்தியாகும்.

## 8. குபலஷ்வன்



**வி**குசியின் மகன் காகுஷ்தன் இவர்களின் வம்சத்தில் பிறந்த விரிகதஷ்யனின் மகன் குபலஷ்வன். குபலஷ்வனின் தந்தையான விரிகதஷ்யன் தனது மகனுக்கு முடிசூட்டுவதற்கான ஏற்பாடுகளை வெகு ஆடம்பரமாகச் செய்து கொண்டிருந்தபோது அரண்மனைக்கு வந்த உதங்க முனிவர் முடிசூட்டுவதைத் தவிர்க்குமாறு கூறி, அதற்கான காரணத்தையும் சொன்னார்.

"**ம**ன்னா, நமது ஊருக்கு வெகு தொலைவில் உள்ள கடற்கரையில் துந்து என்றொரு கொடிய அரக்கன் வசிக்கிறான். அவனுக்குப் பயந்து மக்கள் எல்லோரும் தமது பொருட்களையும், கால்நடைகளையும் எடுத்துக் கொண்டு வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டனர். அவனது மூச்சுக்காற்றால் கடற்கரையெங்கும் மணல் மலைபோலக் குவிகிறது. பின் அதுவும் அவனது மூச்சுக் காற்றால் இடம்மாறுகிறது. அவனது கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர்கள் பலமுறை அவனுடன் போர் தொடுத்தபோதும் அவனை வெல்ல முடியவில்லை. அவனை வெல்ல முடியாததென்பதால் அவனோடு போர் செய்ய யாரும் துணிந்து முன் வருகிறார்கள் இல்லை. நான் பல வருடகாலம் தவம் செய்து பெருமானிடம் பெற்ற தவ வலிமையை உனக்குத் தருகிறேன். நீ அவனைப் போருக்கழைத்து வென்ற பின் மகனுக்கு முடிசூட்டுவாயாக" என்றார்.

**அ**ரசனால் முனிவருக்குப் பதில் கூற முடியவில்லை. பலம் மிகுந்த பல அரசர்கள் பெருஞ்சேனையுடன் சென்று போரிட்டபோதும் அவர்களால் அவனை வெல்ல முடியவில்லை. அப்படியிருக்க நான் எவ்வாறு அவனுடன் போர் செய்வது என்று நினைத்துப் பயந்த விரிகதஷ்யன், "முனிவரே, எனது மகனான குபலஷ்வன் பெரும் வீரன். அவனுக்குத் தங்கள் தவ வலிமையைக் கொடுங்கள். அவன் அவ்வவரக்கனைக் கொல்வான்" என்று கூறிவிட்டு காட்டுக்குத் தவம் செய்யச் சென்றுவிட்டான்.

**மு**னிவர் குபலஷ்வனிடம் வந்து அவனது தந்தை சொன்னவற்றைச் சொன்னபோது அவன் மிக்க மகிழ்வுடன் உதங்க முனிவரை வணங்கி, "முனிபுங்கவரே, தங்களது தவ வலிமையைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். துந்து என்ற அரக்கன் மிகவும் கொடியவன். அவன் மக்களை வருத்துவதில் இன்பங் காண்பவன். நான் அவனது செயல்களால் கோபங் கொள்ளும் போதெல்லாம் எனது தந்தை, "மகனே, அவன் கொடிய அரக்கன். அவன் மூச்சுவிட்டனேயானால், நீயும் உனது படைவீரர்களும் கிளம்பும் புழுதிக்குள் அகப்பட்டு விடுவீர்கள். அதனால் பொறுமையாக இரு" என்று சொல்வார். அதனால் நான் அவனுடன் போர்தொடுக்க விரும்பவில்லை. இப்போது தவவலிமைமிக்க தாங்கள் தங்களது தவப் பலத்தை எனக்குத் தருவதாகச் சொல்லியுள்ளீர்கள். தங்களது தவப் பலத்தின் முன் ஆயிரம் துந்து வந்தாலும் தோற்றுவிடுவார்கள்" என்று வணங்கினான்.


**உ**தங்க முனிவர் மிக்க மகிழ்வடைந்தார். அவர் துந்துவின் கொடுமைகளால் மக்கள் படும் துன்பத்தைப் போக்க எண்ணிப் பல அரசர்களிடம் சென்றபோது அவர்கள் சாட்டுப்போக்குகள் சொல்லிச் சமாளித்து விட்டனர். குபலஷ்வன் துணிவுடன் சம்மதித்ததால் உதங்க முனிவர் தனது கமண்டலத்தில் இருந்த நீரைக் கையில் எடுத்து அவனது தலையில் தெளித்துவிட்டு மகாவிஷ்ணுவை நினைத்துக் கொண்டு தனது தவத்தின் பயன் முழுவதையும் அவனுக்களித்தார்.

**சி**ல நாட்களின் பின் குபலஷ்வன் தனது நூறு பத்திரர்களையும், பெரும் படைகளையும் உதங்க முனிவரையும் அழைத்துக் கொண்டு கடற்கரைக்குச் சென்றான். பெரும் படையுடன் குபலஷ்மன் வருவதைக் கண்ட துந்து பெரிதாகச் சிரித்தான். தான் மூச்சுவிட்டாலே எதிரில் வரும் படைகள் அனைத்தையும் மணல் பறந்து சென்று மூடிவிடும். அப்படியிருக்க இவன் வருகிறானா…? என்று நினைத்து பலமாகக் காற்றை உள்ளே இழுத்து வெளியே விட முயன்றான். காற்று உள்ளே செல்லவில்லை. அதனால் அவனால் மூச்சை வெளியே விட முடியவில்லை. அப்போது குபலஷ்மன் துந்துவோடு மற்போர் செய்து அவனைக் கொன்றான்.

**து**ந்துவின் மூன்று புதல்வர்களான திரிதஷ்வன், சந்திரஷ்வன், கபிலஷ்வன் ஆகியோர் குபலஷ்வனிடம் சரணடைந்ததால், குபலஷ்வன் அவர்களைக் கொல்லவில்லை. கொடிய அரக்கனாக துந்துவைக் கொன்றமையால், குலபஷ்வனுக்கு துந்து மாறன் என்ற பெயர்

ஏற்பட்டது. உதங்க முனிவரின் அருளால் இறந்த மக்களும், படை வீரர்களும் மோட்சமடைந்தனர்.

## 9. திரிசங்கு



**தி**ரிதஷ்வனுக்குப் பின்பு ஆண்ட திரியருனி என்ற மன்னன் நீதிநெறி தவறாது நாட்டை ஆண்டு வந்தான். அவன் தர்மவானாக இருந்தமையால் நாட்டு மக்கள் எந்தவிதமான குறைகளுமின்றி மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். மக்கள் மன்னனைத் தெய்வமாக நினைத்து வாழ்ந்தமையால் நாட்டில் எந்த விதமான குறைகளும் இருக்கவில்லை. மாதமும் மாரி பொழிந்ததால் வயல்கள் நன்றாக விளைந்தன. தோப்புக்களில் உள்ள மரங்களால் காய்த்த காய்களைச் சுமக்க முடியவில்லை. கோவில்களில் நித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற்றன. பிராமணர்கள் மனநிறைவோடு மகிழ்வுடன் வேதமோதினர். கலைஞர்கள் புதிய புதிய நடனங்களையும், நாடகங்களையும் மேடையேற்றினர்.

**தி**ரிதஷ்வனின் புத்திரனான சத்தியவிரதன் தந்தைக்கு நேர்மாறானவனாகத் திகழ்ந்தான். அவன் நாட்டு மக்களுடன் மிகவும் கொடுமையாக நடந்து கொள்வான். அவனது பெயரைக் கேட்டாலே நாட்டு மக்கள் பயந்து நடுங்குவர். மன்னனுக்கு யாவும் தெரிந்தபோதும் புத்திர பாசத்தால் அவற்றைக் காணாதது போல இருந்தான்.

**ச**த்தியவிரதனின் கொடுமைகளைத் தாங்க முடியாது மக்கள் பெருந்துன்பப்படுவதைக் கண்ட வசிட்ட முனிவர், திரி மன்னனிடம் வந்து சத்தியவரதனின் தீய செயல்களை விளக்கமாகக் கூறி அவனை நாடு கடத்துமாறு வேண்டினார். அதைக் கேட்ட மன்னன் துடிதுடித்துப் போனான். வசிட்டர் பெரும் தவஞானி அவர் சொல்வதைக் கேட்காவிட்டால் தன்னை அவர் சபித்து விடுவார் என்ற பயத்தால் மன்னன் தனது மகனை நாடுகடத்தினான். சத்தியவிரதன் காட்டுக்குச் சென்று சண்டாளர்களுடன் வசித்து வந்தான்.

**ம**கனைப் பிரிந்தமையால் மிகுந்த வேதனையுடன் நாட்டை ஆண்டு வந்த திரியருனி தவம் செய்யக் காட்டுக்குச் சென்றுவிட்டான். நாட்டை ஆள அரசன் இல்லாமையால் நாட்டில் தீயசெயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்தன. கொலை, களவு, பஞ்சம் என்பன நாட்டில் தாராளமாக நடைபெற்றன. அமைதியாகவும், மகிழ்வுடனும் வாழ்ந்த மக்கள் பெருந்துன்பப்பட்டனர். பருவமழை பொய்த்தமையால் நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடியது.

உண்ண உணவின்றி மக்கள் பெருந்துன்பப்பட்டனர். இவ்வாறு பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தன.

**அ**ந்நாட்டில் வாழ்ந்த விசுவாமிந்திர முனிவர் காட்டில் தவம் செய்து கொண்டிருந்தமையால் அவருடைய மனைவியும் மக்களும் பெரும் பாதிப்புக்குள்ளாயினர். விசுவாமித்திரரின் பிள்ளைகள் சிறுவர்களாக இருந்தமையால் விசுவாமித்திரரின் மனைவி தனக்கும், பிள்ளைகளுக்கும் உணவுகிடைக்காததால் பெரும் துன்பப்பட்டுத் தனது மகனை யாருக்காவது விற்றுவிட்டு அவர்கள் கொடுக்கும் பணத்தில் சீவிக்கலாமென்று நினைத்துத் தனது மகனின் கழுத்தில் கயிறு கட்டி அழைத்துச் சென்று ஒருவரிடம் ஆயிரம் பசுக்களைப் பெற்றுக் கொண்டு தனது மகனை அவனுக்கு விற்று விட்டாள். விசுவாமித்திரரின் மகனின் கழுத்தில் கயிறு கட்டி இழுத்துச் சென்றதால் அவனுக்குக் காலவன் எனப் பெயருண்டானது.

**வி**சுவாமித்திரரின் மனைவியும் பிள்ளைகளும் நாட்டிற்கு அரசனில்லாததால் படும் துன்பத்தை அறிந்து சத்தியவிரதன் மிக்க வேதனைப்பட்டான். தவவலிமை மிக்க பெரும் முனிவரான விசுவாமித்திரரின் மனைவி வறுமை காரணமாகத் தனது மகனின் கழுத்தில் கயிற்றைக் கட்டி இழுத்துச் சென்று ஒருவனுக்கு விற்றதை சத்தியவிரதனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் அவன் விசுவாமித்திரனின் மகனை வாங்கியவரிடம் சென்று உரிய தொகையைக் கொடுத்து அவனை மீட்டு வந்து விசுவாமித்திரரின் மனைவியிடம் ஒப்படைத்துவிட்டுத் தான் தினமும் வேட்டையாடும் விலங்குகளின் மாமிசங்களைக் கொண்டு வந்து கொடுத்துக் கொண்டிருந்தான். இருந்தபோதும் தனது தந்தையிடம் சொல்லித் தன்னை நாடு கடத்திய விசுவாமித்திரரைப் பழிவாங்க வேண்டும் என்ற நினைவு அவனது மனதில் இருந்தது. ஒருநாள் விசுவாமித்திர முனிவரின் பசு ஒன்று காட்டில் மேய்ந்து கொண்டிருந்தது. அது விசுவாமித்திர முனிவரது பசு என்று தெரிந்ததும் சத்தியவிரதன் அதைக் கொன்று அதன் இறைச்சியை விசுவாமித்திர முனிவரின் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் கொடுத்துத் தானும் உண்டான்.

**த**னது பசுவைச் சத்தியவிரதன் கொன்று அதன் மாமிசத்தை உண்டுவிட்டான் என்று விசுவாமித்திரர் அறிந்து மிக்க கோபங்கொண்டு சபித்தார். சத்தியவிரதன் தகப்பனின் கோபத்திற்கு ஆளானமை, பசுவைக் கொன்றது. அதன் இறைச்சியை உண்டது எனச் சத்தியவிரதன் மீது மூன்று பழிகளைச் சுமத்தியதோடு அவன் எதிர்காலத்தில் திரிசங்கு என்ற பெயரைப் பெறுவான் என்றும் சபித்தார்.


**சி**லகாலம் சென்ற பின்பு விசுவாமித்திர முனிவர் தனது தவத்தை நல்லமுறையில் முடித்துக் கொண்டு வீடு திரும்பிய போது அங்கு சத்தியவிரதன், அவரது மனைவி மக்களுக்கு உணவு கொடுத்துக் கொண்டிருந்தான்.

**தா**ன் குடும்பத்தவர்களை மறந்து காட்டில் தவம் செய்த காலத்தில் பஞ்சத்தால் தவித்த தனது குடும்பத்தினருக்குச் சத்தியவிரதன்தான் உணவு கொடுத்துக் காப்பாற்றியவன் என அறிந்து மிக்க மகிழ்வுடன் அவனைப் பார்த்து, "மிகவும் இக்கட்டான வேளையில் எனது மனைவி விற்ற எனது மகனை விடுவித்து அவர்களுக்கு எந்தக் குறைகளும் இல்லாமல் காப்பாற்றிய உனக்கு வரம் தர விரும்புகிறேன். விரும்பியதைக் கேள்" என்றார்.

"**சு**வாமி, வாழ்வில் ஏற்பட்ட துன்பங்களால்தான் களைத்துவிட்டேன். இன்பங்கள் எதையும் நான் அனுபவிக்கவில்லை. அதனால் நான் இந்த மானிட உடலுடன் சொர்க்கத்திற்குச் செல்ல வேண்டும்" என்று கேட்டார்.

"**அ**ப்படியே செல்லக் கடவாய்" என்று விசுவாமித்திரர் கூறி அவனை ஆசீர்வதித்தார். அதன்பின் திரிசங்கு நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றான். விசுவாமித்திர முனிவர் அவனின் முக்கிய குருவானார்.

## 15. சகரன்



**தி**ரிசங்குவின் மகன் அரிச்சந்திரன். இவனது வம்சத்தைச் சேர்ந்தவன் பாகு. பாகுவுக்குக் காமம் அதிகம். அதனால் அவன் எந்நேரமும் தனது மனைவிமாருடன் கூடியிருந்து இல்லற சுகத்தை அனுபவித்துக் கொண்டிருப்பான். நாட்டில் நடைபெறுவன எவையும் அவனுக்குத் தெரியாது. படைவீரர்களுக்கு ஒழுங்கான பயிற்சியளிக்கப்படவில்லை. நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படுவதில்லை. அவனது பலவீனத்தை அறிந்த பகைவர்கள், அவன் பெண்களுடன் சல்லாபித்துக் கொண்டிருக்கும் போது படையுடன் வந்து நாட்டைக் கைப்பற்றினர். பாகு மன்னன் தனது மனைவியுடன் சேர்ந்து நாட்டை விட்டுத் தப்பி வந்து காட்டில் வசித்து வந்தான்.

**பா**கு மன்னனை கதயர்களும், தலஜங்கா மன்னர்களும் சேர்ந்து நாட்டைவிட்டுத் துரத்தினர். அவர்களுக்கு யவனர்களும், பரதர்களும் பச்லவர்களும் உதவினர்.

**சி**லகாலம் செல்ல காட்டில் பாகுமன்னன் இறக்க, அவனது மனைவியான யாதவி உடன் கட்டையேற விரும்பினாள். பாகுமன்னன் அவளின் மீது அளவுக்கதிகமான காதல் கொண்டிருந்தான் ஆனால் அவள் கர்ப்பமாக இருந்தமையால் பெரியவர்களும், முனிவர்களும்

அவளது விருப்பத்தைத் தடை செய்தனர். அவுர முனிவர் அவள் மீது இரக்கம் கொண்டு அவளைத் தனது ஆச்சிரமத்துக்கு அழைத்து வந்தார்.

**பா**குவிற்குப் பல மனைவிகள் இருந்தனர். அவர்களில் ஒருத்தி யாதவிக்கு விஷம் கொடுத்துக் கொல்ல நினைத்தாள். விஷத்தை யாதவி அருந்திய போதும் அவ் விஷத்தால் அவளுக்கப் பாதிப்பு ஏற்படவில்லை. ஆனால் அவளுக்குப் பிறந்த குழந்தை நஞ்சுடன் பிறந்தது. குழந்தை நஞ்சுடன் பிறந்ததால் அதைச் சசுரன் என்று அழைத்தனர்.

**அ**வுர முனிவரின் ஆச்சிரமத்தில் வளர்ந்த சசுரனுக்கு அவுர முனிவர் சகல வித்தைகளையும், சகல விதமான கல்வியையும் கற்பித்தார். அத்துடன் புனிதமான பலம்மிக்க ஆக்கேய அஸ்திரத்தை ஏவும் முறைகளையும் கற்பித்தார்.

**பெ**ரும் பலவானாகவும், அறிவு மிக்கவனாகவும் சசுரன் வளர்ந்து வந்தான். அவன் உரிய வயது வந்ததும் தனது தந்தையை அரச கட்டிலில் இருந்து விரட்டிய பகைவர்கள் அனைவரையும் அவர்களின் இருப்பிடங்களுக்குத் தேடிச் சென்று ஆக்கினேய அஸ்திரத்தால் தாக்கிச் சிறைப்பிடித்தான். சிறைப்பிடித்த பகைவர்களை சசுரன் சிரச்சேதம் செய்ய விரும்பினான். அதை அறிந்த வசிட்ட முனிவர், சசுரனிடம் வந்து, "மன்னா, நிராயுதபாணியாக்கி விட்டு அவர்களைக் கொல்வது தர்மமாகாது. போரில் நீ அவர்களைக் கொல்வது தான் தர்மம். அதைவிட்டு விட்டு கைது செய்தபின் கொலை செய்வது பாவம். அதனால் அவர்களது தலைமுடியை நீக்கி அவமானப்படுத்து. அத்துடன் அவர்கள் ஒருபோதும் வேதங்களைப் படிக்கக்கூடாதென்று ஆணையிடு" என்று கூறச் சசுரன் அவர்களை மக்கள் மத்தியில் நிறுத்தி மொட்டை அடித்து அவமானப்படுத்தினான். சசுரனால் தோற்கடிக்கப்பட்ட கோன்சர்ப்ப மன்னர்களும், மகிஷகர்களும், தர்வார்களும், சோழர்களும், கேரளர்களும் பெரும் அவமானப்பட்டனர்.

**ச**சுர மன்னனுக்கு கேசினி, சுமதி என்று இரண்டு மனைவியர் இருந்தனர். அவுர முனிவரின் அருளால் கேசினிக்கு ஒரு மகனும், சுமதிக்கு அறுபதினாயிரம் மக்களும் பிறந்தனர். கேசினியின் மகனின் பெயர் பஞ்சஜனன். சுமதியின் வயிற்றில் இருந்து பூரவைக் காய் வடிவில் இரு மாமிசப் பிண்டம் பிறந்தது. அதை ஒரு பெரிய நெய்ப்பாகையுள் வைக்குமாறு அவுர முனிவர் கூற சசுர மன்னன் அவுர முனிவரின் சொற்படி ஒரு பெரிய பானையை எடுத்து அதை நெய்யால் நிரப்பி அப்பானைக்குள் அதை வைத்தான். சில நாட்களின் பின் அத் தசைப்பிண்டத்தில் இருந்து அறுபதினாயிரம் மக்கள் தோன்றினர்.

**ச**சுர மன்னன் உலகம் முழுவதையும் கைப்பற்ற விரும்பி ஓர் அசுவமேத யாகம் செய்து அவ் யாகத்தில் செய்யப்பட்ட குதிரையை உலகெங்கும் திரியவிட்டான். அக் குதிரையை சசுரனின் அறுபதினாயிரம் மக்கள் காவல் காத்துக் கொண்டு உலகை வலம் வந்தனர்.

குதிரை எங்கும் சென்று இறுதியாகத் தென்கிழக்குக் கடற்கரைக்கு வந்தது. நெடுத்தூரம் அலைந்த களைப்பால் சசுரனின் மக்கள் கடற்கரையில் ஓய்வெடுத்தனர். பலர் அயர்ந்து தூங்கிவிட்டனர். விழித்தெழுந்து பார்த்தபோது குதிரையைக் காணவில்லை.

**வி**ழித்தெழுந்த சசுரனின் மக்கள் குதிரையைக் காணாது திகைத்துவிட்டனர். குதிரையை யார் களவாடினார்கள் என்று அவர்களுக்குப் புரியவில்லை. பெரும் பலசாலிகளான தம்மை எதிர்க்கக் கூடியவர்கள் யார் என்ற அகந்தை அவர்களின் மனதுள் புகுந்ததால் அவர்கள் மிகுந்த கோபங்கொண்டு குதிரையைத் தேடிச் சென்றனர்.

**தெ**ன்கிழக்குக் கடற்கரைக்கு அருகில் பெரிய காடு இருந்தது. அக் காட்டுக்குள்ச் சென்ற அவர்கள் காடு முழுவதையும் தேடினார்கள். குதிரைகளைக் காணவில்லை. அதனால் மிக்க கோபங் கொண்ட அவர்கள் காட்டுள்ச் சென்றபோது ஒரு முனிவர் தவம் செய்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். கோபமிகுதியுடன் வந்த அவர்கள் முனிவர் தவம் செய்வதை உணராது அவரை எழுப்பி விசாரிக்க முடிவு செய்து அவரை எழுப்பினர்.

**நி**ஷ்டை கலைந்து எழுந்த முனிவர் அவர்களைக் கோபத்துடன் உற்று நோக்க, அவர்களில் பலர் எரிந்து சாம்பலானார்கள். உயிர் தப்பிய வர்கிகேது, சுகேது, தர்மகேது, பஞ்சஜனன் ஆகிய நால்வர் எரியாது உயிர்தப்பினர்.

**ப**ஞ்சஜனின் மகன் சுமசுமனன். சுமசுமனின் மகன் திலீபன். திலீபனின் மகன் பகீரதன்.

## 16. பகீரதனது வரலாறு



**சூ**தமுனிவர் கங்கையின் உற்பத்தி பற்றி முனிவர்களுக்குக் கூறினார். கங்கை நதி விஷ்ணுவின் பாதத்தில் தோன்றியது. அதனால் கங்கை நதியை ‘விஷ்ணுபதி’ என்று அழைப்பர்.

**ச**கரச் சக்கரவர்த்தி பெரும் பலவான். அயல் நாடுகளையெல்லாம் வென்றவன். அவன் ஓர் அஸ்வமேத யாகம் செய்ய விரும்பி தனது குதிரையை அவிழ்ந்து விட்டான். அக் குதிரைக்குப் பாதுகாப்பாக அவனது ஆயிரம் புத்திரர்கள் சென்றனர். குதிரை ஒவ்வொரு நாடுகளையும் கடந்து வீறு நடைபோட்டது. சகரச் சக்கரவர்த்தியின் ஆயிரம் புத்திரர்களும் வெற்றிக் களிப்புடன் குதிரையோடு வந்தனர். அதைக் கண்டு பொறாமைப்பட்ட இந்திரன் மாய வடிவில் சென்று யாகக் குதிரையைப் பிடித்து

வந்து கபில முனிவரின் ஆச்சிரமத்தில் கட்டிவிட்டு மறைந்துவிட்டான். கபிலர் தவம் செய்து கொண்டிருந்ததால் தனது ஆச்சிரமத்தில் நடைபெற்றதைக் காணவில்லை.

**ச**கரச் சக்கரவர்த்தியின் புத்திரர்கள் யாகக் குதிரையைக் காணாமையால் கடுஞ்சினம் கொண்டனர். அவர்கள் குதிரையைத் தேடி அதைக் காணாமையால் பாதாளலோகத்திற்குச் சென்றனர். அங்கு கபிலரின் ஆச்சிரமத்தில் யாகக் குதிரை கட்டியிருப்பதைக் கண்டு கடுஞ்சினங்கொண்டு அவருடன் போரிட்டனர். அதனால் மிகுந்த கோபமடைந்த கபிலர் சகரச் சக்கரவர்த்தியின் ஆயிரம் புதல்வர்களையும் தனது தவ வலிமையால் எரித்துச் சாம்பலாக்கி விட்டார்.

**அ**து நடந்து சில காலத்தின் பின் சகரச் சக்கரவர்த்தியின் வம்சத்தில் பிறந்த பகீரதன் என்ற அரசன் கடுந்தவம் செய்து ஆகாய கங்கையைப் பூமிக்குக் கொண்டுவர முயற்சி செய்தான். அதற்காக அவன் பிரமதேவரை நோக்கித் தவம் செய்தான். பிரமதேவர் அவன் முன் தோன்றி ஆகாய கங்கையைப் பூமிக்குக் கொண்டு வரவேண்டுமானால் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய் என்று கூறினார்.

**அ**தனால் பகீரதன் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்தான். பல காலம் கடுந்தவம் செய்தமையால் சிவபெருமான் பகீதரன் முன்தோன்றி, “பகீரதா எதற்காகத் தவம் செய்கிறாய். உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்” என்றார்.

“**எ**ம்பெருமானே, எனது முதாதையர்களான சகரச் சக்கரவர்த்தியின் புதல்வர்கள் ஆயிரம் பேர் கபில முனிவரோடு முரண்பட்டமையால் அவர் அவர்களை எரித்துச் சாம்பலாக்கி விட்டார். அவர்களது ஆன்மா நிம்மதியின்றி அலைகிறது. அதனால் அவர்களுக்கு முத்தியளிக்க வேண்டும்” என்று கேட்டான்.

**அ**தற்குச் சிவபெருமான், “பகீரதா, அவர்களின் மீது கங்கையின் நீர் பட்டால் அவர்களுக்கு முத்திகிடைத்துவிடும். அதனால் கங்கையை நோக்கித் தவம் செய்” என்று கூறி மறைந்தார்.

**சி**வபெருமானின் சொற்படி பகீரதன் கங்கையை நோக்கித் தவம் செய்தான். அவனின் தவத்தின் மகிமையால் கங்காதேவி அவனின் முன்தோன்றி, “உனக்கு என்ன வரம் வேண்டும்” என்று கேட்டாள். அதற்குப் பகீதரன், “தாயே, எனது மூதாதையரான சகரச் சக்கரவர்த்தியின் ஆயிரம் புதல்வர்கள் அறியாத்தனமாகக் கபில முனிவருடன் முரண்பட்டதால் அவர் அவர்களை எரித்துச் சாம்பலாக்கிவிட்டார். அவர்களின் சாம்பலின் மீது புண்ணிய தீர்த்தமாகிய உனது நீர் பாய்ந்தால் அவர்கள் முத்தியடைவார்கள் என்று சிவபெருமான் கூறியதால் தான்

நான் தங்களை நினைத்துத் தவம் செய்தேன். தாயான நீ பூமியில் பாய வேண்டும்" என்று சொன்னான் பகீரதன்.

"**ப**கீரதா, நான் ஆகாயத்தில் இருந்து பூமியை நோக்கிப் பாய்ந்தால் அதைப் பூமிதாங்கமாட்டாது. பூமியில் வாழ்வோர் அழிந்து போவார்கள். அதனால் பூமியில் விழுமுன் அதை ஒருவர் தாங்க வேண்டும். என்னைத் தாங்க வல்லவர் சிவபெருமான் மட்டுமே. அதனால் சிவபெருமானை நோக்கித் தவம் செய்" என்று கூறிவிட்டு மறைந்தாள் கங்காதேவி.

**ப**கீதரன் மீண்டும் சிவபெருமானை நோக்கித் தவம் செய்தான். அவனது தவத்தால் மிக்க மகிழ்வு கொண்ட சிவபெருமான் அவனின் முன் காட்சி கொடுத்தார். அவரைக் கண்டு மகிழ்ந்த பகீரதன் கங்காதேவி சொன்னவற்றைக் கூறினான். சிவபெருமான் அதற்குச் சம்மதித்தார்.

**சி**வபெருமான் சம்மதித்ததும் கங்காதேவி ஊழிக்கால வெள்ளப் பெருக்குப் போல ஆர்ப்பரித்தவாறு பூமியை நோக்கி வந்தாள். சிவபெருமான் அவளை அன்புடன் அணைத்துத் தாங்கிக் கொண்டார். வேகம் தனித்த கங்காதேவி பூமிக்கு வந்து பூமியினூடாகப் பாதாளத்திற்குச் சென்று கபில முனிவரால் எரித்துச் சாம்பலாக்கிய சகரச் சக்கரவர்த்தியின் புதல்வர்கள் எரிந்து சாம்பலாகக் கிடந்த இடத்தை அடையச் சாம்பல் புனிதமான கங்கை நீரில் கரைந்தது. அதனால் சாம்பலாக இருந்தவர்கள் மோட்சத்தை அடைந்தனர்.

## 12. சந்திரனும் சந்திர வம்சமும்



**யா**யாதி சந்திர வம்சத்தில் தோன்றிய வலிமை மிக்க மன்னன் நகுஷன் அவன் விரஜா என்பவளை மணந்து யதி, யாயாதி, சம்யாதி, ஆயாதி, வியாதி, கிருதி என்ற ஆறு புத்திரர்களைப் பெற்றான். நகுஷனுக்குப் பின் யாயாதி அரசனானான்.

**யா**யாதி சுக்கிராச்சாரியாரின் மகளான தேவயானையையும், தாவை மன்னனின் மகளான சர்மிஷ்டையையும் திருமணம் செய்தான். தேவயானிக்கு யது, துர்வசு என்று இரு புத்திரர்களும், சர்மிஷ்டைக்கு துருஹ்யு, அனு, பூரு என்ற மூன்று புத்திரர்களும் பிறந்தனர்.

**யா**யாதி பெரும் பலசாலி, வீரன் அதனால் பூவுலகில் பலம் பொருந்திய அரசனாகத் திகழ்ந்தான். அவர் முதுமையடைந்ததும் தனது பிள்ளைகளிடம் ராஜ்ஜியப் பொறுப்புக்களைக் கொடுத்துவிட்டு உலகம் முழுவதும் யாத்திரை செய்ய விரும்பினான். அதனால் அவன் தனது மகனான யதுவை அழைத்து தனது முதுமையை ஏற்றுக் கொண்டு, அவனது இளமையைத் தருமாறு வேண்டினான். அதை யது ஏற்கவில்லை. அதனால் கோபங்கொண்ட யாயாதி அவனும் அவனது மக்களும் அரசாள மாட்டார்கள் என்று சாபமிட்டான். அவன் தனது ஏனைய புத்திரர்களையும் அழைத்து அவ்வாறே வேண்ட அவர்களும் மறுத்துவிட்டனர். அதனால் கோபம் கொண்ட யாயாதி அவர்களையும் முன்புபோலச் சபித்தான். ஆனால் பூரு என்ற மகன் தனது தந்தையின் விருப்பத்தை ஏற்று அவரது முதுமையைப் பெற்றுக் கொண்டு தனது இளமையைக் கொடுத்தான். பல ஆண்டுகள் கழிய யயாதி உலகை வெறுத்து துறவுபூண எண்ணித் தனது மகனான பூருவை அழைத்து அவனது முதுமையைத் தான் பெற்றுக் கொண்டு தவம் செய்யக் காட்டுக்குச் சென்றான்.

**இ**வ் வரலாறு விஷ்ணு புராணத்தில் சுக்கிராச்சாரியாரின் சாபத்தால் தான் யயாதிக்கு முதுமை ஏற்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.


**பூ**ருவுக்குப் பின் பரதன் என்பவன் நாட்டைச் சிறப்பாக ஆண்டமையால் அந்த நாட்டிற்கு 'பாரதவர்ஷம்' என்ற பெயர் உண்டானது. இதன்பின் வந்த மன்னர்கள் 'கௌரவர்கள்' என அழைக்கப்பட்டனர். இந்த வம்சத்தில் வந்த பலம்மிக்க அரசர்களுள் ஒருவன் குருவாகும். இவனது பெயரால் குருசேத்திரம் என்ற இடம் உருவானது.

**து**ர்வசுவின் சந்ததியில் பாண்டியர், சேரனர், கோவர், சோழர்கள் போன்ற பெரும் பெரும் அரசர்கள் தோன்றினர். துருஹ்யனின் குலத்தில் காந்தார மன்னர்கள் தோன்றினர்.

**ய**துவுக்குச் சகஸ்ரதன் பயோகன், குரோஷ்கு, நீலன், அஞ்சிகன் என ஐந்து புத்திரர்கள் பிறந்தனர். சகஸ்ரதனின் குலத்தோரை ஹதயர்கள் என்பர். இவர்களில் சிறந்த மன்னன் காத்தவீர்யாச்சுனன் ஆவான்.

**கு**ரேகஷ்குக்குப் பின் வந்தவர்கள் விருத்ணிகள், அந்தகர்களாவர். இதில் விகுஷ்ணிகுலத்தில் தோன்றியவர் ஸ்ரீ கிருஷ்ணராவர்.

## 13. பூமண்டலப் பிரிவுகள்




“**கு**ருவே, இனி பூமியைப் பற்றிக் கூறியருளுங்கள்” என்று கேட்டார் மைத்ரேயர்.

“**மை**த்ரேயரே, இது பற்றி விரிவாகக் கூற அனேக ஆயிரம் ஆண்டுகள் போதாது ஆயினும் நீர் கேட்டதற்காக மிக மிகச் சுருக்கமாகக் கூறுகிறேன். இப் பூமியானது ஜம்பூத்து வீபம், பிலகசத்வீபம், குசத்து வீபம், கிரௌஞ்சத்து வீபம், சாகத்து வீபம், புஷ்கரத்து வீபம் என ஏழுதுவீபங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஏழுதுவீபங்களும் உப்பு, கருப்பஞ்சாறு, கள், நெய், தயிர், பால், சுத்த நீர் என்ற ஏழு சமுத்திரங்களால் சூழப்பட்டுள்ளன. ஜம்பூத் வீபம் எல்லாவற்றிற்கும் நடுவில் இருக்கிறது. அதன் நடுவில் மேரு என்ற சுவனர்ண மலை உள்ளது. இதற்குத் தென்திசையில் இமவான், ஏமகூடம், நிஷதம் ஆகிய மூன்று மலைகளும், வடபுறத்தில் நீலம், சுவேதம், சிருங்கி ஆகிய மூன்று மலைளும் உள்ளன.

**இ**ந்த ஜம்பூத்வீபத்தில் முதல் பாரதவர்சம் அடுத்து கிம்பருசம் அடுத்து கரிவருசம் மூன்றும் மேருவின் தெற்கேயுள்ளவை. ரம்மிக வருசம், கிரண்ம வருசம், குரு வருசம் ஆகிய மூன்றும் வடக்கில் உள்ளவை. மேருவைச் சுற்றியுள்ள பூமி இளாவருசம் என்று சொல்லப்படும். இளாவிருத வருசத்தில் நான்கு மலைகள் உள்ளன. கிழக்கே மந்தாரமும், தெற்கில் கந்தமாதனமும், மேற்கில் விபுலமும், வடக்கில் சுபார்சுவமும், மாதனமும் உள்ளன.

**அ**ம் மலைகளில் கடம்பு, நாவல், அத்தி, ஆல் போன்ற மரங்கள் உள்ளன. அந்த நாவல் மரத்தால் தான் இத் தீவுக்கு ஜம்புத் தீவு என்ற பெயர் உண்டானது. அந்த மரத்தின் பழங்கள் அருகே ஓடிய நதியில் விழுவதால் அந் நதிக்கு ஜம்பு நதி என்ற பெயர் உண்டானது.

**அ**ந்த நதியின் நீரைக் குடிப்பவர்கள் ஆரோக்கியம் மிக்கவர்களாக இருப்பதால் அவர்களுக்கு நோய்கள் உண்டாவதில்லை. அந்த இடத்தில் உள்ள மண் அந்த ரசத்தில் நனைந்து காற்றினால் உலர்ந்து ஜாம்பூநதம் என்ற பெயரைக் கொண்டது. அங்கு பெரும் பெரும் சித்தர்கள் வாழ்கின்றனர். மேரு மலைக்குக் கிழக்கில் பத்திராசுவ வருசமும், மேற்கில் கேதுமால வருசமும் இருக்கின்றன. மேருவின் நான்கு திசைகளிலும் நான்கு வனங்கள் உள்ளன. அங்கு நான்கு ஏரிகளும் உண்டு.

**மை**த்ரேயரே, மேருவுக்கு மேல் பிரமாவின் மாபெரும் பட்டணம் இருக்கிறது. அதைச் சுற்றி எட்டுத் திசைகளிலும் லோகபாலகர் எட்டுப்பேருக்கும் பெரிய பட்டணங்கள் இருக்கின்றன. மகா விஷ்ணுவின் பாதத்தில் இருந்து உதித்த கங்காநதி ஆகாயத்தில் இருந்து சந்திர மண்டலத்தில் விழுந்து பின் மேருவின் மீதிருக்கும் பிரமாவினுடைய நகரத்திற்கு நான்கு புறமும் நான்கு பிரிவாக விழுந்து சீதை, அளக நந்தை, சட்சு, பத்திரை என்ற பெயர்களைப் பெற்று விளங்குகிறது. சீதைநதி ஆகாயமார்க்கத்திலிருந்து இறங்கிச் சமுத்திரத்தை அடைகிறது. அளகநந்தை நதி ஏழு பிரிவாகப் பிரிந்து சமுத்திரத்தை அடைகிறது. சட்சு என்ற நதி மேற்கு மலைகளைக் கடந்து சமுத்திரத்தைச் சென்றடைகிறது. பத்திரை நதி வடமலைகளின் வழியாகக் கடலை அடைகிறது.

**மா**லிய வர்து, கந்தமாதனம் என்ற மலைகள் நீல நிசத மலைகளின் அளவினதாக இருக்கின்றன. அவற்றை தழுவி மேருமலை உள்ளது.

**பா**ரதகேது, மாலபத்திராசுவ மலைகள் எல்லாப் புறமலை மலைகளாகும். ஜடரம், ஏம கூடம் என்ற மலைகள் தெற்கு வடக்காக தென்புற எல்லை மலைகளாக இருக்கின்றன. கந்தமாதகம், கைலாயம் என்ற இரு மலைகளும் கிழக்குத் திசையின் எல்லை மலைகளாக நீண்டு சமுத்திரத்தின் நடுவில் உள்ளன. நிசதம், பரியாத்திரம் என்ற மலைகள் மேலைத்திசையின் எல்லை மலைகளாக உள்ளன. தீரிசிருங்கம், ஜாருதி என்ற மலைகள் நீண்டு சமுத்திரம் வரை சென்று வடக்கெல்லை மலைகளாகவுள்ளன. இவ்வாறு எல்லைகளில் இரண்டாயிரம் மலைகள் உள்ளன. இவற்றினிடையே ஸ்ரீவனம், கிம்சுகவனம், நளவனம், சாயித்திரரதம் என்ற செழிப்பான காடுகள் உள்ளன.

**அ**ங்கு மகாலட்சுமி, விஷ்ணு, அக்கினி, சூரியன் முதலிய தேவர்களின் வாசஸ் தலங்கள் இருக்கின்றன. அம் மலைச் சாரல்களில் யாசாதிகள் கீதம் இசைத்து நடனமாடிக் கொண்டிருப்பார்கள். இவை பூலோக சொர்க்கங்களாகும். இங்கு புண்ணியவான்கள் சென்று தங்குவர். ஏனையோர் பல பிறவிகளை எடுத்தாலும் போய்ச்சேர மாட்டார்கள். இங்கெல்லாம் மகாவிஷ்ணு பகவான் எழுந்தருளியிருக்கிறார். இங்குள்ள மக்கள் எந்தவிதமான துன்பங்களும் இல்லாமல் பதினாயிரம் வருடங்கள் இன்பமாக வாழ்வர். இங்கு மழை பெய்வதில்லை. ஆற்று நீர் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யும். அங்குள்ள மலைகளில் வற்றாத நீரூற்றுக்கள் உண்டு'' என்றார் பராசர முனிவர்.

## 19. கோகாரக் (உத்தல நாடு)



**உ**த்கலம் பகுதி என்று அழைக்கப்படும் ஒரிசாவில் வேதங்களையும், சாத்திரங்களையும் கற்றறிந்த பல பிராமணர்கள் வாழ்ந்து வந்தனர். யாகங்களை உரிய விதி முறைப்படி நடத்தும் திறமை மிக்க பண்டிதர்கள் பலரும் வாழ்கின்றனர். இங்கு கோணாதித்தியன் என்ற பெயரில் சூரியனது வடிவம் உள்ளது. கோணாதித்தியன், கோணர்க்க, அர்த்தன், ஆதித்தியன் என்பன சூரியனது மறு பெயர்களாகும்.

**சூ**ரியனது விக்கிரகத்தையோ அல்லது வானில் பேரொளியாகத் திகழும் சூரியனைப் பார்த்தாலோ ஒருவர் செய்த பாவங்கள் அனைத்தும் தீயில்பட்ட சருகுபோல எரிந்து விடும் என்று இங்குள்ள மக்கள் நம்பிச் சூரியனைத் தமது தெய்வமென்று கூறித் தொழுவர்.

**இ**ப் பகுதியில் மரங்கள் செழிப்பாக வளர்ந்திருக்கின்றன. அதற்குக் காரணம் சூரியபகவானின் அருளால் பெய்யும் மழையாகும். காலையில் சூரியன் உதிக்கும் வேளையில் சூரியனை வணங்குவது மிகவும் சிறப்பானது. பக்தர்கள் சூரியோதயத்தின்போது சூரியனை வணங்கினால் விரும்பும் பேறுகளைப் பெறுவார்கள் என்று அங்குள்ள பண்டிதர்கள் நம்புகின்றனர்.

**அ**திகாலையில் எழுந்து நீராடிய பின் கிழக்குத் திசையை நோக்கி நின்று எட்டு இதழ்களைக் கொண்ட தாமரை மலர்கள், தாமரை இதழ்கள், சிவந்த நிறமுடைய பூக்கள், சந்தணம், குங்குமம் ஆகியவற்றை ஒரு வாழையிலையில் பரப்பி வைத்து அதன் மேல் கும்பம் வைத்தல் வேண்டும். வாழை இலையில் நெல், அரிசி, எள் போன்ற தானியங்களை வைத்து தர்ப்பைப் புற்களால் அவற்றை மூடுதல் வேண்டும். அதன்பின் தாமரைப் பூவின் மீது சூரியபகவானை எழுந்தருளும் படி பிரார்த்தித்தல் வேண்டும்.

**இ**வ்வாறு சூரியதேவன் உள்ள கோவிலில் பிரார்த்தனை செய்தால் ஒருவன் தனது ஏழு பிறப்புக்களிலும் செய்த பாவங்கள் யாவும் நீங்கிவிடும். இந்திரன், தத்தன், பர்ஜன்னன், த்வஷ்டன், புஷன், ஆர்யமன், பகன், விவஸ்வனன், விஷ்ணு, அம்சுமனன், வருணன், மித்திரன் என்ற பன்னிரு தெய்வங்களும் சூரியனின் வெவ்வறு உருவங்களாகும் என்று அங்குள்ள பண்டிதர்கள் நம்புகின்றனர்.

**சூ**ரியபகவான் இந்திரனாக உருவெடுத்துத் தேவர்களின் பகைவர்களான அசுரர்களை அழிக்கிறான். தக்கனாக இருந்து படைக்கிறான். பர்ஜன்யாக இருந்து மழையைப் பொழிவிக்கிறான். த்வஷ்டனாகத் தாவரங்களில் இருந்து அவற்றைச் செழிப்பாக வளரச் செய்கிறான். புஷ்னாக இருந்து தானியங்களின் உற்பத்தியைப் பெருக்குகிறான். ஆர்யமனாக இருந்து காற்றை உருவாக்குகிறான். பகலனாக அவன் எல்லா உயிர்களின் மீதும் இருந்து அவற்றை விரத்தி செய்கிறான். விவஸ்வனாக இருந்து தீயை உருவாக்கி உணவு வகைகளைச் சமைக்க உதவுகிறான். விஷ்ணுவாக இருந்து கொடியவர்களை அழிக்கிறான். அம்சமயனாக இருந்து காற்றைப் புனிதப்படுத்துகிறான். வருணனாக நீரில் இருந்த நாட்டைச் செழிக்கப் பண்ணுகிறான். மித்திரனாகச் சந்திரனில் இருந்து உயிர்களை மகிழ்ச்சிப்படுத்துகிறான். அத்துடன் சமுத்திர நீராக இருந்து உயிர்களுக்குப் பல்வேறு வகையான நன்மைகளைச் செய்கிறான்.

**சூ**ரியபகவான் இத்தகைய பன்னிரு தோற்றங்களில் இருந்து உலக உயிர்களுக்கு இன்பமளிப்பதோடு வருடத்தில் உள்ள பன்னிரு மாதங்களிலும் பிரகாசித்து உயிர்களுக்கு நன்மைகளைச் செய்கிறான். பன்னிரு மாதங்களிலும் சூரியனது கதிர்கள் வெவ்வேறு விதமாகவே இருக்கும்.

**சூ**ரியபகவானுக்கு மேற்சொல்லப்பட்ட பன்னிரு பெயர்களை விட வேறு பன்னிரு பெயர்கள் உள்ளன. அவை ஆதித்யன், சவிதன், சூரியன், மித்திரன், அர்க்கன், பிரபாகரன், மார்த்தாண்டன், பர்ஸ்கரன், பாணு, சித்திரபாணு, திவாகரன், ரவி என்பனவாகும்.

## 20. இந்திரத்யும்னனும் புருசோத்தமசேத்திரமும்



**ச**த்திய யுகத்தில் இந்திரத்யும்னன் என்றொரு புகழ்மிக்க மன்னன் இருந்தான். அவன் நீதி வழுவாது நாட்டை ஆண்டு வந்தான். அவனது ஆட்சியில் மக்கள் எந்த விதமான குறைகளுமின்றி வாழ்ந்து வந்தனர். அவன் ஒரு பெரும் விஷ்ணுபக்தன். நாட்டில் விஷ்ணுவுக்குப் பல கோவில்கள் இருந்தன. அங்கு ஆகமவிதிப்படி பூசைகள் நடைபெற்று வந்தன. இருந்தும் அவனது மனதில் ஒரு சந்தேகம் இருந்தது. எந்த விஷ்ணு கோவிலில் விஷ்ணுவைத் தரிசித்தால் கூடுதலான பலன் கிடைக்கும் என்று நினைத்தான். எந்த விஷ்ணுவின் கோவிலும் அவனுக்குத் திருப்தி அளிக்கவில்லை. அதனால் பண்டிதர்கள், பிராமணர்களை அழைத்து நாட்டில் உள்ள விஷ்ணுவின் கோவில்களில் உள்ள சிறப்பைப் பற்றி விசாரித்தான்.

**அ**வர்கள் நாட்டில் உள்ள அனைத்து விஷ்ணுவின் கோவில்களின் சிறப்புக்கள் பற்றியும், மகிமைகள் பற்றியும் மன்னனுக்கு எடுத்துச் சொன்னார்கள். அப்படி அவர்கள் சொன்ன போதும் மன்னன் திருப்திப்படவில்லை. அவனது மனம் அலைமோதியது.

**அ**ந்த நாட்டின் தலைநகரம் அவந்தி. அவந்தி செல்வச் செழிப்பு மிகுந்த பிரதேசமாகும். அங்கு பருவமழை காலம் தப்பாது பெய்வதால் நாடெங்கும் மிக்க அழகுடையதாக விளங்கியது. தானியங்கள் மக்களின் தேவைக்கதிகமாக விளைந்தன. அரசனுக்கு மாணியமாக தானியங்களை அளித்துவருவதால் மன்னன் நாட்டைச் சுற்றிப் பலமான கோட்டைகளை அமைத்திருந்தான்.

**அ**ங்கு சிம்பா என்ற நதி பாய்கிறது. அதில் ஒருபோதும் நீர் வற்றியதில்லை. புனிதமான அந்த நதிக்கரையில் விஷ்ணுவுக்குக் கோவிந்த சாமி ஆலயம், விக்கிரம சுவாமி ஆலயம் என இரண்டு மகிமை பெற்ற விஷ்ணு ஆலயங்கள் இருந்தன. அங்கு வாழும் மக்கள் அனைவரும் இரு கோவில்களிலும் குடிகொண்டிருக்கும் விஷ்ணு பெரும் சக்தி வாய்ந்தவர் என்று எண்ணித் தினமும் வந்து வணங்கித் தாம் நினைத்தவற்றைப் பெற்றுச் சென்றனர்.

**அ**வற்றை விட அங்கு மகாகாலன் என்ற பெயரில் பெரிய சிவன் கோவில் உள்ளது. அங்குள்ள சிவனை வணங்கினால் கேட்டவையெல்லாம் கிடைக்கும் என்று அந் நாட்டு மக்கள் நம்பிச் சிவனுக்குப் பெரும் பெரும் பூசைகள் செய்து வந்தனர். மகா காலன் என்று சொல்லப்படும் பெரும் சிறப்புக்கள் வாய்ந்த அந்தச் சிவனை வணங்கினால் ஆயிரம் அசுவமேத யாகம் செய்த பலன் கிடைக்கும் என்று அந் நாட்டு மக்கள் நம்பி வழிபட்டு பலன்களைப் பெற்று வந்தனர்.

**பே**ரும் புகழும் அருளும் மிக்க விஷ்ணுவின் ஆலயங்களும், விரும்பியதைக் கேட்டு வழிபட்டால் உடனே கொடுத்தருளும் மகாகாலனான சிவனின் ஆலயம் இருந்தும் மன்னனுக்கு அவற்றில் திருப்தியேற்படவில்லை. அதனால் துயரங் கொண்ட மன்னன் விஷ்ணுவுக்குப் பெரியதொரு கோவில் கட்ட நினைத்து அதற்குப் பொருத்தமான இடத்தைத் தேடினான். ஒவ்வொரு இடமாகச் சென்று பார்த்த மன்னன் இறுதியாகத் தெற்குத் திசையில் இருந்த லவண சமுத்திரக்கரையை அடைந்தான்.

**ல**வண சமுத்திரத்தின் கரையோரமாக மரங்கள் அடர்ந்த ஒரு பகுதி காணப்பட்டது. மன்னன் அங்கு சென்றான். அது ஓர் அழகிய சோலை. பல்வேறு வகையான மரங்கள் அங்கு செழித்து வளர்ந்திருந்தன. கனிதரும் மரங்கள் காய்களாலும், கனிகளாலும் நிறைந்திருந்தன. ஆயிரக்கணக்கான பறவைகள் இசைநாதம் எழுப்பியபடி மரத்தில் இருந்தன. அவை பழங்களை உண்ட மகிழ்வால் மகிழ்வுடன் விளையாடிக் கொண்டிருந்தன. சில மரங்களில்

நறுமணம் கமழும் பூக்கள் அழகாக மலர்ந்து சிலிர்த்திருந்தன. அவற்றின் வாசம் மன்னனை அதிசயத்தில் ஆழ்த்தியது.

**ம**ன்னன் சுற்றிவரப் பார்த்தான். ஓர் இடத்தில் பல வண்ணப் பூக்கள் குவிக்கப்பட்டிருந்தன. பழங்களும் வைக்கப்பட்டிருந்தன. அந்த இடம் மன்னனுக்குப் பிடித்து விட்டது. அதனால் விஷ்ணுவுக்கு அங்கு ஒரு பெருங்கோவில் கட்டத் தீர்மானித்தான். அந்த இடத்தில் முன்பு ஒரு பெரிய விஷ்ணுவின் கோவில் இருந்தது. அங்கு விற்றிருந்த விஷ்ணுவைத் தரிசித்த பாவிகளும் மோட்சமடைந்தனர். அதனால் நாட்டில் பல பாவங்களைச் செய்தோர் அங்கு வந்து விஷ்ணுவை வழிபட, விஷ்ணு அவர்களின் பாவங்களை நீக்கிச் சொர்க்கத்திற்கு அனுப்பி வைத்தார். அதனால் பாவிகளைத் தண்டிக்க முடியாது அவதிப்பட்ட யமதர்மராஜன் விஷ்ணுவிடம் சென்று அவரை வணங்கித் தனக்குண்டான இடரைப்பற்றிக் கூறியதும் விஷ்ணு மணலுள்ப் புதைந்துவிட்டார் என்றொரு புராணக்கதை அக் கோவிலைப் பற்றி உண்டு ஒரு நல்ல நாளில் ஆலயத்திற்கான அடிக்கல்லை மன்னன் நாட்டினான். அதன்பின் தான் கோவில் கட்டும் செய்தியை கலிங்க நாட்டிற்கும், உத்கல நாட்டிற்கும், கோசல நாட்டுக்கும் அறிவித்துக் கட்டிட நிர்மானத்திற்கான கற்களைக் கொண்டு வந்து தருமாறு வேண்டினான்.

**மூ**ன்று நாட்டு மக்களும் விந்திய மலையில் இருந்து கற்களைப் பெற்று படகுகள் மூலமாகவும், வண்டிகள் மூலமாகவும் கொண்டு வந்து சேர்த்தனர். அயல் நாட்டு மன்னர்கள், இந்திரத்யும்னன் புதிதாக விஷ்ணுவுக்கு ஒரு பெருங் கோவில் கட்டுவதை அறிந்து பெருமகிழ்வுடன் அக் கோவிலை நல்லமுறையில் கட்ட உதவினர்.

**ஜ**ம்புத்வீபத்தில் வாழ்ந்து வந்த வேதசாஸ்திர விற்பன்னர்கள் பலர் கட்டிட வேலைகளை ஆகம முறைப்படி கட்டுவதற்காக வந்து சேர்ந்தனர். ஆலயத்தின் ஒவ்வொரு பகுதியும் நல்ல முறையில் திட்டமிட்டு ஆகம விதிகளுக்கேற்பக் கட்டப்பட்டது. குறிப்பாக யாகசாலை மிகவும் அழகாகவும், அற்புதமாகவும் அமைக்கப்பட்டது.

**அ**தன்பின் மூலஸ்தானத்தில் வைக்க வேண்டிய விஷ்ணுவின் விக்கிரகம் பற்றிய நினைவுடன் மன்னன் தூங்கியபோது ஒரு கனவு கண்டான். அதில் மகாவிஷ்ணு தோன்றி, “மன்னா, கவலைப்படாதே அதிகாலையில் நித்திரைவிட்டெழுந்ததும் சமுத்திரக் கரைக்குச் செல். அங்கு உனக்குத் தேவையான மரம் ஒன்று பாதிப்பகுதி நீரில் மூழ்கியும், பாதிப் பகுதி தரையிலும் இருந்து ஓங்கி வளர்ந்திருக்கும். அம் மரத்தை வெட்டி எடுத்து வந்து உனக்குத் தேவையான விக்கிரகங்களைச் செய்” என்று கூறி மறைந்தார்.

**ம**ன்னன் மிக்க மகிழ்வுடன் கடற்கரைக்குச் சென்றபோது மகாவிஷ்ணு கூறிய விதிகளமைந்த பெரியதொரு மரம் அங்கு காணப்பட்டது. மன்னனின் மகிழ்ச்சிக்கு

அளவேயில்லை. மனதுள் விஷ்ணுவை நினைத்துக் கண்களை மூடினான். இமைக்குள் மகாவிஷ்ணு திருமகளுடன் திருப்பாற்கடலில் ஆதிசேசன் மீது பள்ளி கொண்டிருந்தார்.

**அ**ப்போது அந்தணர்களின் வடிவில் விஷ்ணுவும் விஷ்வகர்மாவும் வந்திருந்து அம் மரத்தை உரிய முறைப்படி வெட்டியெடுக்க உதவினர். அந்தணர் வடிவில் வந்த விஷ்ணு சொன்னார், “மன்னா, சிறந்ததொரு கோவிலை விதிமுறைப்படி அமைக்க நீ விரும்பியதையிட்டு நான் பெருமைப்படுகிறேன். மகிழ்கிறேன் என்னுடன் வந்திருக்கும் இவர் திறமைமிக்க சிற்பி அத்துடன் மகாமேதை. சிற்பங்களை விதிமுறைப்படி செதுக்குவதில் வல்லவர். அதனால் உனக்குத் தேவயையான விக்கிரகங்களை இவரைக் கொண்டு செய்விப்பாயாக” என்றார்.

**ம**ன்னன் அந்தணர்கள் இருவரையும் வணங்கி ஆசி பெற்றான். மன்னன் அந்த அந்தணரைக் கொண்டு விக்கிரகங்ளைச் செய்யச் சம்மதித்தான்.

**அ**ந்தணராக வந்த தேவலோகச் சிற்பியான விஸ்வகர்மா மூன்று விக்கிரகங்களைச் செய்து கொடுத்தார். அதில் ஒன்று தூய வெண்நிறத்திலான பல தேவர் என்று அழைக்கப்படும் பலராமரின் விக்கிரகம். வெண்நிறத்தில் உருவான அந்த விக்கிரகத்தின் கண்கள் சிவப்பாக இருந்தன. நீலவர்ண உடையுடன் தலைமீது பாம்பு நடனமாட, கையில் கதை என்ற ஆயுதம் இருந்தது.

**இ**ரண்டாவது விக்கிரகம் ஸ்ரீ கிருஷ்ணனது. தாமரையைப் போன்ற கண்கள், கடும் நீல நிறத்தைக் கொண்ட உடல், மஞ்சள் உடை, கையில் சக்கராயுதத்துடன் அவ்விக்கிரகம் காட்சியளித்தது.

**மூ**ன்றாவது கிருஷ்ணனின் சகோதரியான சுபத்திரையின் விக்கிரகம். பொன்நிறமான பட்டாடையுடன் மிகவும் அழகாக அவ் விக்கிரகம் காட்சிகொடுத்தது.

**க**ண நேரத்தில் மூன்று அழகான விக்கிரகங்களை ஆக்கிக் கொடுத்த அந்த அந்தணரைப் பாராட்டிய மன்னன் அந்தணர்களின் கால்களில் விழுந்து வணங்கி, “அந்தண வடிவில் வந்த நீங்கள் அந்தணர்கள் அல்ல என்று எனது மனம் சொல்கிறது. நான் வணங்கும் விஷ்ணுவின் திருவிளையாடல் தான் இது” என்று மெய் மறந்து சொன்னான்.

**வி**ஷ்ணுவாக வேடமிட்டு வந்த அந்தணர் தனது சுய உருவத்தைக் காட்டினார். பிரதியும்னன் திகைத்துப் போனான், “மன்னா, நீ நெடுங்காலம் நீதியாக நாட்டை ஆண்டு அதன் பின் பிரமபதத்தை அடைவாய்” என்று வாழ்த்தி மறைந்தார்.

## 21. மார்க்கண்டேயரும் புவனேசுவரர் ஆலயமும்



**மா**ர்க்கண்டேயர் என்ற முனிவர் கடுந்தவம் செய்து கொண்டிருந்தார். அப்போது உலகெங்கும் நீர் பரவியது. அத்துடன் எங்கும் தீயும் பரவியது. மார்க்கண்டேயர் எழுந்து சென்று ஓர் ஆலமரத்தின் அடியில் அமர்ந்து விஷ்ணுவை நினைத்துக் கடுந்தவம் செய்து கொண்டிருந்தார். அப்போது உலகெங்கும் பரவிய நீரில் பள்ளி கொண்டிருந்த மகாவிஷ்ணு பகவான், "மார்க்கண்டேயா பயம் கொள்ளாதே. என்னுடைய பக்தனான உன்னை நான் காப்பாற்றுவேன்" என்றார்.

**தி**டீரென்று யாருமற்ற இடத்தில் யாரோ பேசியதால் அவர் அதிர்ச்சிக்குள்ளாகி, "என்னுடன் பேசியது யார்?" என்று யோசித்தார். தன்னுடன் பேசியது மகாவிஷ்ணு என்பதை அவர் அறியவில்லை. அப்பொழுது ஆலமரத்தை நீர் மூடியது. அதன் உச்சிக் கிளையின் மீது ஒரு தங்கப் படுக்கையில் ஒரு சிறுவன் படுத்திருத்து அவரைப் பார்த்துச் சிரித்தவண்ணம் இருந்தான். அப்போதும் நீரில் படுத்திருப்பவர் மகாவிஷ்ணு என்று மார்க்கண்டேயர் அறிந்து கொள்ளவில்லை.

"**மா**ர்க்கண்டேயரே, உம்மிடம் பயம் காணப்படுகிறது அத்துடன் களைப்படைந்தும் விட்டீர். என்னுடன் சேர்ந்து ஓய்வெடுத்துக் கொள்" என்றான் சிறுவன்.

**அ**திர்ச்சியுடனும் பயத்துடனும் மார்க்கண்டேய முனிவர் அச் சிறுவனின் உடலில் பிரவேசித்தார். அதற்குள் உலகம் முழுவதையும் மார்க்கண்டேயர் கண்டர். பேரண்டத்தைக் கண்டதும் அதிர்ச்சியடைந்த மார்க்கண்டேயர் வியப்புடன் அச் சிறுவனின் உடலை விட்டு வெளியே வந்தார். அவரால் நடப்பவற்றை நம்ப முடியவில்லை. யாவும் பெருமாளின் திருவிளையாடல் என்று தெரிந்து கொண்ட மார்க்கண்டேயர் விஷ்ணுவைப் பிரார்த்தித்தார். அப்போது அவர் முன்தோன்றிய மகாவிஷ்ணு, "முனிவரே, உமக்கு வேண்டிய வரங்களைக் கேளும் என்றார்.

**பு**ருஷோத்தமா, அரியும் சிவனும் ஒருவரே என்று உணர்த்த ஒரு சிவாலயம் கட்ட விரும்புகிறேன். அதற்கு அருள் புரிய வேண்டும்" என்று மார்க்கண்டேய முனிவர் கேட்டார்.

**ப**கவான் விஷ்ணு மார்க்கண்டேய முனிவர் வரத்தை அருளி அதைக் கட்டுவதற்கான உதவிகளையும் செய்தார்.

## 22. பலிச்சக்கரவர்த்தியும் உலகளந்தானும்



"**மு**னிவர்களே இனிப் பகவான் வாமன அவதாரம் எடுத்த கதையைக் கூறுகிறேன்".

**தே**வலோகத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிடையே ஒருமுறை பெரும் போர் ஏற்பட்டது. அதில் அசுரர்கள் தோற்றுப்போனார்கள். அசுரர்களின் தலைவனான பலிச்சக்கரவர்த்தி கடுங்காயங்களுடன் உயிருக்குப் போராடியபடி இருந்தான். அவனை அசுரகுருவான சுக்கிராச்சாரியார் காப்பாற்றினார். அதனால் பலிச்சக்கரவர்த்தி சுக்கிராச்சாரியாரைப் பெரிதும் மதித்தான். சுக்கிராச்சாரியார் பிருகு குலத்தைச் சேர்ந்தவர். அதனால் பலிச்சக்கரவர்த்தி பிருகு குலத்தவர்களையும் பெரிதும் மதித்து அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வந்தான்.

**ப**லிச்சக்கரவர்த்தியின் மீது பெரும் மதிப்புக் கொண்ட பிருகு குலத்தினர், பலி சொர்க்கத்தை ஜெயிப்பதற்காக விஸ்வஜித் என்ற பெரியதொரு யாகத்தைச் செய்தனர். அந்த யாகத்தில் இருந்து பச்சைக் குதிரைகள் தோன்றின. அத்துடன் சிம்மக் கொடி இரண்டு அம்பறாத் தூணிகள், ஒரு வில், ஒரு கவசம் என்பன தோன்றின.

**அ**வற்றை மகிழ்வுடன் பெற்றுக் கொண்ட பலி அசுரப்படைகளுடன் சென்று இந்திரலோகத்தை முற்றுகையிட்டான். சுக்கிராச்சாரியார் போர் ஆரம்பமாவதற்கான சங்கை எடுத்து ஊதினார் பலி இந்திரலோகத்தை முற்றுகையிட்டதும் இந்திரனும், ஏனைய தேவர்களும் தமது குருவான பிரகஸ்பதியிடம் சென்றனர். இந்திரனும் தேவர்களும் சொன்னவற்றைக் கேட்ட பிரகஸ்பதி சொன்னார், "பலி யாகம் செய்து தனது பலத்தை அதிகரிக்கச் செய்துள்ளான். கிரகங்களும் சந்தர்ப்ப சூழ்நிலைகளும் அசுரர்களுக்குச் சாதகமாக இருப்பதால் இப்போது உங்களால் அசுரர்களை வெல்ல இயலாது. அதனால் எங்காவது சென்று மறைந்திருங்கள். காலம் கனிந்த பின்பு அவர்களோடு போரிடலாம்" என்றார்.

**தே**வர்கள் தமது குருவின் வார்த்தைகளைக் கேட்டு மறைந்து வாழ்ந்தனர். பலி இந்திரலோகத்தைக் கைப்பற்றினான். இந்திரப்பதவியைப் பெறுவதற்காக நூறு அஸ்வமேத

யாகங்களைச் செய்தான். பின் மூன்று உலகங்களையும் கைப்பற்றினான். தேவர்கள் மறைந்து வாழ்வது, தேவர்களின் தாயான திதிக்குப் பெரும் கவலையைக் கொடுத்தது.

**ப**ல காலமாக சமாதி நிலையில் இருந்த திதியின் கணவரான கசியப முனிவர் சமாதி கலைந்து தனது இருப்பிடத்திற்கு வந்தார். தனது மனைவியான திதியின் முகம் மிக்க வாட்டமடைந்திருப்பதைக் கண்டு அதற்கான காரணத்தைக் கேட்டார்.

"**நா**தா அசுரர்கள் சொர்க்கத்தைக் கைப்பற்றியதால் எமது மக்களான தேவர்கள், பலிச்சக்கரவர்த்திக்குப் பயந்து மறைந்து வாழ்கின்றனர். அவர்கள் மீண்டும் சொர்க்கத்தை அடைந்து மிக்க மகிழ்வுடன் வாழ அருள் செய்ய வேண்டும" என்று சொன்னாள்.

"**கா**சியபர் சிரித்தார், தமது விருப்பதைப் பூர்த்தி செய்ய விரும்புவோர் திருமாலிடம் வேண்டுதல் செய்தால் அது நிறைவேறும். அத்துடன் பயோவிரதத்தை அனுஷ்டித்தால் உடனே விரும்பியது கைகூடும்" என்று கூறிய காசியப முனிவர் அவ்விரதத்தை அனுஷ்டிக்கும் முறைகள் பற்றிக் கூறினார்".

**தி**தி உடனே பயோவிரதத்தை பன்னிரு தினங்கள் அனுஷ்டித்தாள். பன்னிரண்டாவது நாள் திருமால் அவளின் முன் பிரசன்னமானார். திதி பரசவமாகி அவரை வணங்கினாள், "தேவர்களின் அன்னையே, தற்போதைய நிலையில் அசுரர்களை வெல்ல முடியாது. ஆனால் உனது விரதத்தின் மகிமையால் உனது புத்திரர்களுக்கு உதவ நான் உனது பிள்ளையாகப் பிறந்து, உனது எண்ணத்தை நிறைவேற்றுவேன்" என்று அருளி மறைந்தார்.

**ந**ல்ல ஒரு நாளில் பகவான் காசியப முனிவருக்கும் திதிக்கும் வாமணன் என்ற மகனாகப் பிறந்தார். உரிய வயது வந்ததும் வாமணருக்கு உபநயனம் செய்யப்பட்டது.

**ப**கவான் வாமணராக அவதரித்தபோது பலி நர்மதை ஆற்றங்கரையில் உள்ள பிருகுகுசம் என்ற இடத்தில் அசுவமேத யாகத்தைச் செய்து கொண்டிருந்தான். வாமணர் அஸ்வமேத யாகம் செய்யுமிடத்திற்கு வந்தார்.

**வா**மணரைக் கண்டதும் பலி அவருக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பைக் கொடுத்து உபசரித்து ஆசனத்தில் அமர்த்தினான். பின், "பிராமணரே, எதையோ பெற விரும்பித்தான் தாங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். வேண்டியவற்றைக் கேளுங்கள்" என்றான்.

"**ம**ன்னரே எனக்குத் தேவையென்று கேட்க எதுவுமில்லை. தாங்கள் மகிழ்வுடன் கேட்டமையால் நான் மூன்றடி மண்ணை யாசகமாகப் பெற விரும்புகிறேன்" என்று சொன்னார்.

**அ**தைக் கேட்ட பலி, “பிராமணரே, நீர் சிறுபிள்ளையாக இருக்கிறீர். உமது காலடியால் அளந்து பெறும் மூன்றடி நிலத்தால் என்ன பயனைப் பெறபோகிறீர். அதனால் வேண்டியளவு நிலத்தைக் கேளும், பொருளைக் கேளும், பொன்னைக் கேளும்” என்று பலி சொன்னபோது வாமணர், “இது போதும் எனக்கு மூன்று அடி மண் தருவதாக முதலில் ஒப்புக்கொள்ளும்” என்றார் வாமணர்.

**அ**ப்போது அங்குவந்த அசுர குருவான சுக்கிராச்சாரியார் பலி தாரைவார்த்துக் கொடுப்பதற்காகக் கையில் வைத்திருந்த செம்பை வாங்கக் கை நீட்டியவாறு, “இவர் உங்களைத் திதியின் விருப்பத்திற்கமையப் பழிவாங்க வந்திருக்கும் திருமால். அதை அறியாது எதையும் செய்ய வேண்டாம்” என்று கூறினார்.

**கு**ருவே தாங்கள் சொல்வது உண்மையாக இருக்கலாம். ஆனால் பிரகலாதனின் குலத்தில் உதித்த நான் யாசகர் யாசிப்பதைக் கொடுக்காது விட முடியாது. அதனால் இந்த அந்தணர் கேட்டதை நான் கொடுத்தே தீருவேன். தயவு செய்து என்னைத் தடை செய்யாதீர்கள். இதனால் கேடு வந்தாலும் அது எனக்கு நன்மையாகவே முடியும்” என்றான் பலி.

**கு**ருவான சுக்கிராச்சாரியார் சொன்னதைக் கேட்காமையால் அவருக்குப் பெருங்கோபம் வந்தது, “எனது சொல்லை மதியாத நீ உனது அரசையும் செல்வங்களையும் இழந்து உயிர்துறப்பாய்” என்று சபித்துவிட்டுச் சென்றார். அப்போது பலியின் மனைவி குடத்தில் நீரைக் கொண்டு வந்து வாமணரது பாதங்களைக் கழுவிவிட்டு, அந்த நீரை எடுத்துத் தனது தலையில் தெளித்தாள்.

**ப**லி, வாமணர் கேட்ட மூன்று அடி நிலத்தைத் தாரை வார்த்துக் கொடுத்ததும் வாமணரது உருவம் சிறிது சிறிதாக வளர்ந்து பெருத்தது. அவரது கால்கள் தரையில் நிற்கத் தலை வானத்திற்கு மேலாக வளர்ந்தது. அதைக் கண்ட பலி மகிழ்வுடன் பகவானைத் துதித்தான்.


**வா**மணர் வலது காலைத் தூக்கி ஒரு அடி வைத்து விட்டு, பலியே, பூமி முழுவதையும் ஓர் அடியால் அளந்து விட்டேன். அடுத்த அடியால் ஆகாயம் முழுவதையும் அளந்துவிட்டேன். நீ தந்த கொடையானது மூன்றடி நிலம் மூன்றாவது அடி வைத்து அளக்க இடமில்லை” என்றார்.

“**ப**கவானே, நான் சொன்ன சொல் தவறமாட்டேன். அதனால் எனது தலையில் நீர் உமது காலை வைத்து மூன்றாவது அடி நிலத்தை அளந்து கொள்ளலாம்” என்றான்.

**அ**ப்போது அங்கு வந்த பிரமாவும், தேவர்களும் பலிக்கு நன்மை செய்யும்படி பகவானைப் பணிந்து வேண்டினர்.

**அ**தைக்கேட்ட பகவான் சொன்னார், "தேவர்களுக்குக் கூட கிட்டாத இந்திரப்பதவி இவனை வந்தடையும். இவன் செய்த பாவங்களுக்காகச் சிலகாலம் பாதாளத்தில் வசிக்க வேண்டும்" என்று கூறிவிட்டுப் பலியின் பக்கம் திரும்பி, "உனது உறவினர்களை அழைத்துக் கொண்டு பாதாள உலகிற்குச் செல். உனக்கு யாரும் இனித்தீங்கு செய்யமாட்டார்கள். மாறித் தீங்கு செய்தால் தீங்கு செய்வோரை எனது சக்கரம் கொல்லும். என்னைத் தரிசித்தமையால் உன்னிடமிருந்த அசுர குணம் உன்னை விட்டு அகன்றுவிடும்" என்று பகவான் சொன்னதும் பலி அவரை வணங்கிவிட்டுத் தனது உறவினர்களையும் அழைத்துக் கொண்டு பாதாளத்திற்குச் சென்றான்.

## 18. கௌதம முனிவரும் கங்கையும்



**சி**வபெருமானை விரும்பித் திருமணம் புரிந்து கொண்ட பார்வதியாருக்கு சிவனின் தலையில் இருந்த கங்கை பாய்வது பிடிக்காததால், கங்கையைச் சடையில் இருந்து அகற்றுமாறு பலமுறை வேண்டினார். சிவபெருமான் கங்கையின் மீது அதிக பிரியம் வைத்திருப்பதால் தனது தலையில் இருந்து கங்கையை அகற்ற விரும்பவில்லை. அதனால் பார்வதி பெரும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

**இ**வ்வாறு இருக்கையில் நாட்டில் தொடர்ந்து பதின்நான்கு ஆண்டுகள் மழை பெய்யாததால் பெரும் பஞ்சம் நிலவியது. பூமியில் உள்ள நீர் நிலைகள் யாவும் வற்றிக் காய்ந்து விட்டன. மரம் செடி கொடிகளெல்லாம் பட்டுப்போயின. பூமாதேவி பாலைவனமாகக் காட்சி கொடுத்தாள். அச் சமயம் கௌதம முனிவரின் ஆச்சிரமம் மட்டும் மிகுந்த செழிப்பாக இருந்தது. மரம் செடி கொடிகளெல்லாம் பச்சைப் பசேல் என நின்றன. அங்குள்ள பூமரங்கள் யாவும் பூத்துக் குலுங்கின. கனிதரு மரங்கள் சுமக்கமுடியாத காய்களுடன் நின்றன. அதைக் கண்ட ஏனைய முனிவர்கள் அனைவரும் கௌதம முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்தபோது, கௌதம முனிவர் அவர்களை அன்போடு வரவேற்று அவர்களுக்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்து கொடுத்தார்.

**பா**ர்வதிதேவியார், சிவனின் தலையில் இருந்து கங்கை நதி பாய்வதை விரும்பாமையால் பார்வதிதேவி கௌதம முனிவரது ஆச்சிரமத்திற்கு வந்தார். தாயின் வேதனையை நீக்க அவரின் மூத்த புதல்வாரன கணேசன் முயன்றும் முடியவில்லை. அதனால் கணேசரும்

தாயுடன் கௌதம முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்தார். பார்வதிக்கு ஜயா என்றொரு தோழி இருந்தாள். அவளும் பார்வதிதேவியோடு கௌதமரின் ஆச்சிரமத்திற்கு வந்திருந்தாள். அவளை அழைத்துக் கணேசர் சொன்னார், “நீ ஒரு பசுவாக மாறி கௌதம முனிவரின் வயலுக்குச் சென்று பயிர்களை மேய்வாயாக” என்றதும் ஜயா என்ற பார்வதியின் தோழி அழகிய பசுவாக மாறிக் கௌத்தமரின் வயலுக்குச் சென்று பயிர்களை மேய ஆரம்பித்தாள். தனது வயலில் ஒரு பசு மேய்வதைக் கண்ட கௌதம முனிவர் ஒரு தர்ப்பைப் புல்லை எடுத்து மேய்ந்து கொண்டிருக்கும் பசுவைக் கலைப்பதற்காக ஏவினார். தர்ப்பைப்புல் அம்புபோல விரைந்து சென்று மேய்ந்த பசுவைத் தாக்கியது. அதனால் அப் பசு மிக்க வேதனையடைந்து பலமாகக் கத்தியபடி நிலத்தில் விழுந்து இறந்தது. அதைக் கண்டு அங்கு வந்த முனிவர்கள் திகைத்துப் போனார்கள். பகுத்தறிவில்லாத பசு தற்செயலாக வயலில் வந்து மேய்ந்தால் அதைத் துரத்துவதை விட்டு விட்டு அதைக் கொன்றது மகாபாவம். பசுவை அனியாயமாகக் கொன்ற கௌதம முனிவரின் ஆச்சிரமத்தில் நாம் தங்குவது பாவம் என்று எண்ணி முனிவர்கள் அனைவரும் கௌதமரின் ஆச்சிரமத்தை விட்டு வெளியேறினர்.

**ப**ல காரணங்களைச் சொல்லிக் கௌதம முனிவர் அவர்களைத் தடுக்க முயன்றார். “நான் செய்தது பெரும் பாவமான செயல் என்று உணர்ந்து கொண்டேன். சகலதுமறிந்த முனிவர்களாகிய நீங்கள் இதற்கு என்ன பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று கூறினால் அதைச் செய்து முடிப்பேன்” என்று கூறினார்.


**இ**வ்வாறு நடைபெறும் என்று நினைத்துத் தான் கணேசர் ஜயாவைப் பசுவாக மாறிக் கௌதமரின் வயலில் மேயுமாறு வேண்டினார். கௌதமர் பிராயச்சித்தம் செய்யத் தயாராக இருப்பதாகக் கூறியதும் கணேசர் அவரின் அருகில் வந்து, “முனிவர் பெருமானே, சிவபெருமானின் சடையில் உள்ள கங்கையை இறக்கிப் பூமியில் பாயச் செய்யுங்கள். பாய்ந்து வரும் கங்கை நீர் பசுவின் உடலைத் தொட்டதும் பசு உயிர்பெற்று எழுந்து விடும். உங்களுக்கேற்பட்ட பழியும் பாவமும் நீங்கிவிடும்” என்று கூறினார். அதைக் கேட்ட முனிவர்கள், “கௌத்தமரே, முதலில் அதைச் செய்யுங்கள். பசுவைக் கொன்ற பாவத்தை நீக்குவது கஷ்டமானகாரியம். அதனால் சிவபெருமானின் சடையில் உள்ள கங்கை நீரைப் பூமிக்கு வரச் செய்யுங்கள். இல்லாவிட்டால் நாங்கள் செல்கிறோம் என்று முனிவர்கள் புறப்பட்டனர்.

“**நீ**ங்கள் புறப்பட வேண்டாம் இங்கேயே தங்கியிருங்கள். நான் கைலாயத்திற்குச் சென்று சிவபெருமானை நினைத்துக் கடும் தவம் செய்து நீங்கள் சொன்னது போலக் கங்கையைப் பூமிக்குக் கொண்டு வருவேன் என்று கூறிவிட்டுக் கைலாயத்திற்குச் சென்று கடுந்தவம் செய்தார். அவரின் கடுந்தவத்தைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் அவரின் முன் தோன்றி, “எம்பெருமானே, தங்கள் சடாமுடியில் தங்கியிருக்கும் கங்கையைப் பூமியில் பாய விட வேண்டும்” என்றார்.

**அ**தைக்கேட்ட சிவபெருமான், கங்கையைத் தனது சடையில் இருந்து இறக்கிப் பூமியில் பாயவிட்டார். கௌதமரின் வேண்டுகோளுக்காகக் கங்கை பூமியில் பாய்ந்ததால் அதற்கு “கௌதமி கங்கை” என்ற பெயர் ஏற்பட்டது.

**க**ங்கைநதிக்கு விண்ணில் நான்கு உப நதிகளும், பூமியில் ஏழு கிளை நதிகளும், பாதாளத்தில் நான்கு கிளை நதிகளும் உள்ளன.

## 24. கபோத தீர்த்தம்



**க**ளேதம் என்றால் புறா, இரண்டு புறாக்களின் ஞாபகார்த்தமாகவே இத் தீர்த்தம் உருவானது பிரம்மகிரி என்பது நீண்ட பரந்த இருளானகாடு. அக் காட்டில் ஒரு வேடன் வசித்து வந்தான். அவன் மிகவும் கொடியவன். இரக்கம் என்பது அணுவளவு கூட அவனது மனதில் இருக்கவில்லை. அவன் காட்டுமிருகங்களையும், பறவைகளையும் ஈவிரக்கமின்றிக் கொன்று தின்று விடுவான். அது மட்டுமன்றி அக்காட்டு வழியாகச் செல்லும் வழிப்போக்கர்களையும், பிராமணர்களையும், முனிவர்களையும் பிடித்துக் கொடுமைப்படுத்துவான்.

**ஒ**ருநாள் அவன் வேட்டையாடியபடி காட்டின் நடுப்பகுதிக்கு வந்தான். அப்போது அவன் வேட்டையாடிய சில புறாக்களும் வேறு பறவைகளும் உயிரோடு இருந்தன. அவற்றை அவன் தப்பிச் செல்லாதபடி மரக்கொடிகளால் இறுகக் கட்டி வைத்திருந்தான்.

**தி**டீரென்று வானம் இருண்டது. இடியும் மின்னலும் வானில் எழுந்தன. பெருமழை பொழிய ஆரம்பித்தது. மழை விடவில்லை. நேரஞ் செல்லச் செல்ல வேடனுக்குப் பசித்தது. மிகுந்த கவலையுடன் அவன் சென்று ஒரு பெரிய மரக்கிளையில் ஏறி அமர்ந்து அந்தக் கொடுமையான இரவுப் பொழுதைக் கழிக்க முடிவு செய்தான். நேரஞ் செல்லச் செல்ல அவனுக்குத் தனது மனைவி பிள்ளைகளின் ஞாபகம் வந்தது., “மற்றைய நாட்களில் அவன் அதிகாலையில் எழுந்து வேட்டையாடச் சென்றால் மதிய உணவுக்கு மிருகங்களையும், பறவைகளையும் வேட்டையாடிச் சென்று மனைவியிடம் கொடுத்துவிடுவான். அவள் மாமிசத்தைச் சுத்தப்படுத்திப் பிள்ளைகளுக்குச் சாப்பிடக் கொடுப்பாள். நேரம் தவறினால் பிள்ளைகள் பசியால் அழுவார்கள். அவர்கள் மதிய உணவுக்கு எவ்வளவு

கஷ்டப்பட்டார்களோ தெரியாது. மழையும் விடுவதாக இல்லை. மழை விட்டாலும் இரவில் வழி தெரியாது" என்று நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான்.

**வே**டன் தங்கியிருந்த மரத்தில் ஓர் ஆண் புறாவும் ஒரு பெண்புறாவும் நெடுங்காலமாக வாழ்ந்து வந்தன. பெண்புறாவை வேடன் பிடித்துக் கட்டிவைத்திருந்தான். இதை அறியாத ஆண்புறா நேரஞ் சென்றும் இருப்பிடத்திற்கு வராத தனது மனைவியைக் காணாது துன்பப்பட்டது.

**ம**ழை ஓய்ந்தமையால் வேடன் மரக்கிளையில் நித்திரையானான். அதைக் கண்ட பெண்புறாவும் ஆண்புறாவும் பேசத் தொடங்கின.

**வே**டன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தமையால் ஆண்புறா சொன்னது, "எனது அன்பான துணைவியே, உன்னைக் கொல்வதற்காக வேடன் உன்னைப் பிடித்துக் கட்டிவைத்திருக்கிறான். கட்டிவைத்தமையால் நீ அசையக்கூட முடியாது அவதிப்படுகிறாய். நாம் இணைந்த காலத்தில் இருந்து இன்றுவரை ஒரு கணம் கூடப் பிரிந்ததில்லை. அத்துடன் நீ வேதனைப்பட்டதையும் நான் காணவில்லை. காட்டில் எமக்குப் போதிய உணவு வகைகளை இறைவன் படைத்துள்ளான். அவற்றை வயிறாற உண்டுவிட்டு வானில் காதல் சிட்டுக்களாகப் பறந்து திரிந்து உலகில் உள்ள இன்பங்கள் யாவற்றையும் குறைவின்றி அனுபவித்தோம். இன்று கெட்டகாலம். அதனால் கொடியவனான வேடனிடம் அகப்பட்டுவிட்டாய். இன்னும் சிலமணி நேரங்களில் உனது உயிர் பிரிந்துவிடும். அதனால் உன்னை மீட்க நான் முயற்சிக்கிறேன். உன்னைப் பிரிந்து என்னால் தனித்து வாழ முடியாதென்பது உனக்குத் தெரியும்" என்று வேதனையுடன் கூறியவாறு அதன் அருகிற் சென்று கட்டைத் தனது அலகால் கொத்தியது.

**ஆ**ண்புறாவின் கூற்றை மறுத்த பெண்புறா சொன்னது, "வேண்டாம், இது தான் விதியென்றால் அப்படியே நடக்கட்டும். விதியைமாற்ற முடியாது. நாம் வேடர்களின் உணவுக்காகப் படைக்கப்பட்டவர்கள். ஒன்றை ஒன்று அழித்து உயிர் வாழ்வது தான் உலக வழக்கு. அதனால் உங்களது எண்ணத்தை மறந்து எமது விருந்தினனான வேடனுக்கு உதவுவதுதான் எமது கடன். வேடன் குளிரால் நடுங்குகிறான். அதை மாற்றுவதற்கான முயற்சியைச் செய். இறைவன் எமக்கு உதவுவான்" என்றது.

**ஆ**ண்புறா கடந்த காலத்தில் தாம் வாழ்ந்த இன்பமான வாழ்க்கையைப் பெண்புறாவுக்கு நினைவுபடுத்தியபோதும், அது ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் மனம் உடைந்த ஆண்புறா வேடனின் குளிரைப் போக்குவதற்காகச் சுள்ளிகளையும் சருகுகளையும் தனது அலகால் கொத்திக் கொண்டு வந்து தீமூட்டியது. அத்தீ வேடனுக்கு இதமாக இருந்ததால் அவன் ஆழ்ந்து உறங்கலானான்.

“எனது உயிரைவிட மேலான மனைவியே, உன்னைப் பிரிந்து ஒரு கணமும் நான் வாழமாட்டேன்” என்று பலத்துக் கூறிய ஆண்புறா தான் மூட்டிய தீக்குள் குதித்து இறந்தது. அதைக் கண்ட பெண்புறா மனம் வருந்தி, “நானும் உன்னைவிட்டு ஒருகணமும் பிரியமாட்டேன். அதனால் உன்னுடன் நான் உடன்கட்டை ஏறுகிறேன்” என்று சொல்லித் தானும் அத்தீயில் குதித்தது. அப்போது நித்திரைவிட்டெழுந்த வேடன் அவற்றின் பேச்சைக் கேட்டு மிக்க வேதனையடைந்தான். இவ்வாறான ஒரு துயரச் சம்பவம் நடைபெறும் என எதிர்பாராத வேடனின் மனம் சஞ்சலப்பட்டது, “இனிமேல் நான் மிருகங்களையும், பறவைகளையும் வேட்டையாட மாட்டேன்” என்று முடிவு செய்தான். இவ்வளவு காலமும் தான் பல மிருகங்களையும், பறவைகளையும் வேட்டையாடியதை நினைத்து மனம் வருந்தி, “இதற்கு என்ன பரிகாரம் செய்யலாம்” என்று சிந்தித்தான்.

புறாக்களின் தியாகத்தைக் கண்டு வியந்த மாவிஷ்ணு தங்க விமானம் ஒன்றை அனுப்பினார். அது இரண்டு புறாக்களையும் ஏற்றிக் கொண்டு வைகுந்தத்திற்குச் சென்றது.

புறாக்கள் விமானத்தில் ஏறு முன் மிகுந்த வேதனையுடன் நின்ற வேடனைப் பார்த்து, “நீ செய்தது பாவம் என உணர்ந்து பிராயச்சித்தம் செய்ய விரும்பினாய். அதனால் எமக்கு மகிழ்ச்சியாக உள்ளது. உனது பாவம் தீர வேண்டுமானால் இங்கு பாயும் கௌத்தம கங்கையில் பதினைந்து தினங்கள் நீராடியபின் “மகாவிஷ்ணுவை வணங்குவாயாக” என்று கூறின.

இவ்வாறு புறாக்கள் இரண்டும் தீயில் விழுந்த இடத்தைக், “கபபோத தீர்த்தம்” என்று அழைக்கின்றனர்.

## 25. கருட தீர்த்தம்



பெரும் நாகமாகிய அனத்தனின் மகன் மணிநாகன். நாகங்களுக்கு எதிரியான கருடன் தன்னைத் தாக்கக் கூடாது என்ற குறிக்கோளுடன் சிவபெருமானை நினைத்துப் பல காலம் தவம் செய்தான். அவனது தவத்தின் ஆற்றலை உணர்ந்த சிவபெருமான் அவன் முன் தோன்றி, “மணிநாகா, உனது மேன்மையான தவத்தைக் கண்டு மிகவும் மகிழ்ந்தேன்.

அதனால் உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்” என்றார்.

**சி**வபெருமானைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்த மணிநாகன், “சிவனே, தங்களை நேரில் கண்டதால் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். நாகங்களின் தலைவனான எனது தந்தையும், நானும், ஏனைய நாகங்களும் கருடனைக் கண்டதும் பெரும் பீதி கொள்கின்றோம். கருடன் எம் இனத்தவரைக் கண்டால் கொல்லாமல் விடமாட்டான். அதனால் என்னைக் கருடனால் கொல்ல முடியாத வரம் தரல் வேண்டும்” என்றான்.

**சி**வபெருமான் அவன் கேட்ட வரத்தை அருளிவிட்டு மறைந்தார். அதன்பின் மணிநாகன் பயமின்றி எங்கும் சென்று வந்தது. மணிநாகன் தனக்குப் பயப்படாது தன் முன்னே திமிருடன் செல்வதைக் கண்ட கருடன், “என்னால் உன்னைக் கொல்ல முடியாதே தவிர உன்னைச் சிறைப்பிடித்து அடைக்க முடியும்” என்று கூறி மணிநாகனைப் பிடித்துச் சிறையில் அடைத்தது. மணிநாகன் கருடனின் சிறைக்கூடத்தில் இருந்து சிவபெருமானை வழிபட்டுக் கொண்டிருந்தான்.

**ஒ**ருநாள் சிவபெருமான் நந்திதேவரை அழைத்துக் கேட்டார், “நந்தி, பல நாட்களாக நான் மணிநாகனைக் காணவில்லை. அவனுக்கு என்ன நேர்ந்தது”.

“**எ**ம்பெருமானே, மணிநாகன் கொல்லப்படமாட்டான் என்றுதானே வரம் கொடுத்தீர்கள். அதனால் கருடன் மணிநாகனைப் பிடித்துச் சிறையில் அடைத்துவிட்டான்” என்றார் நந்திதேவர்.

“**ந**ந்திதேவா, உடனே நீ மணிநாகனை விடுதலை செய்யும்படி விஷ்ணுவை நோக்கித் தவம் செய்” என்று சிவபெருமான் கூறினார்.

**ந**ந்திதேவர் உடனே விஷ்ணுவை நோக்கிக் கடுந்தவம் செய்தார். அதனால் மகிழ்ந்த விஷ்ணு நந்திதேவா, “சிவபெருமானைக் கேட்டால் தரமுடியாததையா நான் தரப்போகிறேன். உனது உக்கிரமான தவத்தால் மிக்க மகிழ்வடைந்தேன். நீ விரும்பிய வரத்தைக் கேள்”.

“**பெ**ருமானே, மணிநாகன் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து கருடனின் தாக்குதலில் இருந்து தப்பிவிட்டான். அதனால் அவனைக் கொல்ல முடியாத கருடன் அவனைப் பிடித்துச் சிறையில் அடைத்துவிட்டான். அவனை விடுவிக்கத்தான் சிவபெருமானின் கட்டளையை ஏற்றுத் தவம் செய்தேன். தயவு செய்து அவனை விடுவிக்கவும்” என்றார்.

**அ**தற்கு ஒப்புக் கொண்ட மகாவிஷ்ணு கருடனை அழைத்து, “மணிநாகனை உடனே விடுதலை செய்” என்று கட்டளையிட்டார்.

**அ**தனால் கோபங்கொண்ட கருடன் மகாவிஷ்ணுவிடம் சென்று சொன்னான், “எல்லாக் கடவுள்களும் தம் தொண்டர்களுக்கும், பக்தர்களுக்கும் உதவி செய்கின்றனர். எனது பரம எதிரி மணிநாகன். அவன் என்னை மதிப்பதில்லை. என்னோடு திமிராகப் பேசுவான். திமிராகவே நடந்து கொள்வான். அதை எப்படி நான் பொறுப்பது. அதனால் தான் நான் அவனைப் பிடித்துச் சிறையில் அடைத்தேன். இது தவறா? தங்களது கட்டளையை என்னால் மீற முடியாது. நீதியையும், தர்மத்தையும் உணர்ந்த நீங்கள் இவ்வாறு கூறியது எனக்கு வேதனையளிக்கிறது”.

**வி**ஷ்ணு சிரித்தார். பின்பு, “கருடா, நீ சொன்னது சரி. என்னைச் சுமப்பதால் நீ இளைத்துக் களைத்துப் பலவீனமடைந்துவிட்டாய். உன்னுடைய சக்தி, திறமை, சாமர்த்தியமான செயல்களால் தான் நான் அசுரர்களைப் போரில் வெல்ல முடிந்தது. உனக்கு மிக்க பலம் உள்ளது. உலகில் உன்னைவிடப் பலசாலி வேறு யார் உளர்?. அதனால் நீ எனது இந்தச் சிறு விரலைத் தாங்கி உனது திறமையையும், பலத்தையும் நிரூபி” எனக் கூறித் தனது சின்னிவரலைக் கருடனின் தலையின் மீது வைத்தார். கருடனால் அந்த விரலின் பாரத்தைத் தாங்க முடியவில்லை. பெரும் அவதிப்பட்டான். அவனது உடல் வலித்தது. அதனால் முனகியபடி நசுங்கினான். ஒருபோதும் இல்லாதவாறு கருடன் பலவீனனானான் அப்போது கருடனுக்கு மகாவிஷ்ணுவின் சக்தி புரிந்தது அதனால் வெட்கமடைந்து பெருமானைச் சரணடைந்தான்.

**அ**தன்பின் மகாவிஷ்ணு நந்திதேவரே, “மணிநாகனை அழைத்துச் சென்று சிவபெருமானிடம் ஒப்படையுங்கள்” என்று கூறிவிட்டுக் கருடனைப் பார்த்து, “கருடா, நந்திதேவருடன் சென்று சிவபெருமானைத் தரிசி. அவர் உனக்கு வேண்டிய அனைத்து வரங்களையும் அருள்வார்” என்றார்.

**ந**ந்திதேவருடன் சென்ற கருடன் சிவபெருமானை வணங்கித் தான் தவறாக எதுவும் செய்திருந்தால் மன்னிக்குமாறு சொன்னான். அதைக் கேட்ட சிவபெருமான், “கருடா, நீ இப்பொழுது பலமிழந்து காணப்படுகிறாய். அதனால் நீ சென்று கௌதமி கங்கையில் நீராடு. நீராடியதும் நீ முன்பைவிடப் பலமுள்ளவனாகவும், அருள் உள்ளவனாகவும் மாறுவாய்” என்றார்.

**க**ருடன் சிவபெருமானை வணங்கிவிட்டுக் கௌதமி கங்கையில் நீராடினான். அதன்பின் கருடனுக்கு முன்பிருந்த பலமும், வேகமும் வந்து சேர்ந்தது. கருடன் நீராடித் தனது பலத்தைப் பெற்ற அந்தத் தீர்த்தத்தை கருடதீர்த்தம் என்று அழைக்கின்றனர்.

## 26. விசுவாமித்திர தீர்த்தம்



**மு**ன்னொரு காலத்தில் உலகை முன்பு ஒருபோதும் வராத பஞ்சம் வந்து வாட்டியது. மழை பொய்த்ததால் பூமியில் உள்ள நீர் நிலைகள் யாவும் வற்றிவிட்டன. கொடுமையான வெப்பத்தால் மரம் செடி கொடிகள் யாவும் பட்டுப்போயின. விளை நிலங்கள் வெடித்துப் பிளந்திருந்தன. புல் பூண்டுகள் கூட வாடி வதங்கிவிட்டன.

**வி**சுவாமித்திர முனிவர் மனைவி, பிள்ளைகள், சீடர்களை அழைத்துக் கொண்டு தனது ஆச்சிரமத்தை விட்டு வெளியேறி கௌதமி நதிக்கரைக்கு வந்தார். அவர் வந்த வழிகளிலெல்லாம் மக்கள் பசியால் துடிதுடித்து ஓலமிட்டுக் கொண்டிருந்தனர். அவற்றைச் சகிக்க முடியாத விசுவாமித்திர முனிவர் மனதைக் கல்லாக்கிக் கொண்டு கண்களை மூடியபடி நடந்து வந்தார்.

**அ**வருக்குப் பசித்தது. ஆச்சிரமத்தில் பல்வேறு வகையான பழ மரங்கள் நின்றன. அவற்றில் இருந்து பெறும் பழங்களை அவர் கிராம மக்களுக்கும் கொடுப்பார். இப்போது அந்த மரங்கள் யாவும் பட்டுவிட்டன. வழியில் வெயிலின் கொடுமையைத் தாங்கிக் கொள்ள ஒரு மரங்கூட நிற்கவில்லை. பெரும் பெரும் விருட்சங்களே பட்டுவிட்டன.

**வி**சுவாமித்திர முனிவரது மனைவியும், பிள்ளைகளும், சீடர்களும் பசியால் வாடி வதங்கி நிற்கக்கூட வலுவில்லாதவர்களாக இருந்தனர். அதனால் விசுவாமித்திர முனிவரும் அவரது சீடர்களும் நதிக்கரையில் ஏதாவது உணவு கிடைக்குமா என்று தேடிப்பார்த்தனர்.

**ந**திக்கரையில் இறந்த நாயின் உடல் ஒன்று காணப்பட்டது. அதைச் சென்று தூக்கிய விசுவாமித்திர முனிவர் அதைத் துப்பரவு செய்து கடவுளுக்கும், சீடர்களுக்கும், தனது மனைவி மக்களுக்கும் கொடுக்குமாறும், அதில் ஒரு பகுதியை மூதாதையர்களுக்குப் படைக்குமாறும் கூறினர்.

**சீ**டர்கள் நாயின் இறைச்சியைச் சுத்தப்படுத்தி ஒரு கலசத்தில் வைத்தனர். அப்போது கழுகாக மாறி முனிவர் இருக்கும் இடத்திற்கு வந்த இந்திரன், இறைச்சி இருந்த கலசத்தைத் தூக்கிக் கொண்டு வானில் பறந்தான். விசுவாமித்திரருக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது. இந்திரனைச் சபிக்க நினைத்தார். அதை உணர்ந்த இந்திரன் நாயின் இறைச்சியை

அமிர்தமாக மாற்றிக் கொண்டு வந்து விசுவாமித்திர முனிவருக்குக் கொடுக்க அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார்.

“இந்திரா, நீ தான் மழைக்குரிய கடவுள். மழை பெய்யாததால் பூமியெங்கும் பெரும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் உயிர்கள் யாவும் உணவின்றித் துன்பப்படுகையில் நான் அமிர்தத்தை அருந்த விரும்பவில்லை. அதைக் கொண்டு செல். மக்கள் எல்லோரும் பசியால் துடிதுடிக்கும் போது நான் நாயின் இறைச்சியைக் கடவுளுக்குப் படைப்பதும், உண்பதும் பாவமாகாது” என்றார்.

முனிவர் அவ்வாறு சொன்னதும் இந்திரன் திகைத்துப் போனான். முனிவர் நாயின் இறைச்சியை உண்டால் தனக்குத் தீராத பாவம் வந்து சூழ்ந்துவிடும். அதனால் மழையைப் பெய்தால் முனிவர் நாயின் இறைச்சியை உண்ணமாட்டார். அதைக் கடவுளுக்கும் படைக்கமாட்டார் என நினைத்துப் பெரு மழையைப் பெய்வித்தான். அதனால் மகிழ்ந்த விசுவாமித்திர முனிவர் இந்திரனிடமிருந்து அமிர்தத்தைப் பெற்றுக் கொண்டார்.

விசுவாமித்திர முனிவர் இந்திரனிடமிருந்து கௌதமி நதிக்கரையில் அமிர்தத்தைப் பெற்றுக் கொண்ட இடம் ‘விசுவாமித்திர தீர்த்தம்’ எனப் பெயர் பெற்றது.

## 27. கௌதமி கங்கையின் மகிமை



சுவேதன் என்ற பிராமணன் ஒரு பெரும் சிவபக்தன். எந்நேரமும் அவன் சிவனின் நினைவாகவே இருப்பான். எந்த வேலையைச் செய்தாலும் அவன் சிவனை நினைத்தபடியே செய்வான். அவன் போகுமிடமெங்கும் சிவ நினைவுடன் பஞ்சாட்சர மந்திரத்தைச் சொல்லியபடி செல்வதால் அவன் செல்லுமிடமெங்கும் சிவனும் அவனுடன் செல்வார்.

சுவேதன் கௌத்தம முனிவரின் நண்பன். அவன் கௌதமி நதிக்கரையில் ஓர் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்து வந்தான். அவன் காலையிலும் மாலையிலும் கௌதமி நதியில் நீராடிய பின்பு சிவபூசை செய்வான். அதை ஒருபோதும் அவன் மறந்ததில்லை.

**மூ**ப்பின் காரணமாக அவன் வயோதிபனானான். அவனின் மரணநாள் வந்தது. அவனை யமபுரிக்கு அழைத்துச் செல்ல யமதூதர்கள் அவனது ஆச்சிரமத்திற்கு வந்தனர். அவர்களால் ஆச்சிரமத்துள்ச் சென்று சுவேதனின் உயிரைக் கவர முடியவில்லை.

**ய**மதூதுவர்கள் சுவேதனின் உயிரைக் கவரச் சென்று பலமணி நேரம் கழிந்தும் அவர்கள் திரும்பி வராததால் சித்திரகுப்தன் சென்று சென்றவர்கள் திரும்பி வரவில்லை என்று கூறினான். அதைக் கேட்ட யமதர்மராஜன் தனது தோழனான மிருதயுவை அழைத்து, "சுவேதனின் உயிரைக் கவரச் சென்ற எனது தூதுவர்களைக் காணவில்லை. சுவேதனது ஆச்சிரமத்திற்குச் சென்று என்ன நடைபெறுகிறது என்பதை அறிந்து வா" என்றான்.

**மி**ருத்யு யமனின் வேண்டுகோளை ஏற்றுச் சுவேதனின் ஆச்சிரமத்திற்கு வந்த போது யமதூதுவர்கள் ஆச்சிரமத்துக்குள்ச் செல்லாது ஆச்சிரம வாசலில் நிற்பதைக் கண்டு ஆச்சரியத்துடன் அவர்களின் அருகிற் சென்று, "ஏன் வாசலில் நிற்கிறீர்கள், உள்ளே சென்று சுவேதனின் உயிரைக் கவர்ந்து வாருங்கள்" என்றான்.

"**எ**ம்மால் ஆச்சிரமத்துள்ச் செல்ல முடியவில்லை. சுவேதனின் உயிரைக் கவர்ந்து விடாதபடி சிவபெருமான் அவனுக்குக் காவலாக உள்ளார். அவர் சுவேதனுடன் இருக்கும் போது எப்படி எம்மால் அவனின் உயிரைக் கவர்வது" என்று சொன்னார்கள்.

**ஆ**ச்சிரம வாசலில் சின்ற யமதூதர்களைக் கண்ட சிவகணம் ஒன்று, "நீங்கள் யார்? ஏன் இங்கே நிற்கிறீர்கள்"? என்று கேட்க மிருத்யு சொன்னான், "சுவேதனின் ஆயுள் முடிவடைந்து விட்டது. நாங்கள் யமனின் தூதுவர்கள். அவனது உயிரைக் கவர வந்திருக்கிறோம். இது எமது தலைவரான யமதர்மராஜாவின் உத்தரவு" என்று கூறிப் பாசக் கயிற்றைச் சுவேதனின் மீது வீசக் கோபங்கொண்ட அச் சிவகணம் தான் கையில் வைத்திருந்த தடியால் பலமுறை தாக்க மிருத்தியு இறந்து போனான்.

**அ**தைக் கேள்விப்பட்ட யமதர்மன் அளவுக்கதிகமான சினத்துடன் தனது பாதுகாவலர்களையும் அழைத்துச் சென்று சுவேதனின் ஆச்சிரமத்தைத் தாக்கினான்.

**சு**வேதனுடன் சிவபெருமானும், நந்தியும், கணேசனும், முருகப் பெருமானும் இருந்தனர். அவர்களுக்கு யமனின் செயல் பிடிக்காததால் யமனையும், அவனது பரிவாரங்களையும் தாக்கத் தொடங்கினர். அவர்களின் மாபெரும் சக்திக்கு முன்னால் யமனால் போரிட முடியவில்லை.

**மு**ருகப் பெருமானுக்குக் கடுங்கோபம் வர அவர் தனது வேலாயுதத்தால் யமனைத் தாக்க யமன் இறந்து போனான்.

**போ**ரை முடிவுக்குக் கொண்டு வர விரும்பிய தேவர்களுக்கு கௌதம முனிவர் சொன்னார், "யமன் சிவனிட்ட தொழிலையே செய்தான். அதனால் அவனில் எந்தப் பிழையும் இல்லை. சிவபக்தர்களைச் சிவகணங்கள் தான் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். அவர்களை எக்காரணங் கொண்டும் யமபுரிக்கு அழைத்துச் செல்ல முடியாதென்பதும் சிவனின் கட்டளை. அதன்படி சிவகணங்கள் சுவேதனின் உயிரைச் சுவர்க்கத்திற்குக் கொண்டு செல்வது தான் சரி" அதை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். சிவகணங்கள் சுவேதனைச் சொர்க்கத்திற்கு அழைத்துச் சென்றன.

**அ**ப்போது கௌதமி நதியின் தீர்த்தத்தை நந்திதேவர் கொண்டு வந்து யமன் மீது தெளிக்க யமன் உயிர்பெற்று எழுந்தான்.

## 28. குபேரன்



**வி**ச்சர முனிவர் தவபலம் மிக்கவர். அவருக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். மூத்த மனைவியின் மகனான குபேரன் இலங்கையின் அரசன். செல்வ வளம் மிக்க இலங்கை நாட்டைக் குபேரன் நீதிநெறி தவறாது ஆண்டு வந்தான். அவனது ஆட்சிக் காலத்தில் இலங்கையில் வாழ்ந்த மக்களும் பெரும் செல்வந்தர்களாகத் திகழ்ந்தனர். அதனால் இலங்கையின் புகழ் உலகெங்கும் பரவியது.

**வி**ச்சிர முனிவரின் இரண்டாவது மனைவி ஓர் அரக்கி. அவள் அரக்க வம்சத்தைச் சேர்ந்தவள். அவளுக்கு இராவணன், கும்பகர்ணன், விபீஷணன் என்ற மூன்று புத்திரர்கள் பிறந்தனர்.

**இ**லங்கை நாட்டைக் குபேரன் பேரும் புகழுடன் ஆண்டு வந்தான். குபேரன் பேரோடும் புகழோடும் வாழ்வது அந்த அரக்கிக்குப் பிடிப்பதில்லை. அதனால் அவள் தனது பிள்ளைகளுக்கு எப்போதும் துர்ப்போதனைகள் சொல்வாள். பெரும் செல்வநாடான இலங்கையைக் குபேரனிடமிருந்து கைப்பற்றும் படி வற்புறுத்தினாள். அதனால் அவளது மூத்தமகனான இராவணன் காட்டுக்குச் சென்று பிரம்மனை நோக்கிக் கடுந்தவம் செய்தான்.

**இ**ராவணனின் கடுந்தவத்தால் மகிழ்ந்த பிரம்மன், இராவணன் முன்தோன்றி, "உனக்கு என்ன வரம் வேண்டும்"? என்று கேட்டார். இராவணன் தான் இலங்கையைக் கைப்பற்றி ஆள வேண்டும்" என்று கேட்டான். இராவணன் கேட்ட வரத்தை அளித்த பிரமன் மறைந்துவிட்டார்.

**இ**வ்வாறு வரம் பெற்ற இராவணன் தனது சகோதரர்களான கும்பகர்ணனுடனும் விபூசனனுடனும் சேர்ந்து குபேரனுடன் போர் செய்து இலங்கையைக் கைப்பற்றினான். அத்துடன் குபேரன் ஆகாயமார்க்கமாகச் சென்று வந்த புஷ்பக விமானத்தையும் கைப்பற்றினர். போரில் தோல்வியடைந்த குபேரன் தப்பி ஓடிவிட்டான். அதனால் கோபங்கொண்ட இராவணன் தப்பி ஓடிய குபேரனுக்கு யாராவது அடைக்கங்கொடுத்தால் அவர்களுக்கு மரணதண்டனை அளிக்கப்படும் என்று முரசறிவித்தான். அதற்குப் பயந்து யாரும் குபேரனுக்கு அடைக்கலம் கொடுக்கவில்லை.

**செ**ய்வதறியாது தவித்த குபேரன் ஈற்றில் தனது பாட்டனாரான புலஸ்தியரிடம் சென்று தனது நிலையைக் கூறி வேதனைப்பட்டான். புலஸ்தியர் அவனைக் கௌதமியாற்றை அடைந்து அதன் கரையில் ஆச்சிரமம் அமைத்துச் சிவனை நோக்கித் தவம் செய்யுமாறு கூறினார்.

**த**னது பாட்டனாரான புலஸ்தியர் கூறியவாறு கௌதமி ஆற்றங்கரைக்குச் சென்று ஓர் ஆச்சிரமம் அமைத்துச் சிவனை நோக்கி நெடுங்காலம் தவம் செய்தான். அவனின் வலிமையான தவத்தைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் அவனின் முன்தோன்றி அவனை நிதிக்கு அதிபதியாக்கினார். குபேரன் மிகுந்த மகிழ்வுடன் சிவபெருமானுக்கு நன்றி கூறினான்.

## 24. அரிச்சந்திரன்



"**மு**னிவர்களே, எந்தெந்த நதிக்கரையில் புனித ஆலயங்கள் இருக்கின்றனவோ அவற்றைக் கூறுகிறேன் கேளுங்கள்" நதிகளில் கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, கண்டனி, சிந்து, கோமதி, தமசா, காவிரி, சந்திரபாகா, சரயு, பிரமதி ஆகியவை சிறந்த தீர்த்த நதிகளாகும். இவை தவிர மேலும் பல புனித நதிகள் உண்டு. சமுத்திரத்தில் சங்கமமாகும் நதிகள் மிகவும் உன்னதமான புண்ணிய தீர்த்தங்களாகும்.

**பு**னித தலங்களில் புஷ்கரசேத்திரம், குருசேத்திரம், தர்மாரண்ணியம், பிரபாசம், பிரயாகை, நைமிசாரண்யம், மேரு பார்வதம், ஸ்ரீசைலசம் முதலியன மிகவும் பரிசுத்தமான தலங்களாகும். மனம், பொருள், செயல் ஆகிய மூன்றும் தூய்மையாக இருந்தல் வேண்டும். மனத்தை ஒருபோதும் சுத்தமாக வைத்திருக்க முடியாது. இதனால் தலயாத்திரையும், தீர்த்தயாத்திரையும் பயனற்றுப்போகும். மனதைத் தூய்மைப்படுத்தியபின் தீர்த்தமாடுவதே பயனள்ளது. மனதைப் புனித தீர்த்தங்கள் சுத்தப்படுத்தாது. சுத்தமான மனதை தீர்த்தம் புனிதமாக்கும். வசிட்டர், விசுவாமித்திரர் போன்றோர் புனித கங்கைக் கரையில் வசித்த போதும் இச்சை உடையவர்களாகவும், காமபோகங்களில் விருப்புடையவர்களாகவுமே இருந்தனர். நல்லவர்களின் உறவு மனத்தூய்மையைத் தரும். அது தீர்த்த யாத்திரையின் பயனையும் தரும்.

**வ**சிட்ட முனிவர் கங்கைக் கரையில் வசித்த போதும் விசுவாமித்திரர் மீது பகை கொண்டவராகவே இருந்தார். அதனால் இருவரும் கடுமையாக யுத்தம் செய்து, அரிச்சந்திரன் காரணமாக விசுவாமித்திரரைக் கொக்காகும்படி சபித்தார். விசுவாமித்திரர் வசிட்டரை ஆடி என்னும் பறவையாகும்படி சபித்தார்''

''**கு**ருவே, உன்னதமான இரு முனிவர்களுக்கிடையில் என்ன காரத்தால் பகை உண்டானது?'' என்று ஒரு முனிவர் கேட்டார்.

''**அ**ரிச்சந்திரன் என்று ஒரு மன்னன் இருந்தான். அவனுக்குப் பிள்ளைகள் இல்லை. அதனால் அவன் வருணனைக் குறித்து நரமேதயாகம் செய்வதாகச் சங்கர்ப்பம் செய்தான். அதன் பயனாக அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். அதனால் மகிழ்ந்த அரிச்சந்திரன் முனிவர்களுக்கும், மக்களுக்கும் தானதருமம் செய்தான். அப்போது வருணன், ஒரு கிழப்பிராமண வடிவம் எடுத்து அரிச்சந்திரனிடம் வந்து, ''நான்தான் வருணன் உனக்கு மகப்பேறு உண்டானால் நரமேதயாகம் செய்வதாகச் சங்கர்ப்பம் செய்தாய் அதன்படி உனது மகனைப் பசுவாகக் கொண்டு நரமேதயாகத்தைச் செய்'' என்று கூறினான். அதைக் கேட்ட அரிச்சந்திரன் மிகவும் வேதனையடைந்து பின் ஒருவாறு தேறி, ''எனது சத்தியவாக்கைக் காப்பாற்றிக் கொள்கிறேன். இப்போது எனது மனைவி பிரசவத்தால் தீட்டாக இருக்கிறாள். தீட்டுக் கழிந்ததும் செய்கிறேன்'' என்றான்.

**ஒ**ரு மாதம் கழியப் பிரசவத் தீட்டுக் கழிந்தது. அதன்பின் வருணன் வந்து, ''அரிச்சந்திரா, தீட்டுக் கழிந்தபின்பும் ஏன் யாகத்தைச் செய்யவில்லை?'' என்று கேட்டான்.

''**சு**வாமி, தீட்டுக் கழிந்து விட்டது. ஆனால் உபநயனம் செய்யாத பிள்ளையை எப்படி யாகப் பசுவாக்கலாம். அதனால் உபநயனம் செய்யும் வரை பொறுத்திருங்கள்'' என்றான் அதைக் கேட்ட வருணன் சென்றுவிட்டான்.

அரிச்சந்திரனின் மகனான லோகிதாசன், தனது தந்தை தன்னை யாகப் பசுவாக்கி யாகத்தின்போது பலியிட்டுவிடுவார் என்று தெரிந்து அரண்மனையை விட்டுச் சென்று விட்டான். அதன்பின் வருணன் அரிச்சந்திரனிடம் வந்தபோது அவன் மனம் வருந்தித் தனது மகன் எங்கோ ஓடிச் சென்றுவிட்டான் என்று சொல்ல வருணன் பெருங்கோபம் கொண்டு, ‘‘நீ உனது புத்திரபாசத்தால் வஞ்சித்துவிட்டாய். அதனால் உனக்கு ஜலோதரம் என்ற கொடிய வியாதி உண்டாகட்டும்’’ என்று சபித்துவிட்டுச் சென்றான். அதைத் தாங்க முடியாது அரிச்சந்திரன் பெருந்துன்பப்பட்டான்.

வியாதியால் துன்பப்படும் அரிச்சந்திரனது உடல்நிலைபற்றி லோகிதாசன் அறிந்தபோதும் அவன்தான் மறைந்திருந்த மலைக்குகையை விட்டு வெளியே வரவில்லை. ஒரு நாள் அம்மலைச் சாரல் வழியாகச் சென்ற வழிப்போக்கன் ஒருவன் லோகிதாசனைக் கண்டுவிட்டு, ‘‘உனது தந்தை நோயால் பெரும் துன்பப்பட நீ இங்கு மறைந்து இருக்கிறாயா? இது ஒரு நல்ல மகனுக்கு அழகாகுமா. துன்பப்படும் உனது தந்தையின் துன்பத்தை நீக்காத நீயும் ஒரு மகனா? ஏன் பிறந்தாய்?’’ என்று ஏசிவிட்டுச் சென்றான். அதனால் மனம் வருந்திய லோகிதாசன் தந்தையைக் காணப் புறப்பட்டு வந்தபோது இந்திரன் பிராமண வேடந்தாங்கி வந்து அவனை வழியில் சந்தித்துச் சொன்னான், ‘‘அரச குமாரனே, இப்போது நீ உன் தந்தையைக் காணச் செல்வதால் என்ன பயன் உண்டாகப் போகிறது? உனது தந்தையின் வியாதியை யாராலும் நீக்க முடியாது. உன்னால் நீக்க முடியுமென்றா சொல்கிறாய்’’ என்று கேட்டான்.

## 30. அரிச்சந்திரனின் யாகம்



இவ்வாறு இந்திரன் அடிக்கடி வந்து சொன்னமையால் லோகிதாசன் தந்தையின் நினைவை மறந்துவிட்டான். அவன் மாயைக்கு ஆளாகித் தொடர்ந்து தலைமறைவாகவே இருந்து வந்தான். இந்நிலையில் அரிச்சந்திரன் தனது குல குருவான வசிட்டரைச் சந்தித்து தனக்கு வந்த கொடிய நோயைத் தீர்க்கும் வழியைக் கேட்டான்.

‘‘மன்னா, புத்திரர்கள் பதின்மூன்று வகை என்று அறநூல்கள் கூறுகின்றன. அவர்களுள் விலைக்கு வாங்குபவனும் புத்திரன் தான். அதனால் ஒரு பிராமணனின் புத்திரனை விலைக்கு வாங்கிப் பலி கொடுத்தாலும் உனது கொடிய நோய் நீங்கும்’’ என்றார் வசிட்டர்.

அதன்படி அரசன் தனது தேவையை முரசு மூலம் அறிவித்தான். அமைச்சர்கள் பல்வேறு ஊர்களுக்குச் சென்றனர். அப்போது ஓர் ஊரில் மிகவும் ஏழையான ஒரு பிராமணன் தனது இரண்டாவது ஆண் பிள்ளையான கனச்சேபன் என்பவனை அப்பிராமணன் விலைக்குக் கொடுத்தான்.

**அ**தனால் அரசன் மிகவும் மகிழ்ந்து கனச்சேபனை யூபஸ்தம்பத்தில் கட்டி நர யாகத்தை ஆரம்பித்தான். அப்போது அங்கு வந்த விசுவாமித்திரர் யூபஸ்தம்பத்தில் கட்டப்பட்டிருந்த கனச்சேபனைப் பார்த்து இரங்கி அரசனிடம் சென்று, "நரபலியிடுவது மகாபாவம். அதனால் அவனைவிடுவித்து விடு" என்று சொன்னார். அவரது வார்த்தைகளைக் கேளாது அரிச்சந்திரன் யாகத்திற்கான வேலைகளைச் செய்தான்.


**அ**தனால் மிக்க கோபங்கொண்ட விசுவாமித்திரர் கனச்சேபனின் அருகில் வந்து, "மகனே, பயப்படாதே, நான் சொல்லித்தரும் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிரு" என்று கூறிவிட்டுச் சென்றார். அச்சிறுவன் அந்த வருண மந்திரத்தை ஓயாது உச்சரித்துக் கொண்டிருந்தான். அதனால் மகிழ்ந்த வருணன் கீழே இறங்கி வந்து கனச்சேபனை அவிழ்ந்து விட்டு விட்டு அரிச்சந்திரனின் நோயையும் குணப்படுத்தி விட்டுச் சென்றான்.

**அ**ரிச்சந்திரன் மீது தீராத கோபங்கொண்ட விசுவாமித்திரர் அவனைப் பழிவாங்குவதற்காகக் காத்திருந்தார். ஒரு நாள் அவன் வேட்டைக்குச் சென்ற போது தவ முனிவர் வேடத்தில் அவனை வழிமறித்த விசுவாமித்திரர் தந்திரமாக அவனது நாடு நகரங்களை அபகரித்துக் கொண்டார். அதன்பின் தனது நிஜ உருவத்தைக் காட்டினார். அவரைக்கண்ட அரிச்சந்திரன் "கெட்ட எண்ணம் படைத்த நீசனே, அந்தண வேடந்தரித்து ஏமாற்றிய வீணனே, கொக்குப்போலக் காத்திருந்து அரிச்சந்திரனின் செல்வம் முழுவதையும் விழுங்கிவிட்டாய் அதனால் கொக்காகக் கடவாய்" என்று சபித்தார். அதனால் கோபங்கொண்ட விசுவாமித்திரர், "வசிட்டனே, நான் எவ்வளவு காலம் கொக்காக இருப்பேனா, அவ்வளவு காலம் நீ ஆடிப் பறவையாக இருப்பாய்" என்று மறு சாபமிட்டார்.

"**கொ**க்காகவும், ஆடிப்பறவையாகவும் மாறிய இரு முனிவர்களும் தம் பழைய பகையை மறக்காது அடிக்கடி போரிட்டு இரத்தக் காயங்களுடன் வாழ்ந்தனர். இது சித்தசுத்தி இல்லாததால் ஏற்பட்டவினை".

"**மு**னிவர்களே, வசிட்டர் பிரமாவின் புத்திரர். அதனால் பிரமா அவ்விருவரையும் சந்தித்துப் பேசிச் சமாதானப்படுத்தி அவர்களைச் சித்தசுத்தி செய்து நண்பர்களாக்கிவிட்டுச் சென்றார். சித்தசுத்தியேற்பட வேண்டுமானால் பற்றற்ற மனதுடன் மகாவிஷ்ணுவை ஆராதித்துத் தியானம் செய்தல் வேண்டும். அதை விட்டு விட்டு தீர்த்தயாத்திரை, தலயாத்திரை விரத அனுஸ்டிப்புச் செய்வதால் சித்தசுத்தி ஏற்படமாட்டாது"

## 31. வசிட்டரின் சாபமும், முனிவரின் மோகமும்



“முனிவரே, வசிட்ட மகரிஷியின் சரிதையைக் கூறுங்கள். அவருக்கு மித்திராவருணி என்ற பெயர் எப்படி வந்தது?” என்று முனிவர் ஒருவர் கேட்டார்.

“நிமி என்ற அரசனால் வசிட்டர் சபிக்கப்பட்டார். அதனால் அவர் தனது தேகத்தை இழந்து, பிரமாவின் கட்டளையால் மித்திராவருணனிடம் மறுபடியும் பிறந்தார் அதனால் அவருக்கு மித்திராவருணி என்ற பெயர் உண்டானது”.

“குருதேவா, நிமி ஏன் வசிட்டரைச் சபித்தான். பிரமரிஷியான வசிட்டருக்கு அச் சாபம் எப்படிப்பலித்தது” ஒரு முனிவர் கேட்டார்.

“நிமி மன்னன் விஷ்ணுவின் அருளைப் பெறுவதற்காகப் பெரியதொரு யாகம் செய்ய விரும்பி வசிட்டர் முதலிய பல முனிவர்களை அழைத்துத் தனது விருப்பத்தைக் கூறி, “எமது குல குருவான வசிட்ட முனிவர்தான் இந்த யாகத்தை நடத்தித் தரவேண்டும். இதை நான் ஐயாயிரம் ஆண்டுகள் நடத்தவிருக்கிறேன்” என்று வசிட்டரைப் பணிந்து கூறினான்.

“மன்னா, சில தினங்களுக்கு முன்பு தேவேந்திரன் ஒரு யாகத்தை ஐந்நூறு ஆண்டுகள் நடத்தித்தரும்படி வேண்டினான். அதற்கு நான் ஒப்புக்கொண்டுவிட்டேன். அதை முடித்துக் கொடுத்துவிட்டு உனது யாகத்தை நடத்தித் தருகிறேன்” என்றார்.

“சுவாமி, நான் யாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து முடித்துவிட்டேன். தாங்கள் எமது குலத்தின் குரு. அதனால் இவ்வாறு கூறுவது முறையல்ல. எனது யாகத்தை முடித்துவிட்டுச் செல்லுங்கள்” என்றான் நிமி மன்னன். வசிட்டர் அதைக்கேளாது சென்றுவிட்டார்.

நிமி மன்னன் உடனே கௌத்தம முனிவரை அழைத்துப் பெரும் ஆடம்பரமாக யாகத்தைத் தொடக்கிப் பெரும் பொருள் செலவு செய்து யாகத்தைச் செய்தான். இந்திரனது யாகத்தை முடித்துவிட்டு வந்த விசுவாமித்திரர் நிமியைச் சந்திக்கச் சென்றபோது அவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். அதனால் கோபங்கொண்ட விசுவாமித்திரர், “இவனது தேகம் பூமியில் விழட்டும்” என்று சாபமிட்டார்.

**அ**ரச காவலர்கள் முனிவர் சாபமிட்டதை நிமியிடம் சொல்ல, அவன் வசிட்டரைத் தேடிவந்து, ‘‘நான் யாகம் செய்து தருமாறு எமது குல குருவான உங்களைக் கேட்ட பின்பு தான் கௌதம முனிவரைக் கொண்டு யாகத்தைத் தொடங்கினேன். இதில் என்ன குற்றமுண்டு. குற்றம் செய்யாத என்னைச் சபித்த உம்மை, என்னாலும் சபிக்க முடியும். எனது தேகம் பூமியில் விழுந்ததைப் போல உமது தேகமும் விழட்டும்’’ எனச் சபித்தான்.

**வ**சிட்டர் மிகுந்த துக்கத்துடன் தனது தந்தையான பிரமதேவரிடம் சென்று, ‘‘தந்தையே, நிமி மன்னன் எனக்கு உடல் இல்லாமல்போகும்படி சபித்து விட்டான். உடல் இல்லாமல் எப்படி வாழ முடியும். தயவு செய்து இதற்கு ஒரு வழி செய்யுங்கள்’’ என்றார்.

**அ**வருக்காகப் பரிதாபப்பட்ட பிரமதேவன், ‘‘மகனே, நீ மித்திராவருணருடைய தேகத்தில் கலந்திரு. பிறகு சாப நீக்கம் பெறலாம்’’ என்றார். அந்நிலையில் ஒரு நாள் தேவகன்னியான ஊர்வசி தற்செயலாக மித்திராவர்ணரின் ஆச்சிரமத்திற்குத் தனது தோழிகளுடன் வந்தாள். அவளின் அழகில் மெய்மறந்த மித்திராவர்ணர் அவளை வசப்படுத்தி அவளோடு கூடி இன்பமாக வாழ்ந்தார். அவளும் அவரைப் பிரியாது வாழ்ந்தாள். ஒரு நாள் இருவரும் கூடிக்குலாவியபோது அவரது இந்திரியம் ஒரு கும்பத்தில் விழ அதிலிருந்து அகத்தியரும் வசிட்டரும் வெளியே வந்தனர். அகத்தியர் உடனே காட்டுக்குச் சென்றார். வசிட்டர் அங்கிருந்து கல்வி கேள்விகளிலும், ஞானத்திலும் சிறந்து விளங்கினார். அவரின் திறமையை உணர்ந்த இஷ்வாகு குலத்து மன்னன் அவரைத் தனது குலகுருவாக்கிக் கொண்டான். மித்திராவர்ணரிடம் வசிட்டர் பிறந்தமையால் அவருக்கு மித்திராவருணி என்ற பெயர் உண்டானது.

## 32. விருத்த கௌத்தமனும் விருத்த சங்கமமும்



**கௌ**தம முனிவருக்கு விருத்த கௌதமன் என்றொரு மகன் இருந்தான். அவன் ஒரு மூக்கறையன். அதனால் சக மாணவர்கள் தன்னைக் கேலி செய்வார்கள் என்று நினைத்துக் குருகுலத்திற்குச் சென்று கல்வி கற்கவில்லை. கௌதம முனிவர் எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்கவில்லை. கௌதம முனிவர் பெரும் தவவலிமை பெற்றார். வேதங்களையும் உபநிடதங்களையும் வேறு பல கற்க வேண்டிய நூல்களையும் கற்றவர். அதனால் அவனுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க விரும்பினார்.

கல்வியால்தான் சகல செல்வங்களையும் பெறலாம். கல்வி கற்றால் உடலில் உள்ள குறையாடுகளை அறிஞர்கள் கவனிக்கமாட்டார்கள். கற்ற கல்வியைத்தான் மதிப்பர். அதனால் உடலில் உள்ள குறைபாடுகள் அகன்றுவிடும் என்று பல்வேறு உபதேசங்களைச் செய்தபோதும் விருத்த கௌதமன் அவற்றைக் கேட்கவில்லை. பலமுறை முயன்றும் அவன் அவரது சொற்களைக் கேளாமையால் விதிப்படி எதுவும் நடக்கட்டும் என்று விட்டுவிட்டார். இருந்தபோதும் விருத்த கௌதமன் சில மந்திரங்களை ஜெபித்தவண்ணம் வாழ்ந்து வந்தான்.

**இ**ளமைப் பருவத்தை அடைந்த அவனுக்கு வீட்டில் தனித்து இருக்கப் பிடிக்கவில்லை. அதனால் உலகைச் சுற்றிவரக் கிளம்பினான். அவன் மூக்கறையனாக இருந்தமையால் அவனுக்குத் திருமணமாகவில்லை. கௌதம முனிவர் தனக்கு உறவினரான சிலரிடம் விருத்த கௌதமனுக்குப் பெண் கேட்டும் அவர்கள் கொடுக்க மறுத்துவிட்டனர். அதனால் முனிவர் பெருங்கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். உலகைச் சுற்றிப் பார்க்க கிளம்பிய விருத்த கௌதமன் சிதகிரி என்ற இடத்தை அடைந்தான். அங்கு ஓர் அழகிய குகைகயைக் கண்டான். அதைப் பார்ப்பதற்காகக் குகையின் உள்ளே சென்றான். குகை அழகாகவும் ஒருவர் வசிக்கத்தக்கதாகவும் இருந்தது. அதனால் தான் அங்கு வசிக்கலாம் என்று எண்ணிய படி நின்ற போது அங்கு மிகவும் வயது முதிர்ந்த மெல்லிய ஒரு முதிய பெண்ணைக் கண்டான். அவளால் எழுந்து நடமாடக் கூட முடியவில்லை. அதனால் அவளிடம் ஆசிபெற எண்ணி அவளது பாதங்களைத் தொட்டு வணங்க முற்பட்டபோது அப்பெண், "தன்னை வணங்க வேண்டாம். ஏனென்றால் நீ எனது குரு" என்றான்.

**அ**தைக் கேட்ட விருத்த கௌதமன் வியப்படைந்து, "முதிய பெண்ணே, நான் ஓர் இளைஞன். நீ வயோதிபப் பெண். அத்துடன் நான் குருகுலத்திற்குச் சென்று கல்வி கற்கவில்லை. கற்காத நான் எப்படி ஒருவருக்குக் குருவாக முடியும்" என்று கேட்டான்.

**அ**தைக் கேட்ட அந்த வயோதிபப் பெண் தனது வரலாற்றைக் கூறினாள், "இளைஞனே, ரித்வஜன் என்றோர் இளவரசன் இருந்தான். அவன் அர்ஷ்டிசேனன் என்ற அரசனின் மகன். மிகவும் அழகானவன். கற்க வேண்டியவற்றையெல்லாம் கற்று அறிஞனாக இருப்பவன்".

"**அ**வன் ஒருநாள் வேட்டையாடிக் கொண்டு இக்குகைக்கு அருகில் வந்தான். அங்கே ஒரு தேவலோக மங்கை நின்றாள். அவளின் பெயர் கஷ்யமை. அவளின் அழகு இளவரசனைக் கவர்ந்தது. அதனால் அவளின் அருகே சென்று தனது காதலை வெளிப்படுத்தினான். தேவலோக மங்கையும் அவனின் அழகில் மையல் கொண்டு, அவனைத் திருமணம் செய்ய விரும்பினாள். ரிதத்வஜன் கஷ்யனமியைத் திருமணம் செய்து சிலகாலம் குகையில் இன்பமாக வாழ்ந்தனர். பின் ரிதத்வஜன், கஷ்யமையையும், குழந்தையையும் குகையுள் விட்டு விட்டு நாடு திரும்பிவிட்டான். சிலகாலம் செல்லகஷ்யமை தனது பெண் குழந்தையை அழைத்து, "நீ எக்காரணம் கொண்டும் குகையை விட்டு வெளியே வரக்கூடாது. குகைக்குள் வந்து

உன்னைக் காணும் முதலாவது ஆண்மகன் தான் உனது கணவனாவான்" என்று கூறிவிட்டுத் தேவலோகம் சென்றுவிட்டாள். அவள் ஈன்ற பெண் குழந்தை தான் நான். நான் எனது கணவனின் வருகைக்காகக் காத்திருந்து முதியவனாகிவிட்டேன். இன்று தான் நான் வாழ்வில் முதல்முறையாக ஓர் ஆணைச் சந்திக்கிறேன். எனது தாயார் சொன்னது போல நான் முதலில் சந்திக்கும் ஆண் தான் எனது கணவன். அதனால் நீ தான் எனது கணவன்" என்றாள். நீ எப்படி எனது குருவாவாய் என்று விருத்தகௌதமன் கேட்டான்.

"**ஒ**ரு பெண்ணுக்கு அவனின் கணவன் தானே தாய், தந்தையர், உற்றார், உறவினர், குரு எல்லாம்" என்றாள். அந்த மூதாட்டி.

"**மூ**தாட்டியே உனது எண்ணம் நிறைவேறாது. முழுமையாக முதுமை அடைந்த உன்னை நான் எப்படி எனது மனைவியாக்க முடியும்? உனது பூட்டனின் வயதுடையவன் நான். திருமணம் என்பது தாலிகட்டிக் கணவன் மனைவியாவது என்றா நினைக்கிறாய்? வாழ்க்கையில் எத்தனையோ ஆயிரம் இன்பதுன்பங்கள் உண்டு. அவற்றை அனுபவிக்க இளமை வேண்டும். நடக்கக் கூட வலுவில்லாத உன்னை நான் எப்படித் திருமணம் செய்வது" என்றான்.

"**நீ** என்னைத் திருமணம் செய்யாவிட்டால் நான் தற்கொலை செய்து கொள்வேன்" என்றாள் அந்த மூதாட்டி.

**அ**வளிடமிருந்து தப்புவதற்காக விருத்த கௌதமன், "மூதாட்டியே, நான் குருகுலத்திற்குச் சென்று கற்கவில்லை. அத்துடன் மூக்கறையனாக இருப்பதால் என்னை எந்தப் பெண்ணும் விரும்பவில்லை. நீ என்னைக் கல்விமானாகவும், அழகிய இளைஞனாகவும் மாற்றினாயேயானால் உடனே உன்னைத் திருமணம் செய்கிறேன்" என்றான்.

**அ**தைக் கேட்ட மூதாட்டி கேலியாகச் சிரித்தாள். பின்பு, "உன்னை நான் நீ விரும்பியபடி கல்விமானாகவும், அழகனாகவும் மாற்றுகிறேன். நான் குகையில் இருக்கும் போது சரஸ்வதிதேவியையும், வருணனையும் நினைத்து நெடுங்காலம் தவம் செய்தேன். எனது தவத்தின் மகிமையால் சரஸ்வதிதேவி என்முன்னே தோன்றி, "நீ யாருக்கெல்லாம் கல்வி கற்பிக்கிறாயோ அவர்கள் பெரும் கல்விமானாகி உலகினரால் பாராட்டப்படுவர்" என்று கூறியுள்ளாள். அத்துடன் வருணன் என்முன் தோன்றி, "பெண்ணே, நீ நினைத்தவையெல்லாம் நடைபெறும்" என்று வரந்தந்தவன். அதனால் நீ பெரிய கல்விமானாகவும், ஆண் அழகனாகவும் மாறுவாய்" என்றார்.

**அ**வள் அவ்வாறு கூறியதும் விருத்த கௌதமன் ஆண் அழகனாகவும், பெருங் கல்விமானாகவும் மாறினான். அதன்பின் விருத்த கௌதமன் அந்த மூதாட்டியைத் திருமணம் செய்து கொண்டான்.

**நா**ட்கள் நகர்ந்தன ஒருநாள் பல முனிவர்கள் அவர்கள் வாழ்ந்து வந்த குகைக்கு வந்தனர். அவர்களுள் பெரும் தவ வலிமையும் கல்வியறிவும் மிக்க வசிட்டரும், வாமதேவரும் இருந்தனர். அவர்களுடன் வந்த இளம் சீடர்கள் இருந்தனர். அவர்கள் இளைஞனான விருத்த கௌதமனையும் மூதாட்டியையும் கணவன் மனைவி என்று தெரிந்து கேலி செய்தனர். அதனால் இருவரும் அவமானமடைந்தனர். இதற்கு ஒரு தீர்வுகாண வேண்டும் என்று எண்ணி அவர்கள் அகத்திய முனிவரின் இருப்பிடத்திற்குச் சென்றனர்.

**அ**கத்திய முனிவர் அவர்கள் இருவரையும் அழைத்து நடந்தவை முழுவதையும் கேட்டுவிட்டுச் சொன்னார், "கவலை கொள்ளாதீர்கள். முன்வினைப் பயன் எதுவோ அது தான் ஒவ்வொருவரினதும் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது. அதனால் கவலை கொள்ளாது கௌத்தம கங்கைக் கரைக்குச் செல்லுங்கள். அது ஒரு புனிதமான கங்கை. மகாவிஷ்ணுவை நினைத்தவாறு அதில் மூழ்கி எழுங்கள். உங்களின் குறைகள் யாவும் தீரும்" என்றார்.

**வி**ருத்த கௌதமனும் மூதாட்டியும் அகத்திய முனிவருக்கு நன்றி கூறிவிட்டு கௌதம கங்கைக் கரையை அடைந்து அரியையும், அரனையும் துதித்தபடி கங்கையில் இறங்கி நீராடினர். மறுகணம் அந்த மூதாட்டி அழகிய குமரிப் பெண்ணாக மாறினாள். இந்த அதிசயமான நிகழ்வு நடந்த இடம் 'விருத்த சங்கமம்' என அழைக்கப்படுகிறது.

## 33. பிப்பலதன் வரலாறு



**பு**னித நதியான கங்கை நதிக்கரையில் ததீசி முனிவரும், அவரது மனைவியான லோகமுத்திரையும் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்து வந்தனர். முனிவருடன் அவரது மனைவியான லோக முத்திரையின் சகோதரியான கபஸ்தினியும் இருந்தாள். ததீசி முனிவரின் தவ வலிமையை அறிந்த தேவர்களும், அசுரர்களும் அவரது ஆச்சிரமத்திற்கு அருகில் செல்லவே பயந்தனர். ஒருமுறை தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் இடையே நடந்த பெரும் போர் ஏற்பட்டது. அதில் அசுரர்களைத் தேவர்கள் வென்றுவிட்டனர்.

**அ**சுரரை வென்ற தேவர்கள் மிக்க மகிழ்வுடன் ததீசி முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்து அவரை வணங்கி தம்மை ஆசீர்வதிக்குமாறு கூற முனிவர் மனம் மகிழ்ந்து அவர்களை ஆசீர்வதித்து விட்டு அவர்களது சுகநலன்களை விசாரித்தார்.

**தே**வர்கள், அசுரர்களை வென்றமையால் அவர்கள் தத்தமது ஆயுதங்களை நிலத்தில் வீசிவிட்டுத் தப்பி ஓடிவிட்டனர். அதனால் தேவர்களிடம் அளவுக்கதிகமான ஆயுதங்கள் இருந்தன. அவற்றைத் தேவர்கள் ததீசி முனிவரின் ஆச்சிரமத்தில் வைத்தால் அவை பாதுகாப்பாக இருக்கும் என நினைத்து முனிவரைத் தமது ஆயுதங்களைப் பாதுகாத்துத் தருமாறு வேண்ட அவர் அதற்கு ஒப்புக் கொண்டார். அதனால் தேவர்கள் தம்மிடம் இருந்த முழு ஆயுதங்களையும் ததீசி முனிவரின் ஆச்சிரமத்தில் வைத்துவிட்டுச் சென்றனர்.

**தே**வர்கள் தமது ஆச்சிரமத்தில் ஆயுதங்களைப் பாதுகாப்பாக வைத்தது ததீசி முனிவரின் மனைவியாகிய லோகமுத்திரைக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவள் முனிவருக்கு அருகே வந்து அவரைப் பணிந்து விட்டுச் சொன்னாள், "நாதா, உலகத்திலுள்ள பொருட்கள் எவற்றிலும் பற்றுக் கொள்ளாதவர்கள் முனிவர்கள். அவர்கள் இறைவனைத் தவிர வேறு எவற்றிலும் பற்றுவைக்க மாட்டார்கள். வேறு எவரின் பொருளையும் விரும்பவும் மாட்டார்கள். அவ்வாறிருக்கத் தேவர்களின் ஆயுதங்களை எமது ஆச்சிரமத்தில் வைத்திருந்தால் அதைப்பற்றிய நினைவு எமக்கு வந்து கொண்டே இருக்கும். அந்த ஆயுதங்கள் யாவும் பாதுகாப்பாக இருக்கின்றதா என்ற எண்ணம் எந்நேரமும் மனதில் இருக்கும். அந்த ஆயுதங்களுக்கு ஏதேனும் நேர்ந்தால் பொறுப்புச் சொல்ல வேண்டியது தங்களின் கடமையாகும். அவ்வாறு கூறாவிட்டால் பொறுப்புத்தந்தவன் குறைகூறுவான். இது பற்றற்ற உங்களுக்குத் தேவையா?" என்று கேட்டாள்.

"**எ**ன் ஆருயிர் மனைவியே, நீ சொல்வது உண்மை. அதை ஆராயாது வாக்குக் கொடுத்துவிட்டேன். கொடுத்த வாக்கை மீறுவது கொடுத்த வரத்தைத் திருப்பிப் பெறுவதை ஒத்ததாகும். அதனால் பொறுமையாக இரு. யாவற்றையும் மகாவிஷ்ணு கவனித்துக் கொள்வார்" என்றார்.

**க**ணவன் சொன்னது லோகமுத்திரைக்குச் சமாதானத்தை அளித்த போதும் அதனால் விபரீதங்கள் எதுவும் நடந்துவிடுமோ என அஞ்சினாள்.

**சி**ல ஆண்டுகள் கழிந்தன. ஆச்சிரமத்தில் இருந்த ஆயுதங்கள் குறைவடையத் தொடங்கின. அதைக் கண்டு பதை பதைத்த முனிவர் செய்வதறியாது தத்தளிதார். பின் புனித கங்கையின் நீரால் அவ் ஆயுதங்களைச் சுத்தப்படுத்தினார். அவர் சுத்தப்படுத்தியதும் ஆயுதங்கள் தமது சக்தியை இழந்து விட்டன. அதனால் ஆயுதங்கள் கழுவிய அந்த நீரைத் ததீசி முனிவர் குடித்துவிட்டார்.

**சி**ல காலத்தின் பின் தேவர்கள் தாம் வைத்த ஆயுதங்களை எடுத்துச் செல்வதற்காகத் ததீசி முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்தனர். அவர்கள் ததீசி முனிவரை வணங்கி, "முனிபுங்கவரே, அசுரர்கள் மீண்டும் பலம் பெற்று எம்முடன் போர் தொடுக்க ஆயத்தமாகின்றனர். அதனால் நாங்கள் தங்களிடம் ஒப்படைத்த ஆயுதங்களை வாங்கிச் செல்ல வந்துள்ளோம்" என்றனர்.

"**தே**வர்களே, நீங்கள் என்னிடம் ஒப்படைத்த ஆயுதங்களில் சில காணாமற்போய்விட்டன. மிகுதியாக இருந்தவை செயலிழந்து பாவிக்க முடியாதனவாகிவிட்டன. அதனால் அவ் ஆயுதங்களைப் புனிதமான கங்கை நீரால் கழுவி அதைக் குடித்து விட்டேன். அதனால் எனது எலும்புகள் வலுவடைந்துள்ளன. எனது தவ வலிமையால் நான் இப்போது மரணத்தை வரவழித்துக் கொள்கிறேன். நான் இறந்ததும் எனது எலும்புகளைக் கொண்டு பலமான ஆயுதங்களைச் செய்து அசுரர்களுடன் போரிடுங்கள்" என்று கூறி மகாவிஷ்ணுவை நினைத்து மௌனமாக இருந்தார். சில மணித்தியாலங்களின் பின் அவரது உயிர் பிரிந்தது.

**மு**னிவர் இறந்ததும் தேவலோகச் சிற்பியான விஸ்வகர்மா வந்து முனிவரின் எலும்புகளைச் சேகரித்துச் சென்று ஆயுதங்களை உருவாக்கித் தேவர்களுக்குக் கொடுத்தார். அவர் உருவாக்கிய ஆயுதங்களில் வஜ்ராயுதம் மிகச் சிறந்தது. எதிரிகளால் அழிக்க முடியாதது.

**இ**வை நடைபெறும் போது ததீசி முனிவரின் மனைவியாகிய லோகமுத்திரை ஆச்சிரமத்தில் இருக்கவில்லை. செய்தியைக் கேள்விப்பட்டு வேதனையுடன் ஆச்சிரமத்திற்கு வந்த அவள் தனது கணவனுடன் உடன்கட்டையேற விரும்பினாள். ஆனால் அவள் கருவுற்றிருந்ததால் அது தடைப்பட்டது. சில மாதங்களின் பின் அவளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதை வளர்க்குமாறு ஒரு பிப்பில (அத்தி) மரத்திடம் ஒப்படைத்துவிட்டு லோகமுத்திரை இறந்து போனாள்.

## 34. பிப்பலதன்



**பி**ப்பில மரம் அவனை மிகுந்த பாசத்துடன் வளர்த்து வந்தது. அதனால் அவனுக்கு பிப்பலதன் என்ற பெயர் உண்டானது. அவனது வளர்ச்சியால் மகிழ்ந்த பிப்பில மரம் அவன் பெரும் பலசாலியாக வரவேண்டும் என்று சந்திரனை நினைத்துத் தவம் செய்தது. அம்

மரத்தின் தவத்தால் மகிழ்ந்த சந்திரன் நேரில் வந்து சந்தித்து, "நீ என்னை நோக்கித் தவம் செய்வதன் நோக்கம் யாது? அதைச் சொன்னால் நிறைவேற்றுவேன்" என்றது.

**பி**ப்பில மரம் மிகவும் மகிழ்ந்து, "தேவனே, எனது மகன் பெரும் பலசாலியாகவும், அறிவாளியாகவும் வர அவனுக்குத் தாங்கள் அமிர்தம் கொடுத்தருளல் வேண்டும்" என்று கேட்கச் சந்திரன் மிக்க மகிழ்வுடன் பிப்பலதனுக்கு அமிர்தம் கொடுத்தான். அதைக் குடித்த பிப்பலதன் பெரும் அறிவாளியாகவும், பலசாலியாகவும் மாறினான்.

**பி**ப்பலதன் தனது பெற்றோருக்கு நேர்ந்த கதியைக் கேள்விப்பட்டுப் பெரும் துயரங்கொண்டான். தேவர்களைப் பழிவாங்க வேண்டும் என்று நினைத்தான். அவனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய விரும்பிய பிப்பில மரம் அவனைச் சந்திரனிடம் அழைத்துச் சென்றது.

**ச**ந்திரன் பிப்பலனுக்கு நல்லுபதேசம் செய்தான், "நீ வயது குறைந்த சிறியவன். அதனால் கற்கவேண்டும். அத்துடன் அஸ்திரங்களைப் பாவிக்கும் முறைகளை அறிய அஸ்திரப் பயிற்சி பெற வேண்டும். அவற்றைக் கற்பதற்காக நீ தண்டகாரணியத்துக்குச் செல். அங்கு புனித கங்கையான கௌத்தம கங்கை பாய்கிறது. அதன் கரையில் ஆச்சிரமம் அமைத்துச் சிவனைக் குறித்துத் தவம் செய். உனது விருப்பங்கள் யாவும் நிறைவேறும்" என்று சந்திரன் கூறினான்.

**ச**ந்திரனின் சொற்படி கௌதம கங்கையை அடைந்த பிப்பலதன் அதன் கரையில் ஓர் ஆச்சிரமம் அமைத்து புனித நீரில் நீராடிவிட்டுத் தினமும் சிவனை நினைத்துச் சிவபூசை செய்து வந்தான். அவனது மனம் குழப்பமடையாது சிவன் மீது லயித்திருந்தமையால் சிவன் மிகவும் மகிழ்ந்து அவனின் முன் தோன்றினார். சிவன் தன் முன் தோன்றியதைக் கண்ட பிப்பலதன் மகிழ்வுடன் அவரை வணங்கினான்.

"**க**டுமையான உனது தவத்தால் நான் மகிழ்வடைகிறேன். உனக்கு என்ன வரம் வேண்டும்"? என்று சிவன் கேட்டார்.

"**சி**வனே, எனது தந்தையைப் பழிவாங்கிய தேவர்களை நான் அழிக்க வேண்டும்" என்று கேட்டான்.

**அ**தைக் கேட்ட சிவபெருமான், "பிப்பலதா, நீ எனது நெற்றிக் கண்ணை எப்போது காண்கிறாயோ அப்போது உனது எண்ணம் நிறைவேறும்" என்று கூறிவிட்டுச் சிவபெருமான் மறைந்து விட்டார்.

**அ**தைக்கேட்ட பிப்பலதன் சிவபெருமானது நெற்றிக் கண்ணைக் காண்பதற்காக நெடுநாட்கள் மனவைராக்கியத்துடன் பூசை செய்தான் எனினும் அவனால் சிவனது நெற்றிக் கண்ணைக் காண முடியவில்லை.

**பெ**ரும் வேதனையடைந்த பிப்பலதன், சோர்வு கொள்ளாது மீண்டும் தீவிரமாகப் பல ஆண்டுகள் தவம் செய்தான். அப்போது சிவபெருமான் அவன் முன் தோன்றினார். அவரது நெற்றிக் கண்ணில் இருந்து ஒரு பூதம் வெளிப்பட்டது. அப் பூதத்தை வணங்கி பிப்பலதன், "பூதமே, எனது எதிரிகளான தேவர்கள் அனைவரையும் அழித்துவிடு" என்றான். பூதம் அவனது கட்டளையை ஏற்க மறுத்து அவனைத் தாக்கத் தொடங்கியது.

**பூ**தத்தின் தாக்குதலைச் சமாளிக்க முடியாத பிப்பலதன் மீண்டும் பூதத்தை வணங்கி, "சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் இருந்து வெளிப்பட்ட நீ சிவபக்தனான என்னைத் தாக்கலாமா..? ஏன் என்னைத் தாக்குகிறாய். காரணம் என்னவென்று சொல்" என்றான்.

**உ**டனே பூதம் சொன்னது, "பிப்பலாதா, உனது உடல் தேவர்களால் உருவாக்கப்பட்டது தேவனான சந்திரன் உனக்கு அமிர்தம் தந்து உனது பலத்தை அதிகரிக்கச் செய்துள்ளான். தேவர்களால் உருவான நீ என்முன் நிற்கையில், உன்னை அழித்து விட்டுத்தான் நான் தேவருலகம் செல்வேன்" என்று கூறி அவனைத் தாக்கியது.

"**உ**ன்னைக் கொன்றுவிட்டுத் தான் நான் தேவலோகம் சென்று தேவர்களைக் கொல்வேன்" என்று பலமாகக் கூறிய பூதம் பிப்பிலதனைக் கொடுமையாகத் தாக்கத் தொடங்கியது. அதன் தாக்குதலைச் சமாளிக்க முடியாத பிப்பலதன் சிவனிடம் ஓடிச் சென்றான். சிவபெருமான், பிப்பலதன் ஓடி வருவதைக் கண்டு அவனுக்காக ஓர் இடத்தை ஒதுக்கி, அங்கு சென்று வாழும்படி கூறினார். பிப்பலதன் வசித்த கோட்டைக்குள்ப் பூதத்தால் செல்ல முடியவில்லை. அது பலமாகச் சத்தம் எழுப்பியபடி அதனுள் செல்ல முயன்றது.

**பூ**தம் பிப்பலதனைக் கொன்றுவிட்டுத் தம்மைத் தாக்க வரும் என்று தெரிந்துகொண்ட தேவர்கள் அனைவரும் பயத்துடனும், பீதியுடனும் சிவபெருமானிடம் சென்று தம்மைக்காப்பாற்றுமாறு வேண்டினர்.

## 35. பிப்பலதனுக்கு அறிவுரை



**சி**வபெருமான் பிப்பலதனை அழைத்து, "பிப்பலதா, நீ அளவுக்கதிகமாகக் கோபப்படுகிறாய். முதலில் உனது கோபத்தை அடக்கு. இறந்தவர்கள் மீண்டும் பூமிக்கு வரமாட்டார்கள். இது உலகின் இயல்பாகும். உனது தந்தை தனக்கு நீதியாகத் தோன்றியதைச் செய்தார். அவ்வாறு செய்யும்படி தேவர்கள் கூறவில்லை. அதனால் சாந்தியடை" என்றார்.

"**சி**வனே, தாங்கள் சொன்னது உண்மை. அறியாமையால் கோபங்கொண்டு விட்டேன். அதற்காக மன்னிப்பும் கோருகிறேன். எனது மனதில் ஓர் ஏக்கம் உள்ளது. எனது பெற்றோரை நான் காணவில்லை. ஒருமுறை அவர்களைப் பார்க்க விரும்புகிறேன். அதற்குத் தாங்கள் அருளல் வேண்டும்" என்று கூறச் சிவபெருமான் ஆகாயத்தைப் பார்த்தார். அப்போது விண்ணில் ஒரு விமானம் தோன்றியது. அதனுள் ததீசி முனிவரும், லோகமுத்திரையும் இருந்தனர். அவர்கள் பிப்பலதனுக்குத் தங்கள் கையை உயர்த்தி ஆசீவதித்தனர். அதன் பின், "மகனே, எம்மையிட்டுக் கவலைப்படாது நீ திருமணம் செய்து, உனக்குரிய கடமைகளைச் செய்" என்றுகூறிவிட்டு மறைந்தனர்.

**பி**ப்பலதனுக்குத் தனது பெற்றோரைக் கண்டது அளவில்லாத ஆனந்தத்தைக் கொடுத்தது. சிவபெருமானின் கட்டளைப்படி அவரது நெற்றிக்கண்ணில் இருந்து வெளிப்பட்ட பூதம் ஒரு உப நதியாகிக் கங்கையுடன் சேர்ந்தது.

## 36. நாகேஸ்வரனும் நாகதீர்த்தமும்



**பி**ரதிஷ்டான புரம் என்ற நாட்டை சூரேஸ்வரன் என்ற அரசன் ஆண்டு வந்தான். ஒருநாள் அரசனும் அரசியும் பிராத்தனை செய்தனர். அதன் பின்பு அரசிக்கு ஒரு பாம்பு குழந்தையாகப் பிறந்தது. அதைக்கண்டு அரசனும் அரசியும் அதிர்ச்சயடைந்தனர். அதைப் பிறர் அறிந்தால் தம்மைக் கேலி செய்வார்கள்

என்று பயந்த அரசனும் அரசியும் அப் பாம்பை மிகமிக இரகசியமாக வளர்த்து வந்தனர். சில வருடங்கள் கழிந்ததும் அப் பாம்பு மனிதரைப் போலப் பேச ஆரம்பித்தது. அதனால் மன்னன் மிகவும் மகிழ்ந்து அதற்கு வேதங்களைக் கற்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தான். வேதவிற்பன்னர்களை அழைத்து அரசன் அதற்கு வேதங்களைக் கற்பித்தான். காலப்போக்கில் அது கற்கவேண்டியவற்றையெல்லாம் தெளிவாகக் கற்றுக் கொண்டது. அதன்பின் அந்த நாகக் குழந்தை தனது தந்தையைப் பார்த்து, "எனது விருப்பப்படி வேதங்களைக் கற்பித்தீர்கள். அதை நல்ல முறையில் நான் பயின்றேன். இப்பொழுது நான் வாலிபனாகிவிட்டேன். அதனால் எனக்குத் திருமணம் செய்து வையுங்கள். திருமணம் செய்யாவிட்டால் எனக்குப் பிள்ளைகள் பிறக்க மாட்டார்கள். பிள்ளைகள் பிறக்காவிட்டால் நான் நரகலோகம் சென்று பழிபாவங்களை அனுபவிக்க வேண்டியேற்படும்" என்றது.

**அ**தைக் கேட்டு அதிர்ச்சியடைந்த மன்னன், "பாம்பான உன்னைத் திருமணம் செய்ய எந்த இளவரசி சம்மதிப்பாள்" என்று கேட்டான்.

"**அ**தைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நீங்கள் உலகெங்கும் சென்று பெண்ணைத் தேடிப் பிடித்து எனக்குத் திருமணம் செய்து வையுங்கள். இல்லாவிட்டால் நான் தற்கொலை செய்து கொள்வேன்" என்று மிரட்டியது.

**ம**ன்னன் எதுவும் செய்யத் தோன்றாது திகைத்துப் போய் நின்றான். அப்பொழுது அந்த நாகம் சொன்னது, "முதலில் பெண் தேட வேண்டும். யாராவது ஓர் இளவரசி சம்மதிப்பாள். இங்கிருந்து யோசிப்பதால் பயன் இல்லை. பெண்தேடிக் கிடைக்காவிட்டால் ஓர் இளவரசியைக் கடத்தி வந்து எனக்குத் திருமணம் செய்து வையுங்கள்" என்றது.

**எ**துவும் செய்யத் தோன்றாத மன்னன் அமைச்சரிடம் சென்று, "இளவரசனுக்கு திருமண வயது வந்துவிட்டது. அவன் வேதங்கள் அனைத்தையும் நல்லபடி கற்று முறைப்படி ஓதி வருகிறான். மிகுந்த தைரியவனான அவனுக்கு இணையான தைரியசாலி யாருமில்லை. அவனுக்குத் திருமணத்தைச் செய்து முடித்துவிட்டு நான் காட்டுக்குச் சென்று தவம் செய்ய விரும்புகிறேன். எனவே அவனுக்குப் பொருத்தமான இளவரசி இருந்தால் கூறுங்கள்" என்றான்.

**அ**ரசனின் மகனான நாகேஸ்வரன் ஒரு பாம்பு என்று யாருக்கும் தெரியாது. சூரசேனனின் மந்திரிசபையில் நன்கு கற்று அறிவுமிகுந்த ஓர் அமைச்சர் இருந்தார். அவர் சொன்னார், "மன்னா கவலைப்படாதீர்கள். எமது நாட்டிற்குக் கிழக்குத்திசையில் உள்ள ஒரு பெரிய நாட்டை விஜயன் என்றொரு வீரம்மிக்க மன்னன் ஆண்டு வருகிறான். அவனுக்கு எட்டுப் புத்திரர்களும் போகவதி என்றோர் அழகிய மகளும் இருக்கிறாள். அவள் நன்கு கற்றவள். பேரழகி. தங்களுடைய தகுதிக்கு மிகமிகப் பொருத்தமான பெண் அவள்".

**உ**டனே அந்த அமைச்சரை மன்னன் விஜயனிடம் திருமணப் பேச்சுக்காக அனுப்பினான் சூரேஸ்வரன். கல்யாணத்தரகராகச் சென்ற அமைச்சர் விஜயனுக்குச் சொன்னார், எனது மகனின் பெயர், புகழ், பலம், செல்வம், செல்வாக்கு யாவும் உங்களுக்குத் தெரியும். எமது இளவரசன் உமது புத்திரியை விவாகம் செய்ய விரும்புகிறார். அவர் தனிப்பட்ட ஒரு தேவைக்காக அயல் நாட்டிற்குச் சென்றமையால் உங்களது அரண்மனைக்கு வந்து பெண்ணைப் பார்க்க முடியாத நிலையில் உள்ளார். ஓர் இளவரசி இளவரசனை நேரிற் கண்டு தான் திருமணம் செய்யவேண்டும் என்றில்லை. தவிர்க்க முடியாத வேளையில் அவள் இளவரசனின் வாளுக்கோ அல்லது அவள் உபயோகிக்கும் ஆயுதத்துக்கோ மாலையிட்டு அவனைக் கணவனாக்கும் முறை அரச பரம்பரையில் உள்ளது. இது நீங்கள் அறியாதது அல்ல" என்று அமைச்சர் கூறியபோது, சூரேஸ்வரன் மிக்க பலமுடையவன். அவனது நாடு செல்வச் செழிப்பான நாடு என்று கேள்விப்பட்டாமையால் அமைச்சர் சொன்னதை விஜயன் ஏற்றுக் கொண்டான்.

**தி**ருமண நாள் குறிக்கப்பட்டது அதனால் மன்னன் விஜயன் தனது மகளை அழைத்துக் கொண்டு பரிவாரங்களுடன் பிரதிஷ்டானபுரத்திற்கு வந்தனர்.

**அ**ப்போது நாகேஸ்வரனின் தாயார் ஒரு பணிப்பெண்ணை அழைத்து, "நீ எனது மகனுக்கு நிட்சயிக்கப்பட்ட இளவரசியிடம் சென்று, "மாப்பிளை ஒரு பாம்பு என்று கூறு. அதன் பின் நடப்பதை வந்து கூறு" என்றான்.

**ப**ணிப்பெண் சென்று நாகேஸ்வரனின் தாயார் கூறியதை இளவரசியிடம் கூற அவள் மிக்க மகிழ்ச்சியடைந்து, "அப்படியா? பெண்கள் சாதாரணமாக ஓர் ஆணைத் திருமணம் செய்வதுதான் வழமை. நான் பாக்கியசாலி. அதிட்டம் செய்தவள். முற்பிறவியில் பெரும் புண்ணியம் செய்தமையால்தான் நான் நாகதேவனை மணக்கிறேன்" என்றாள்.

**அ**தைப் பணிப்பென் சென்று நாகேஸ்வரனின் தாயாருக்குக் கூறினாள். அதன்பின் போகவதியை நாகேஸ்வரனின் முன் கொண்டு வந்தனர். அவளைக் கண்டதும் நாகேஸ்வரனுக்கு முன்பிறப்பில் நடந்தவை ஞாபகத்திற்கு வந்தது. தான் முற்பிறப்பில் சிவனின் தோழனாக இருந்தபோது போகவதி தனது மனைவியாக இருந்தது நினைவில் வந்தது.

**ஒ**ருநாள் பரமசிவன் பார்வதியுடன் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தார். சிவபெருமானுக்கு அருகில் இருந்தமையால் நாகேஸ்வரனுக்கு அவர் வேடிக்கையாகப் பேசுவது கேட்டது. அதனால் அவன் அதைக் கேட்டுச் சிரித்து விட்டான். அவன் சிரித்தது சிவபெருமானுக்குப் பிடிக்கவில்லை. அவனின் மீது கோபம் வந்தது அதனால் சிவபெருமான், "நீ ஒரு மனிதனுக்குப் பிள்ளையாகப் பாம்பாகப் பிறப்பாய்" என்று சாபமிட்டார்.

**அ**ப்போது போகவதிக்கும் தனது முற்பிறப்பில் நடைபெற்றவை நினைவுக்கு வந்தது. சிவபெருமான் சாபமிட்டவுடன் நாகேஸ்வரன் தனது தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டான். சாபத்தை விலக்கும்படி கெஞ்சினான்.

"**நா**கேஸ்வரா, நான்கொடுத்த சாபத்தை நீக்க முடியாது. உன் முன்வினைப் பயனின்படி தான் யாவும் நடைபெறும். நீ பூமியில் பாம்பாகப் பிறந்து திருமண வயதை அடைந்ததும் உனது மனைவி உன்னைத் தேடி வருவாள். அப்போது அவளை அழைத்துக் கொண்டு கௌத்தம கங்கையை அடைந்து அதில் நீராடுங்கள். உனது பாம்புருவம் நீங்கி அழகிய வாலிபனாவாய்" என்று அருளினார்.

**அ**ந்த நிகழ்வு நாகேஸ்வரனுக்கு நினைவில் வந்தது. அவன் போகவதியை அழைத்துக் கொண்டு கௌத்தம் கங்கையை அடைந்து சிவனை நினைத்துக் கொண்டு நீராடினான். அப்போது அவனது பாம்பு உருவம் மறைந்து ஓர் அழகிய இளைஞனின் உருவம் வந்து சேர்ந்தது. அவர்கள் இருவரும் மிக்க மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர்.

**நா**கேஸ்வரனது தந்தையான சூரசேனன் இறந்த பின்பு நாகேஸ்வரன் அரசனாக முடிசூட்டப்பட்டான். நெடுங்காலம் அவன் நாட்டை நீதிநெறி தவறாது ஆட்சி செய்தான். அவனது ஆட்சிக் காலத்தில் கௌதம கங்கைக் கரையில் பெரியதொரு சிவாலயத்தைக் கட்டினான். அதன்பின் அவன் கைலாயம் சென்று சிவபெருமானுடன் சேர்ந்து கொண்டான். அவன் கட்டிய சிவன் கோவிலுக்கு நாகதீர்த்தம் என்று பெயர் வைத்தான்.

## 37. நான்முகனாகிய பிரமன்



**ஒ**ரு சமயம் அசுரர்களுக்கும், தேவர்களுமிடையே பெரும் போர் உண்டானது. போரின் போது பெரும் பின்னடைவைச் சந்தித்த தேவர்கள், பிரமனிடம் ஆலோசனை கேட்க வந்தனர். பிரம்மா தன்னிடம் ஆலோசனை கேட்க வந்த தேவர்களை அழைத்துக் கொண்டு கைலாயத்திற்கு வந்து சிவபெருமானைச் சந்தித்தார்.

**தே**வர்கள் அசுரர்களால் தமக்கு ஏற்பட்ட துன்பங்களை விபரமாகக் கூறினர். போரில் அசுரர்களின் கையோங்கியிருந்தது. அவர்களை வெல்லத் தேவர்களால் முடியவில்லை.

அதனால் தான் தேவர்கள் பிரம்மாவிடம் வந்து முறையிடப் பிரம்மா அவர்களைச் சிவனிடம் அழைத்து வந்தார்.

**தே**வர்கள் மிகவும் பலவீனமான நிலையில் இருந்தமையால், சிவபெருமான் தேவர்களுக்காகப் போரில் ஈடுபட்டார். அவரது தாக்குதலால் நிலைகுலைந்த அசுரர்கள் சுமேருமலையில் இருந்தும், சொர்க்கத்தில் இருந்தும் தப்பி ஓடினர்.

**சி**வபெருமான் அசுரர்களுடன் மிகவும் உக்கிரமாகப் போரிட்டதால் அவரது உடலெங்கும் கடுமையாக வியர்த்தது. சிவபெருமானின் தேகத்தில் தோன்றிய பெரும் வியர்வை பூமியெங்கும் விழுந்து பெரும் பெரும் பூதங்களாகின. அப் பூதங்கள் 'மாத்திரிகள்' என்று அழைக்கப்பட்டன. போர்க்களத்தில் தோன்றிய மாத்திரிகள் சிவபெருமானுடன் சேர்ந்து உக்கிரமாகப் போறிட்டன. அவர்களுடன் போரிட முடியாத அசுரர்கள் உயிர் தப்பினால் போதுமென்று நினைத்துத் தமது கைகளில் இருந்த ஆயுதங்களை வீசிவிட்டுப் பாதாளத்திற்குச் சென்றனர். அசுரர்களைத் துரத்தி வந்த மாத்திரிப் பூதங்கள் பாதாளத்தில் வைத்துப் பல அசுரர்களைக் கொன்றன.

**இ**வ்வாறு பெரும்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது பிரம்மனும், தேவர்களும் மாத்திரிகளின் வருகைக்காக கௌதமி ஆற்றங்கரையில் காத்திருந்தனர். அவர்கள் காத்திருந்த இடம் பிரதிஷ்டானபுரம் ஆகும். பாதாளத்திற்குச் சென்று அசுரர்களைக் கொன்று விட்டு வந்த மாத்திரிகள் கௌதமக் கங்கைக் கரையில் குடியேறினர். அவர்கள் வசிக்கும் போது நீராடிய தீர்த்தக்கரையை 'மாத்திரி தீர்த்தம்' என்று அழைப்பர்.

**ஆ**ரம்பத்தில் பிரம்மனுக்கு ஐந்து தலைகள் இருந்தன. ஐந்தாவது தலை கழுதையில் தலைபோல இருந்தது. அரக்கர்கள் பூதங்களுக்குப் பயந்து பாதாளத்திற்கு ஓடிய போது பிரம்மனின் கழுதைத் தலை அரக்கர்களை மறித்து, "ஏன் பயந்து ஓடுகிறீர்கள். உண்மையான வீரன் எத்தனைய துன்பம் வந்தாலும் போர்க்களத்திலிருந்து தப்பி ஓடமாட்டான். வாருங்கள் உங்களுக்காக நான் தேவர்களுடன் போராடி அவர்களை அழிக்கிறேன்" என்று பிரமனின் ஐந்தாவது தலையான கழுதைத் தலை சொன்னது. பிரமனின் ஏனைய நான்கு தலைகளும் தேவர்களுக்காக அசுரர்களுடன் போரிட பிரமனின் கழுதைத் தலை மட்டும் அசுரர்களுக்காக உக்கிரமாகப் போர் செய்தது. இதைக் கண்டு கோபங்கொண்ட தேவர்கள் மகாவிஷ்ணுவிடம் சென்று, "பெருமானே, பிரம்மனின் நான்கு தலைகளும் தேவர்களுக்கு ஆதரவாகப் போர் செய்ய, கழுதைத் தலைமட்டும் தேவர்களை எதிர்த்து அசுரருக்காகப் போரிடுகிறது. இது தேவர்களுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியதோடு, பெருங் குழப்பத்தையும் உண்டாக்குகிறது. அதனால் பிரமனின் ஐந்தாவது தலையை நீக்க வேண்டும்" என்று பிராத்தித்தனர்.

**தே**வர்கள் சொல்வதில் நியாயம் இருப்பதாக மகாவிஷ்ணு நினைத்தார். பின்பு, "தேவர்களே, பிரம்மனது ஐந்தாவது தலையை நீக்குவது என்பது பெரிய விடயமல்ல.

நீக்கினால் அத் தலையை என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. அந்தத் தலையை நீக்கினால் அதைப் பாதுகாப்பாக அழிக்க வேண்டும். அது தப்பித் தவறிப் பூமியில் விழுந்தால் பூமி அழிந்துவிடும் அதனால் சிவபெருமானிடம் சென்று முறையிடுங்கள். அவர் ஆவன செய்வார்" என்று மகாவிஷ்ணு கூறினார்.

**பூ**மியும், கடலும், ஏனைய லோகங்களும் பிரம்மனின் ஐந்தாவது தலையான கழுதைத் தலையை ஏற்றுக் கொள்ளாது. அதனால் நாம் மகாவிஷ்ணு சொன்னதைப் போலச் சிவனிடம் சென்று முறையிடுவோம்" என்று கூறிய இந்திரன், தேவர்களைச் சிவபெருமானிடம் அழைத்துச் சென்றார்.

**தே**வர்கள் இந்திரனுடன் சென்று சிவபெருமானிடம், "பிரம்மனின் ஐந்தாவது தலையான கழுதைத்தலை அசுரர்களுக்காகப் போராடுவதால் பெரும் குழப்பமாக உள்ளது. அதை நீக்கும் வல்லமை தங்களுக்கே உள்ளது. நாம் எல்லோரும் தங்களை வணங்கிக் கேட்கிறோம். பிரம்மனின் கழுதைத் தலையை அழித்து விடுங்கள்" என்றான் இந்திரன்.

**போ**ர்க்களத்திற்குச் சென்ற சிவபெருமான், பிரம்மனின் கழுதைத் தலை அசுரர்களுடன் சேர்ந்து போராடுவதைக் கண்டு மிக்க கோபங் கொண்டு பிரம்மனின் அருகே சென்று அவனது கழுதைத் தலையைத் தனது நகத்தால் கிள்ளி அதைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டார். அதைக் கண்ட தேவர்கள் மிக்க மகிழ்வுடன் சிவபெருமானைப் போற்றித் துதித்தனர்.

**பி**ரம்மனின் ஐந்தாவது தலையான கழுதைத் தலையைச் சிவபெருமான் கொய்த இடம் 'ருத்திர தீர்த்தம்' எனப் பெயர் பெற்றது. ஐந்து தலைகளை உடைய பிரம்மனுக்கு ஒரு தலை கொய்யப்பட்டதால் நான்கு தலைகளுடன் அவன் இருந்தான். அதனால் பிரம்மனை நான்முகன், சதுர்முகன் எனப் பெயர்பெற்றான். கௌத்தம கங்கைக் கரையில் பிரம்மனது கோவில் உள்ளது. அந்தக் கோவில் உள்ள இடத்தை 'பிரம்ம தீர்த்தம்' என அழைக்கின்றனர். இங்குள்ள பிரம்மனைத் தரிசித்தால் கொடிய பாவங்கள் யாவும் அகலும். ஒரு பிராமணனைக் கொன்ற பாவம் கூட அகலும் என்று சொல்லப்பட்டுள்ளது.

## 38. ஆந்தையும் புறாவும்



**கௌ**தமி கங்கை கரையில் யமதர்மராஜனின் பேரனான அனுஷ்ரதன் என்ற புறாவும் அதன் மனைவி கேதியும் வசித்து வந்தனர். புறாக்கள் வசிக்கும் கங்கைக் கரையில் இருந்து சிறிது தூரத்தில் அக்கினி குலத்தைச் சேர்ந்த உலூகன் என்ற

ஆந்தையும் அதன் மனைவியான உலூசியும் வசித்து வந்தனர்.

**ஆ**ந்தையும், புறாக்களும் இயல்பாகவே பகைவர்கள். கங்கைக் கரையில் சிறிது தூரத்தில் அவை வசிப்பதால் அடிக்கடி இருசாராருக்கும் இடையே பெரும் போர் நடைபெறும். புறாக்கள் யமனிடம் தேவையான ஆயுதங்களைப் பெறும். அது போல ஆந்தைகள் தமக்குத் தேவையான ஆயுதங்களை அக்கினிதேவரிடமிருந்தும் பெற்றுப் போராடிக் கொண்டிருந்தன. இருசாராரும் தமக்குள் உள்ள பகையை வளர்த்துக் கொண்டே இருந்தனர். அவர்கள் வலிமை மிக்க ஆயுதங்களைப் பாவிப்பதால் கௌதமி கங்கைக்கரை எரிந்து சுடுகாடாக மாறிவிட்டது. அதன் புனிதத் தன்மையும் அழிந்து விட்டது. கங்கையில் நீராட முனிவர்களும், தேவர்களும் அஞ்சினர். அதனால் யமதர்மராஜனும், அக்கினிதேவனும் புறாக்களையும், ஆந்தைகளையும் அழைத்துப் புத்திமதிகள் கூறிச் சமாதானமாக வாழுமாறு எடுத்துரைத்தனர். தமது இனத் தலைவர்களான யமனும், அக்கினியும் சொன்ன சொல்லை மீற முடியாத புறாக்களும், ஆந்தைகளும் அதன் பின் நண்பர்களாக மாறி அன்புடன் பழகி வந்தன. அந்தப் புறாக்கள் வசித்த இடம் 'யமதீர்த்தம்' என்றும், ஆந்தைகள் வசித்த இடம் 'அக்கினி தீர்த்தம்' என்றும் பெயர் பெற்றன.

## 39. அந்தணன் வேதாவும் வேடன் பில்லாவும்



**வே**தா என்ற அந்தணன் காலையில் இருந்து பிற்பகல் வரை தினமும் பலவகையான நறுமண மலர்களால் பல்வேறு விதமான மாலைகள் கட்டிச் சிவனுக்குச் சார்த்தி அழகு பார்ப்பான். அந்த அழகை மெய் மறந்து ரசித்து மகிழ்வான். பின்பு முறைப்படி சிவபூசை செய்வான். பிற்பகலானதும் அருகில் இருக்கும் கிராமங்களுக்குச் சென்று யாகம் செய்வான். அன்று தனக்குப் போதியவற்றை எடுத்துக் கொண்டு மிகுதியானவற்றை உடல் நலமில்லாதவர்களுக்கும், அங்கவீனர்களுக்கும் கொடுப்பான். இவ்வாறு அவன் வாழ்ந்து வந்தான்.

**அ**ங்குள்ள காடொன்றில் பில்லா என்றொரு வேடன் வாழ்ந்து வந்தான். காலையில் அவன் காட்டுக்குச் சென்று வேட்டையாடுவான். பின் தான் வேட்டையாடிய இறைச்சியைத் தீயில் வாட்டிக் காட்டில் உள்ள சிவனுக்குப் படைப்பான். காலையில் சிவபூசை செய்யும் ஒரு பிராமணர் சிவனுக்குச் சூடிய மாலைகளையும், பூக்களையும் பில்லா அப்புறப்படுத்திவிட்டுத் தான் கொண்டு வந்த இறைச்சியைச் சிவனுக்குப் படைப்பான். இது நெடுங்காலமாக நடைபெற்று வந்தபோதும் இருவரும் ஒருபோதும் சந்தித்ததில்லை. பில்லாவின் அன்பு சிவனை

மெய்சிலிர்க்க வைத்தது. அதனால் சிவன் அந்த அன்பு மிகுந்த வேடனின் வருகைக்காக ஆவலுடன் காத்திருப்பார்.

**சி**வலிக்கத்தின் மீது காலையில் வில்வம் இலையும், அழகான மாலைகளும் இருக்கும். அதன்பின் வேடன் படைத்த இறைச்சி இருக்கும். இம் மாற்றத்தை இருவரும் உணர்ந்த போது அவை யாரால் எப்படி நடைபெறுகின்றது என்பதை இருவரும் அறியவில்லை. பிராமணனான வேதா காலையில் பூமாலைகள், வில்வம் இலை முதலியவற்றைச் சார்த்தி சிவபூசை செய்வான். பின் யாசகத்திற்குச் சென்று விடுவான். வேடனான பில்லா காலையில் வேட்டையாடுவான். மதியம் சிவனுக்கு இறைச்சியைப் படைப்பான். அதனால் வேதாவுக்கு யார் அதைப் படைக்கிறார்கள் என்று புரியவில்லை. இறைவனுக்கு மாமிசம் படைப்பவனை ஒரு கொலைகாரனாகவே வேதாவால் கணிக்க முடிந்தது. அதனால் இப் பாவச் செயலைச் செய்யும் பாவியார் என்று அறிய விரும்பி வேதா அன்று யாசகத்திற்குச் செல்லாது மறைந்திருந்து நடப்பவற்றை அவதானித்துக் கொண்டிருந்தார்.

**அ**ன்று வேடன் தான் வழமையாக வரும் நேரத்திற்கு வராமையால் சிவபெருமான் கவலைப்பட்டார். அவ் வேடன் வந்ததும் அவனின் முன் தோன்றி, “என் அன்புக்குப் பாத்திரமான பக்தனே, இன்று ஏன் தாமதமாக வந்தால். உனக்குக் காட்டு மிருகங்களால் ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்குமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். நீ இன்று களைத்திருக்கிறாய். உனது முகம் வாடியிருக்கிறது என்ன நடந்தது என்று சொல். இனிமேல் இன்று போலத் தாமதமானி வராதே” என்றார்.

**வே**டனும் சிவபெருமானும் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தனர். பின்பு வேடன் தான் கொண்டு வந்த இறைச்சியைச் சிவபெருமானுக்குப் படைத்துவிட்டுப் பூசை செய்தான். பின்பும் சிவபெருமானோடு கலகலப்பாகவும் மகிழ்வாகவும் கதைத்துவிட்டு அவரிடமிருந்து விடைபெற்றான்.

**வே**டன் சென்ற பின்பு வேதா சிவன் கோவிலுக்கு வந்தான். சகிக்க முடியாத மாமிச வெடில் வீசியது. அதைச் சிரமப்பட்டுத் தாங்கியவாறு துப்பரவு செய்துவிட்டு தூபதீபங்கள் காட்டினான். பின்பு இலிங்கத்தைக் கழுவிவிட்டுத் தான் கொண்டு வந்த நறுமணம் மிக்க பூமாலைகளைச் சிவலிங்கத்திற்குச் சாத்தினான். வில்வம் இலைகளைச் சிவலிங்கத்தின் மீது வைத்துச் சிவபூசை செய்தான்.

**சி**வபூசையை முடித்துவிட்டு இலிங்கப் பெருமானை மிக்க கவலையோடு பார்த்தான். அவனது கண்களால் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது, “எம்பெருமானே, நான் ஆகம முறைப்படி தினமும் சிவபூசை செய்கிறேன். அதில் ஏதாவது குறைகள் இருக்கின்றனவா? படைக்கக் கூடாதவற்றையெல்லாம் படைத்து உன்னை ஆராதிக்கும் வேடனின் மீது மிகுந்த

அன்பும் கருணையும் கொண்டு அவனைக் காணாமையால் வருந்துகிறாய். ஓர் உயிரைக் கொல்வது பாவமில்லையா? மனிதர்களில் பலர் மாமிசங்களை உண்பதில்லை. ஆனால் நீ வேடன் படைத்த மாமிசத்தை மகிழ்வுடன் வயிறார உண்கிறாய். அவனுக்குக் காட்சி கொடுத்து, அவனுடன் அன்பாகப் பேசுகிறாய். ஆகம விதிப்படி தினமும் தவறாது உனக்குப் பூசை செய்யும் எனக்கு ஒருமுறையாவது காட்சி தந்தாயா…? இந்த ஓரவஞ்சனை ஏன்? பக்தர்களைச் சமமாக மதிப்பவன் நீயென்றும், நீ சாதி, குலம், இனம் ஆகியவற்றைக் கடந்தவன் என்றும் புராணங்கள் சொல்கின்றன. அவை பொய் உரைக்கின்றனவா? சொல். நீ சொல்லாவிட்டால் இந்தச் சிவலிங்கத்தை உடைத்தெறிவேன்" என்று உணர்ச்சி வசப்படடான் வேதா.

"**அ**ந்தணனே, அவசரப்படாதே ஆத்திரம், கோபம், அறியாமையாகியன முழுமையான மனிதர்களையும் வழிமாறச் செய்யும். விடியும்வரை பொறுத்திரு. விடிந்தபின் வந்து பார்" என்று ஓர் அசரீதி கேட்டது.

**கா**லையில் வந்து அந்தணன் பார்த்தபோது இலிங்கம் முழுவதிலும் இரத்தம் படிந்திருந்தது. அதைப்பற்றிச் சிந்திக்காது பிராமணன் இரத்தத்தைச் சுத்தப்படுத்தி வழமையாகச் செய்யும் சிவபூசையை முறைப்படி செய்துவிட்டு மறைந்திருந்தான்.

**சி**றிது நேரம் செல்ல அங்கு வந்த வேடனான பில்லா சிவலிங்கத்தின் மீது இரத்தத் துளிகள் படிந்திருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தான். இலிங்கத்தின் மீது இரத்தம் படிந்திருப்பதற்குத் தான் தான் காரணம் என்று எண்ணித் தான் வைத்திருந்த கூரிய அம்பை எடுத்துத் தனது உடலெங்கும் குத்திக் கிழித்தான். பில்லாவின் உடலில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

**அ**ப்போது இருவருக்குமிடையே சிவபெருமான் தோன்றி அந்தணனுக்கும் வேடனுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை எடுத்துச் சொன்னார். "அந்தணனே, நீ ஆகம முறைப்படி முறையாகப் பூசை யெ்தாய். அத்துடன் நைவேத்தியமும் அளித்தாய். ஆனால் மனதை என்னிடம் ஒப்படைக்கவில்லை. உனது மனம் சிவபூசை முடிந்தபின் பல்வேறு சிந்தனைகளுக்குட்பட்டு அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் வேடன் தனது உடல் பொருள் ஆகிய அனைத்தையும் எனக்கு அளித்துவிட்டு வேறு சிந்தனைகள் இன்றி வாழ்ந்து வருகிறான். அது தான் உண்மையான பக்தியாகும்" என்று கூறிச் சிவபெருமான் மறைந்தார். பில்லா என்ற வேடன் சிவனை ஆராதித்து வழிபட்ட இடம் 'பில்லா தீர்த்தமாகும்'.

## 40. தர்மம் தர்மத்தைக் காக்கும்



**பௌ**ளவனம் என்ற நாட்டில் கௌதமன் என்றொரு அந்தண இளைஞன் வாழ்ந்து வந்தான். அவனது நண்பன் வைசிக குலத்தைச் சேர்ந்த மணிகுண்டலன். கௌதமனின் தாயார் தினமும் அவனுக்கு அதர்ம வழிகளில் வாழ்ந்து பணம் தேட வேண்டும். தர்ம வழியில் அதிக பணத்தைத் தேட முடியாது என்று கூறி வளர்த்து வந்ததாள் கௌதமனின் உள்ளத்தில் தீய எண்ணங்களே உருவாகியிருந்தன. அவை தாயாரின் நித்த உபதேசத்தால் வலுப்பெற்றிருந்தன. ஒருநாள் கௌதமன் தனது நண்பனான மணிகுண்டலனைச் சந்தித்து, “நாமிருவரும் அயல்நாட்டுக்குச் சென்று வியாபாரம் செய்து நிறைய லாபம் சம்பாதிப்போம்” என்று கூறினான்.

**ம**ணிகுண்டலனின் தந்தை பெரும் பணக்காரன் அதனால் மணிகுண்டலன் கௌத்தமனுக்குச் சொன்னான், “நண்பா நான் பெரும் தனவந்தனின் மகன். அதனால் எம்மிடம் போதியளவு பணம் உள்ளது. அதனால் நான் அயல்நாட்டுக்குச் சென்று பணம் தேட வேண்டிய அவசியமில்லை”.

“**நீ** நினைப்பது தவறு நண்பா. ஒருவர் தேடிய பணம் பலவழிகளாலும் அழிந்துவிடக்கூடும். பிள்ளைகளானாலும் பெற்றோரில் தங்கி வாழக்கூடாது தாம் உழைத்து முன்னேற வேண்டும். இப்போது உனது தந்தையிடம் உள்ள பணம் எதிர்காலத்தில் பெறுமதி குறையலாம். ஒரு முயற்சியுள்ள மனிதன் தான் உழைத்துத் தனது பெற்றோரைக் காப்பாற்றுதல் வேண்டும். நீ முயற்சியுள்ளவனா, அதிஷ்டம் உள்ளவனா என்று தொழில் செய்தால் தான் அறிந்து கொள்ள முடியும். முயற்சியில்லாத சோம்பேறிகள் தான். தன் பெற்றோரின் சம்பாத்தியத்தில் வாழ்வர். அது அவமானம் தரும் வாழ்வு” என்றான் கௌதமன்.

**கெ**ளதமனின் வார்த்தைகள் சரியானவை என்று மணிகுண்டலன் தீர்மானித்தான். தனது நண்பன் தன்னை ஏமாற்றமாட்டான் என்றும் நம்பினான்.

**ம**ணிகுண்டலன் தனது தந்தையிடம் தேவையான அளவு திரவியங்களைப் பெற்று வந்தான். இருவரும் மகிழ்வுடன் உரையாடி படி பயணத்தைத் தொடங்கினர். அப்போது கௌதமன் சொன்னான், “நண்பா, நீதி, நியாயம், தர்மம் முதலியவற்றைப் பேணி அதன்

வழியில் வாழ்பவர்கள் ஒருபோதும் தனவந்தர்களாக முடியாது. அவர்கள் எப்போதும் தாங்க முடியாத வேதனைகளையும், துன்பங்களையும் அடைவதோடு நட்டமும் அடைகின்றனர். அவர்களால் வாழ்க்கையை மகிழ்வாக வாழத்தெரியாது. அதனால் நீதி, நியாயம், தர்மம் இவையெல்லாம் பொய்யானவை. நாம் இவற்றைப் பின்பற்றக்கூடாது".

"**ந**ண்பா, நீ தவறாகப் பேசுகிறாய். தீயவழியில் சம்பாதிக்கும் பணம், பொருள், ஆஸ்த்தி யாவும் நிலைத்திருக்கமாட்டாது. தீயசெயல்கள் ஆரம்பத்தில் மகிழ்ச்சியையும் இன்பத்தையும் கொடுக்கும். இறுதியில் தாங்கமுடியாத துன்பம் தான் வரும். அதனால் எக்காரணம் கொண்டும் தீயவற்றைச் செய்யக் கூடாது" என்றான் மணிகுன்டலன்.

**இ**ருவரும் நெடுநேரமாக வாக்குவாதப்பட்டனர். ஆனால் முடிவு ஏற்படவில்லை. அதனால் கௌதமன் சொன்னான், "நண்பா, நாம் வீணாக வாதிடுவதில் பயனில்லை. இங்கு உள்ள பெரியவர்களிடம் இருவரும் தத்தமது கொள்கைகளைக் கூறுவோம். அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதன்படி நடப்போம். தோற்றவர் தான் கொண்டு வந்த திரவியங்கள் முழுவதையும் வென்றவருக்குக் கொடுக்க வேண்டும். இதுதான் நிபந்தனை. எக்காரணம் கொண்டு அதை மீறக் கூடாது" என்றான். வேறு வழியின்றி மணிகுன்டலன் அதை ஏற்றுக் கொண்டான்.

**அ**வர்கள் இருவரும் ஊர் மக்களிடம் சென்று தாம் நினைத்தவற்றைக் கூறினர். ஊரவர்கள் இருவரும் கூறுவதைக் கேட்டுவிட்டு, "இந்தக் கலியுகத்தில் நீதி, நியாயம், தர்மம் என்பவற்றை பேணி வாழ்வோர் பெருந்துன்பப்படுகின்றனர். தீயவர்கள் தான் இன்பமாகவும், மகிழ்வாகவும் வாழ்கின்றனர்" என்றனர்.

**அ**வர்கள் சொன்னதைக் கேட்டு கௌதமன் மிக்க மகிழ்ச்சியடைந்தான். நிபந்தனைப்படி மணிகுண்டலன் கொண்டு வந்த திரவியங்கள் முழுவதையும் கௌதமனிடம் கொடுத்தான். அப்போது கௌதமன் சொன்னான், "நீ ஒரு கழுதை. பிழைக்கத் தெரியாதவன். நீ பொருளைவிடத் தர்மமே சிறந்தது என்று கூறுவது வேடிக்கையாக இருக்கிறது".

"**நீ** சொல்வது தான் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. மனிதன் பிறந்த காலத்தில் இருந்து அவனைத் தர்மம் தான் காப்பாற்றி வருவதாக எமது இலக்கியங்கள் கூறுகின்றன. ஆரம்பத்தில் தர்மம் தோல்வியடையும், சோதனைக்குள்ளாக்கும், வேதனையைத் தரும். இறுதியில் தர்மம் தான் வெல்லும். இப்போது நீ பெற்ற வெற்றி ஒரு மாயை. அதை நீ விரைவில் புரிந்து கொள்வாய்" என்றான் மணிகுண்டலன்.

**நா**ட்கள் நகர்ந்தன. மீண்டும் இருவரும் பந்தயம் வைத்துக் கொண்டனர். நீதி, நியாயம், தர்மம் முதலியன வாழ்க்கையை மேம்படுத்தாது. அவை துன்பங்களையே தரும். தீய

செயல்கள் தான் என்றும் நன்மையைத் தரும் என்று இருவரும் ஊரவரிடம் கூறிக் கருத்துக் கேட்டனர். இதில் தோற்பவர்களின் இரு கைகளும் துண்டிக்கப்படும் என்ற நிபந்தனை இருந்தது. ஊரவர்கள் மீண்டும் கௌதமனுக்குச் சார்பாகவே பதில் கூறினர். அதனால் மணிகுண்டலனின் இரு கைகளும் துண்டிக்கப்பட்டன. அதனால் மனம் வருந்துவது போலப் பாசாங்கு செய்த கௌதமன் கூறினான், "நண்பா, தர்மத்தைப் பேசினாய். நான் தீயவற்றைப் பேசினேன். கைக்கொண்டேன். அதனால் எனக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. தர்மவானான நீ உனது திரவியங்களை இழந்தாய். இப்போது இரு கைகளையும் இழந்தாய். இனியும் தர்மமா பேசப்போகிறாய்" என்றான்.

"**எ**னது உடலில் உயிர் உள்ள வரை நான் தர்மம்படி தான் வாழ்வேன். வாழ்வு என்பது எனக்குக் கரும்பல்ல. தர்மத்தை மீறுவோர் இறைவனால் தண்டிக்கப்படுவர். அதனால் எனக்கு உபதேசம் செய்யாது நீ உனது விருப்பப்படி வாழ்" என்றான்.

**அ**தனால் கோபங் கொண்ட கௌதமன் மணிகுண்டலனை வாய்க்கு வந்தபடி ஏசினான். பின்பு, "உனது கைகளை வெட்டியது போல உனது தலையையும் வெட்டுவேன்" என்றான்.

**மீ**ண்டும் இருவரும் ஒரு பந்தயம் வைத்தனர். அதில் தோற்றால் தோற்றவரின் கண்கள் பறிக்கப்படும் என்று நிபந்தனையிடப்பட்டது. அதிலும் மணிகுண்டலன் தோற்றுவிட்டான். அதனால் மணிகுண்டலனது கண்களைக் கௌதமன் பறித்து விட்டு அவனை அந்த இடத்தில் மரணமடையட்டும் என்று விட்டு விட்டுச் சென்றான். கௌதமி ஆற்றங்கரையில் மணிகுண்டலன் முனகிக் கொண்டு கிடந்தான் உடல் முழுவதும் பயங்கரமாக வலித்தது. இரவு வந்தது. பூமியெங்கும் இருள் பரவியது.

**கௌ**தமி ஆற்றங்கரையில் மகாவிஷ்ணுவின் விக்கிரகம் ஒன்று இருந்தது. தினந்தோறும் இரவில் விபீஷணனின் மகன் அங்கு வந்து விஷ்ணுவுக்குப் பூசை செய்வான். அன்று வந்தபோது கண்களை இழந்து பரிதவிக்கும் மணிகுண்டலனது கதையைக் கேட்டு மிக்க கவலை கொண்டு அதைத் தனது தந்தைக்குச் சொன்னான். அப்போது விபீஷணனன், "இராம இராவண யுத்தத்தின் போது மயக்கமடைந்த இலக்குமணனைக் காப்பாற்ற அனுமான் சஞ்சீவி மலையைத் தூக்கி வந்தபோது அந்த இடத்தில் 'விஷல்யகரணி' என்ற மூலிகைச் செடி விழுந்து முளைத்தது தற்பொழுது மரமாக உள்ளது. அதைப் பயன்படுத்தி மணிகுண்டலனைக் காப்பாற்றலாம்" என்று சொன்னான்.

**உ**டனே வீரர்கள் அங்கு சென்று மரமாக நின்ற 'விஷல்யகரணி' யின் கிளையை வெட்டிவந்து மணிகுண்டலன் மீது வைக்க அவனது கைகளும், கண்களும் வந்து சேர்ந்தன. அதனால் மிக்க மகிழ்ச்சியடைந்த மணிகுண்டலன் விபீஷணனுக்கு நன்றி கூறினான்.

மணிகுண்டலனுக்குச் சிகிச்சை அளித்த பின் விபீஷ்ணன் தனது மகனை அழைத்துக் கொண்டு தனது நாடான இலங்கைக்குச் சென்றான்.

**மு**ழுமையாகச் சுகமடைந்த மணிகுண்டலன் மகாபுரம் என்ற நாட்டை அடைந்தான். அந்த நாட்டின் மன்னனான மகாராஜனுக்கு ஒரு புத்திரி மட்டும் இருந்தாள். அவளும் குருடியாகவே இருந்தாள். அதனால் பெரும் வேதனையடைந்த மன்னன் தனது மகளுக்குச் சிகிச்சை அளித்துக் கண் பார்வையைத் தெரியவைப்பவனுக்கு அவளை மணம் முடித்துக் கொடுத்து நாட்டை ஆளும் உரிமையையும் வழங்குவேன் என்று முரசு மூலம் அறிவித்திருந்தான். அதைக் கேள்விப்பட்ட பல வைத்தியர்கள் அவளைத் தாம் குணமாக்குவோம் என்று கூறிச் சிகிச்சை அளித்தும் அவளுக்குக் கண்பார்வை கிடைக்கவில்லை.

**அ**ந்த அறிவிப்பைக் கேள்விப்பட்ட மணிகுண்டலன் தன்னைக் குணப்படுத்திய மூலிகையான ‘விஷல்யகரணி’ மரம் நிற்கும் கௌதமி ஆற்றங்கரைக்குச் சென்று அங்கு மரமாக வளர்ந்திருந்த விஷல்யகரணியின் கிளை ஒன்றை வெட்டி வந்து மகாபுரத்து மன்னனின் மகளின் கண்களில் வைக்க, அவளது கண்கள் பார்வையைப் பெற்றன. அரசன் மிக்க மகிழ்வடைந்து தனது மகளை மணிகுண்டலனுக்குத் திருமணம் செய்து கொடுத்து அந் நாட்டு அரசனாக முடிசூட்டி வைத்தான்.

**இ**வ்வாறு பல ஆண்டுகள் கழிந்தன. கௌதமன் தீய வழியில் வாழ்ந்ததால் அவனை ஊரவர் பிடித்துக் கட்டிவைத்து அடித்துவிட்டு, அந் நாட்டின் அரசனான மணிகுண்டலனது அரச சபைக்குக் கொண்டு வந்தனர்.

**பி**ச்சைக்காரக் கோலத்தில் கௌதமனைக் கண்ட மணிகுண்டலன் அவனுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி, தர்மம் எப்போதும் வீண் போவதில்லை. ஆரம்பத்தில் அது சோதனை செய்தாலும், பின் அது தரவேண்டிய சன்மானங்களைத் தரும். தர்மநெறிப்படி வாழ்பவர்களுக்குத் தர்மம் எல்லா வகையிலும் உதவிகள் செய்யும். அதனால் இனியாவது தர்மநெறிப்படி வாழ்” என்று கூறி அவனுக்கு வேண்டியளவு திரவியங்களைக் கொடுத்தான். இந் நிகழ்ச்சிகள் யாவும் கௌதமி நதிக்கரையில் நிகழ்ந்தன.

## 41. கண்டு மகரிஷியும் அப்ஸரசும்



"குருவே இனி மனிதரின் குணங்களைப் பற்றியும், வர்ணாச்சிரம விபரங்களைப் பற்றியும், ஆசார வேறுபாடுகள் பற்றியும், விரிவாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்" என்று மைத்ரேயர் பணிவுடன் கேட்டார்.

"மைத்ரேயரே, பிரமன் மனிதர்களைப் படைக்க எண்ணிய போது அவரது முகத்தில் இருந்து பிராமணரும், மார்பில் இருந்து சத்திரியர்களும், தொடையில் இருந்து வைசியர்களும், பாதங்களில் இருந்து சூத்திரர்களும் தோன்றினர்.

இந்த நால்வகையான மக்களும் யாகங்களுக்கு முக்கியமானவர்கள். யாகங்களினால் தேவதைகள் மகிழ்ந்து காலாகாலத்திற்கு மழையைப் பொழிவித்து மக்களை மகிழ்வடையச் செய்வார்கள். வேதத்தைப் பேணி அதன் படி வாழும் சற்புரிசர்கள் சொர்க்க சுகத்தையும் மனிதப்பிறவியிலேயே அடைவார்கள்.

இது கிருதாயுகத்திலிருந்து திரேதாயுகத்தின் இடைக்காலம் வரை நடத்தது. பின் காலவசத்தினால் மனிதர்களுடைய சத்துவமோகமும் கோபமும் மேலெழுந்தன. அதர்மம் பெருகியது. அதனால் தீய செயங்கள் அதிகரித்தன. அதனால் ஞானம் குறைவடையப் பாவம் மிகுந்தது. முன்பு யோகப் பயிற்சியால் பெண்கள் இல்லாமலே இன்பம் அனுபவிக்கலாம். அது போலப் பசியும் யோகப் பயிற்சியால் இல்லாதிருந்தது. ஒரு முறை மழை பெய்தால் விளையும் தானியம் தேவைக்கு அதிகமாக இருந்தது. நினைத்தவை யாவும் நினைத்தவுடன் கைகூடின. கற்பக விருச்சங்கள் வேண்டிய போது வேண்டியவற்றைக் கொடுத்தன. உழுது பண்படுத்தாமலே பயிர்கள் விளைந்தன. இவையாவும் தீயசெயல்களால் மாறுபட்டன.

பூமியில் வாழ்ந்த மக்கள் பல்வேறு வகையிலும் முரண்பட்டு ஒருவரை ஒருவர் நம்பாமல் சண்டையிட்டு இடம்பெயர்ந்து தண்ணீர் உள்ள பகுதிகளுக்குச் சென்று வாழ்ந்தனர். அங்கு கோட்டைகளையும் கொத்தளங்களையும் அகழிகளையும் அமைத்தனர். பிழைப்புக்காகத் தொழில்களைச் செய்தனர். பயிர்த் தொழிலால் விளைந்த தானியங்கள் மூலம் தற்காலிகமான பயன்களை அனுபவித்தனர்.

அப்போது பதினேழு வகையான தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. நெல், யவம், உளுந்து, கோதுமை, பிரியங்கு, கொள்ளு, சாமை, செந்நெல், காட்டு எள், கெவீது,

மூங்கிலரிசி, மற்கடகம் என்ற பதின்நான்கு வகையான தானியங்களும் கிராமிய ஆரணியங்கள் என்ற பெயரைப் பெற்று யாகங்களுக்குப் பயன்பட்டன. இவற்றைப் பயன்படுத்தி ஞானிகள் பஞ்ச மகா யாகங்களைச் செய்தனர்.

**மை**த்ரேயரே, தினமும் யாகாதி கர்மங்களைச் செய்பவர்கள் சகல பாவங்களில் இருந்தும் விடுபட்டு இறைவனின் அருளைப் பெற்று இன்பமாக வாழ்வார்கள். முன்பு யாகங்களிலும் கடவுளிலும் நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் பின்பு காலமாற்றத்தால் அவற்றை நிந்திக்கத் தொடங்கினர். பூசைகளுக்கு இடையூறுகளைச் செய்தனர். தமது சுய இன்பத்திற்கான செயல்களில் ஈடுபடத் தொடங்கினர்.

**நா**ன்கு வர்ணங்களை உருவாக்கிய பிரமதேவர் அவர்களுக்கான ஆசிரமங்களையும் உருவகித்தார். அதன்பின் அவர்களுக்கான புண்ணிய யோகங்களையும் உருவாக்கினார். அதன்படி பிராமணர்களுக்கு பிரஜாபத்திய லோகத்தையும், சத்திரியர்களுக்கு இந்திர லோகத்தையும், சைவிகர்களுக்கு மருத்துக்களின் லோகத்தையும், சூத்திரர்களுக்கு கந்தர்வலோகத்தையும், பிரமச்சாரிகளுக்கு திவ்விய லோகத்தையும், வானப் பிரஸ்தர்களுக்கு சப்தரிஷிகளின் லோகத்தையும், கிரகஸ்தர்களுக்கு பிரஜாபத்திய லோகத்தையும், சந்நியாசிகளுக்குப் பிரமலோகத்தையும் ஒதுக்க நினைத்தார். இவை அனைத்தும் அவரவரது கர்மவினைகளுக்கேற்ப ஒதுக்கப்பட்ட லோகங்களாகும்.

**யோ**கிகளுக்கு அமிர்த நீராடல் உண்டென்ற படியால் அவர்களுக்கு துருவ லோகத்திற்கு மேலே, கங்கை தோன்றும் இடத்தை ஒதுக்கினார். சந்திர சூரியர்கள் முதலிய கிரகங்கள் தமது இடம்விட்டுப் பல முறை நீங்குகின்றன. துவார சடாச்சர மந்திரத்தை ஜெபிக்கின்ற மகா ஞானிகள் ஒரு போதும் திரும்பிவராமல் பரமானந்தத்தை அனுபவிக்கின்றனர். இனி பாவம் செய்த தீயவர்கள் அடையும் லோகத்தைப் பற்றிக் கூறுகிறேன்.

“**தா**மிஸ்வரம், அந்தாமிஸ்ரம், ரௌரவம், மகாரௌரவம், அசிபத்ரவனம், கால சூத்திரம், அவீ சீமத்து என்ற கொடிய நரகங்கள் வேதங்களை நிந்தித்து வாழ்கின்ற பாவாத்து மாக்களுக்கு உண்டாகும்”.

**ப**ராசர முனிவர் தொடர்ந்து கூறலானார், “மைத்ரேயரே, பிரசேதசர்கள் கடலில் மூழ்கித் தவம் செய்தபோது, அவர்களது தந்தையான பிராசீனபர்கி அரசாட்சியைத் துறந்து தவம் புரியலானார். அதனால் நாடு குழம்பியது. பயிர்த்தொழிலை மக்கள் கைவிட்டமையால் மரங்கள் வளர்ந்து காடாயின. அதனால் காற்றுக் கூட வீசவில்லை. மக்கள் அழிந்து கொண்டிருந்தனர் பிரசேதசர்கள் தவத்தை முடித்துக் கொண்டு நாட்டிற்கு வந்த போது நாடு

காடாக இருந்தது. அதனால் கோபங் கொண்ட அவர்கள் தங்கள் முகத்தில் இருந்து காற்றையும், அக்கினியையும் உருவாக்கினர் அதனால் காடு அழிந்தது.

**அ**தைக் கண்டு சந்திரன் கலக்கமடைந்து, பிரசேதசர்களிடம் வந்து, ‘‘அரசகுமாரர்களே, நான் சொல்வதைக் கேளுங்கள். மரங்களுடன் உடன்பாடு செய்து நட்பை ஏற்படுத்துகிறேன். மரங்களுக்கெல்லாம் மகளான மாரிசை என்ற கன்னியை, நான் எதிர்காலத்தை உணர்ந்து எனது கிரணங்களால் வளர்த்து வருகிறேன். அழகு சுந்தரியான அப் பெண்ணான மாரிசையை உங்களுக்குப் பரிசாகத் தருகிறேன். அவள் உங்கள் வம்சத்தை வளப்படுத்துவாள். அந்தப் பெண்ணிடம் உங்கள் தேஜசின் பாதியாலும், தசன் என்ற பிரஜாபதி பிறப்பான். அவன் அக்கினிக்கு ஈடான பலத்தை உடையவனாக விளங்குவான்.

‘‘**பூ**ர்வகாலத்தில் வேத உபநிடதங்களைக் கற்ற கண்டு என்ற மா முனிவர், கோமதியாற்றங் கரையில் தவம் செய்து கொண்டிருந்தார். இந்திரன் அவருடைய தவத்தைக் கெடுக்க நினைத்து, பிரமிலோசை என்ற தேவ மங்கையை அனுப்பினான். அவள் முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்து தனது அழகால் முனிவரை மோகிக்கச் செய்தாள். அதனால் கண்டு முனிவர் தவம் செய்வதை விட்டு விட்டு அவளின் அழகில் மயங்கி அவளுடன் நூறு ஆண்டுகள் கூடி வாழ்ந்தார். ஒரு நாள் அவள் முனிவரின் அருகில் வந்து, ‘‘பிராமண உத்தமரே, நான் இனி இங்கிருக்க முடியாது. எனது காலம் முடிவடைந்து விட்டதால், என்னைத் தேவலோலகம் செல்ல அனுமதியுங்கள்’’ என்றாள்.

**அ**தனால் கவலை கொண்ட கண்டு முனிவர் அவளின் அழகில் மயங்கித் தன்னுடன் சில காலம் இருக்குமாறு கெஞ்சினார். அவரின் நிலையை உணர்ந்த அவள் மேலும் நூறு ஆண்டுகள் அவருடன் கூடி இன்புற்றிருந்தாள். நூறு ஆண்டுகள் முடிந்த பின் அவள் தேவலோகம் செல்லக் கண்டு முனிவரிடம் அனுமதி கேட்டபோது அவர் அவள் மீதிருந்த அளவற்ற மோகத்தால் அவளைப் போகவிடவில்லை. அதனால் அவள் மேலும் நூறு ஆண்டுகள் அவருடன் கூடியிருந்து, அவருக்கு எல்லையற்ற இன்பங்களைக் கொடுத்தாள். அதன்பின் பிரமிலோசை தேவருலகம் செல்ல விரும்பி அதை கண்டு முனிவருக்குக் கூறிய போது முனிவர் அவளை இறுக்கக் கட்டி அணைத்துக் கொண்டு, ‘‘அழகிய பெண்ணே, இன்னும் ஒரு கணம் என்னுடன் கூடியிரு’’ என்று கெஞ்சினார்.

**தா**ன் அவரை விட்டுச் சென்றால் முனிவர் சபித்து விடுவார் என்ற பயத்தினால் மீண்டும் இருநூறு வருடங்கள் கூடியிருந்து விட்டுத் தான் தேவலோகம் செல்ல வேண்டும் என்று சொன்னாள். அதற்கு முனிவர் இன்னும் சில நாட்கள் என்னுடன் இரு, இன்னும் சில நாட்கள் என்னுடன் கூடியிரு என்று சொல்லிக் கொண்டிருந்தார். பிரமிலோசை வேறு வழியின்றி முனிவரின் காம இச்சையைப் போக்கிக் கொண்டிருந்தாள். அவளுக்கு அவர் சாபமிட்டுவிடுவாரோ என்ற பயமும், அவரின் பரிதாப நிலையும் அவரைப் பிரிவதால் வரும்

துன்ப நிலையும் அவளைப் பிரிய விடாது தடுத்தது. அதனால் வழி தெரியாது தவித்தாள். அவளின் மீதுள்ள இச்சை கண்டு முனிவருக்கு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருந்தது.

**ஒ**ரு நாள் விடியற்காலை கண்டு முனிவர் தனது ஆச்சிரமத்தை விட்டு எங்கோ புறப்பட ஆயத்தமானார். அதைக் கண்ட பிரமிலோசை அவரைத் தடுத்து, ‘‘எங்கே அவசரமாகப் புறப்படுகிறீர்கள்?’’ என்று கேட்டாள். அதற்கு முனிவர், ‘‘பெண்ணே, சந்தியாவந்தனக் காலம் வந்து விட்டது. அதைச் செய்யாவிட்டால் எனது கடமையில் ஒன்றைத் தவறவிட்டவனாவேன்’’ என்றார்.

‘‘**ச**ந்தியாவந்தன வேளை பற்றி இப்போதா உங்களுக்குத் தெரிந்தது? எத்தனையோ ஆண்டுகள் உங்களுக்கு ஒரே நாளாக இருப்பது அனைவருக்கும் வியப்பைத்தரும். இதை யாரிடமாவது சொல்லிப்பாருங்கள்’’ என்றாள்.

‘‘**பெ**ண்ணே, நீ அதிகாலையில் நதிக்கரையில் இருந்து வந்தாய். அப்போது நான் உன்னைக் கண்டு மிக்க மகிழ்வுடன் அழைத்து வந்தேன். இப்போது இன்றைய நாள் முடிந்து மாலை நேரம் வந்தால் சந்தியாவந்தனம் செய்யப் போகிறேன்’’ என்றார்.

‘‘**நா**தா, நான் அதிகாலையில் நதிக்கரைக்கு வந்தது உண்மைதான். அது இன்று அல்ல பல நூற்றாண்டுகளுக்கு முன். நான் உங்களிடம் வந்து பல நூற்றாண்டுகள் கழிந்து விட்டன’’ என்றாள்.

**அ**தனால் பயந்து நடுங்கிய கண்டு முனிவர், ‘‘பெண்ணே, நான் உன்னுடன் இன்பம் அனுபவித்த காலங்கள் எவ்வளவு?’’ என்று கேட்டார்.

‘‘**மு**னிவரே, தொள்ளாயிரத்து எழு ஆண்டுகளும் ஆறு மாதங்களும் மூன்று நாட்களுமாகின்றன’’ என்றாள்.

‘‘**நீ** உண்மையாகச் சொல்கிறாயா? நான் உன்னுடன் கூடியிருந்தது ஒரு நாள்த் தான்’’ என்றார்.

‘‘**மு**னிவரே, உம்மிடம் நான் எதற்காகப் பொய் சொல்ல வேண்டும்?’’ என்று கேட்டாள். அதைக் கேட்டு முனிவர் குழப்பமடைந்து, ‘‘எனது தவம் யாவும் நாசமாகி விட்டது. எனது வாழ்க்கை வீணாகி விட்டதே. எல்லாவற்றையும் இழந்து விட்டேனே. எனது தவத்தைக் குழப்ப யாராவது சதி செய்து இவளை அனுப்பியிருப்பானோ என்று நினைத்துத் தேவமங்கையான பிரமிலோசையை நோக்கி, ‘‘அடி பாதகி, இனியாவது என்னை விட்டுச் சென்றுவிடு. உன் மீது கொண்ட மோகத்தால் நான் எனது தவத்தைக் கெடுத்துவிட்டேன். அதனால் உன்னைச்

சபித்துச் சாம்பலாக்க வேண்டும். அனால் நான் உன்னுடன் கூடியிருந்தமையால், உன்னை மன்னிக்கிறேன். நினைத்துப் பார்த்தால் உன்னில் குற்றமில்லை. உனது அழகான தேகம் என்னை மிகவும் வசீகரித்து விட்டது. தேவேந்திரனின் சொற்படி எனது தவத்தைக் கலைத்த உன்னுடைய அழகு மிகுந்த வனப்பை அழிக்க வேண்டும்'' என்ற போது பிரமிலோசை பயந்து நடுநடுங்கியவாறு நின்றாள். அதைக் கண்ட முனிவர் ''போ, போ, இவ்விடத்தை விட்டுப்போ'' என்று உரத்துக் கூறினார். அதனால் நிம்மதியடைந்த பிரமிலோசை ஆச்சிரமத்தை விட்டு வெளியே வந்து வானவீதியூடாகத் தேவருலகத்திற்குச் சென்ற போது அவளுக்கு வியர்த்தது. அவள் தனது வியர்வையை இலைகளால் துடைத்துப் போட்டபடி சென்றாள்.

**பி**ரமிசை அப்போது கர்ப்பவதியாக இருந்தாள். அந்தக் கர்ப்பம் வியர்வையாக வெளியே வந்தபோது அவள் அதை இலைகளால் துடைத்துப் போட்டமையால் மரங்கள் யாவும் அக் கர்ப்பத்தை ஏற்றன. பின் அக் கர்ப்பத்தில் இருந்து ஓர் அழகான கன்னி தோன்றினாள். அவள் மாரிசை என்ற பெயருடன் வளர்ந்து வருகிறாள். அதனால் அவள் எனக்கும் வாயுவிற்கும் கண்டு முனிவருக்கும் பிரமிலோசைக்கும் மகளாகிறாள்.

**க**ண்டு முனிவர் பிரமிலோசையின் மோகத்தால் தனது தவம் அழிந்தமையினால் மிகவும் வருந்தி விஷ்ணு வாசம் செய்யும் புருசோத்தமம் என்னும் மலைக்கு வந்து விஷ்ணுவை ஆராதித்தார்.

**அ**தைக் கேட்ட பிரசேதசர்கள் சந்திரனை நோக்கி, ''மகாத்மாவே, கண்டு முனிவர் நாராயணனைத் துதித்த பிரம பாரஸ்துதியை நாங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறோம்'' என்றனர்.

''**மு**டிவற்றதும், தாண்ட முடியாததும், காமக் குரோதங்கள் நிறைந்ததும், பயங்கரமானதுமான சம்சார சாகரத்தைக் கடப்பதற்கு ஒரு தெப்பத்தைப்போல இருப்பவனும், அதற்குப் பரமமான முடிவாக இருப்பவனும், உபதேசப்பரம்பரையினால் அறியப்பட்டவனும், அளவற்ற சக்தியுடையவனும், தேச, கால, பொருள்களினாலே அறிய முடியாதவனும், ஆன்மாக்களுக்கு மேம்பட்டவனும், காரணமாய் ஆனந்த ரூபமாக இருப்பவனும், சகல சக்திகளோடு கூடி நித்தியமாய் விளங்கும் திவ்விய மங்களமுடையவனும், ஆனந்த ரூபியாக இருப்பவனும், முக்கியத்திற்கு முடிவிடமாயும் வேத வைதீகங்களைப் பரிபாலிப்பவனாகவும், பிரதானமும் சீவனும் பிரளய காலத்தில் சேர்கின்ற ஸ்தானமாயும், முத்தியடைபவர்களுக்கு மேம்பட்டவனாகவும் இருக்கின்ற விஷ்ணுவைப் போற்றுகின்றேன்.

**கே**சவனைச் சிந்தித்து சரணடைந்து நிற்கின்ற அடியேனிடத்தில் சத்கிரியா யோகங்களுக்குப் பங்கம் ஏற்படும் படி உண்டாகும் ராகத்துவேச, லோபமோகாதி

துர்க்குணங்கள்சாந்தமாகக் கடவன என்று கண்டு முனிவர் பரமமான பிரமாபரஸ் துதியை ஜபித்து கேசவனை ஆராதித்து பரமபதத்திற்குச் சென்றார்'' என்றான் சந்திரன்.

"**மை**த்ரேயரே, மரங்களின் கர்ப்பத்தில் ஜனித்த மாரிசை பூர்வ ஜென்மத்தில் ஓர் அரசனின் மனைவியாக இருந்தாள். அவள் புத்திரப் பேறு அடையாது இளவயதிலேயே விதவையாகி விட்டாள். அதன்பின் அவன் மிகுந்த பக்தியுடன் ஸ்ரீமத் நாராயணனை ஆராதித்து வந்தாள். அதனால் மகிழ்ந்த நாராயணன் அப்பெண்ணுக்குக் காட்சி கொடுத்து, "பெண்ணே, நீ விரும்பிய வரத்தைக் கேள்'' என்றார். அதற்கு அப் பெண், "சுவாமி, இப்பிறப்பில் நான் இளமையில் விதவையாகியதால் புத்திரப் பேறு இல்லாது போயிற்று. இனி உங்களது கருணையினால் இனியெடுக்கும் பிறவிகளில் நல்ல கணவனும், பிரமதேவனுக்கு இணையான புத்திரனும் உண்டாக வேண்டும். நானும் அழகுடன் வசதியுள்ளவளாய்ப் பிறக்க வேண்டும்'' என்று கேட்டாள்.

**அ**தைக் கேட்ட நாராயணன் மகிழ்வுடன் அவளை அணைதெடுத்து, "பெண்ணே, உனக்கு மறு பிறவியில் மிகவும் பிரசித்தி பெற்ற பலசாலிகளும் அறிவிற் சிறந்தவர்களுமான பத்துப் பேர் கணவனாகக் கிடைப்பார்கள். அத்துடன் மகான் ஒருவனும் பிறந்து திரிலோகங்களும் நிறையும்படியான சந்தானத்தை அடைவாய். அவன் அனேக வம்சங்களுக்குக் கர்த்தாவாக இருப்பான். நீ பேரழகும் நற்குணங்களும் கொண்ட பதிவிரதையாய் சகலரும் மதித்து அன்பு கொண்டவளாயும் இருப்பாய்'' என்று சொல்லி மறைந்தார்.

"**இ**வ்விதமாக ஸ்ரீமத் நாராயணனுடைய அருளைப் பெற்ற மாரிசையை நீங்கள் பத்துப் பேரும் மனைவியாகப் பெற்றுக் கொள்வீர்களாக'' என்று சந்திரன் சொன்னான்.

**அ**தைக் கேட்டு மகிழ்ந்த மரங்கள், மாரிசையை அவர்களுக்குக் கொடுக்க, அவர்கள் அவளைத் திருமணம் செய்து கொண்டனர். அவர்களுக்கு மகா பலசாலியான தசப்பிரஜாபதி பிறந்தான். அந்தத் தசப்பிரஜாபதி பூர்வத்தில் பிரமாவினுடைய தட்சணை அங்குசத்திலிருந்து பிறந்தவன். மகா தவசியான அந்தத் தசன், மக்களைச் சிருஷ்டிக்க நினைத்து சரங்களும், அசரங்களும் இருபாதங்களும், நான்கு பாதங்களுமான ஐந்து ஜாதங்களைப் படைத்து பிரமாவின் கட்டளையை பிரபாலித்தான்.

**த**க்சன், ஐம்பது பெண்களைப் பெற்றான். அவர்களில் பத்துப் பேரைத் தருமனுக்கும், பதின்மூன்று பெண்களைக் காசிபருக்கும், இருபத்தேழு பெண்களைச் சந்திரனுக்கும் மணம் முடித்து வைத்தான். அப் பெண்களிடமிருந்து தேவ, தைத்யதாவை புசங்க, காந்தர்வ, தேவர்கள் பிறந்தனர். அன்றிலிருந்து தான் ஆண் பெண் உறவால் பிள்ளைகள் பிறந்து

வருகிறார்கள். அதற்கு முன் தவ யோகிகள் தரிசனத்தாலும், ஸ்பரிசத்தாலும் சந்தானங்களை உருவாக்கினர்'' என்றார் பராசரர்.

**அ**ப்போது மைத்ரேயர் அவரை நோக்கி, ''குருவே, பூர்வ காலத்தில் தக்சன் என்பவன் பிரமாவின் கட்டை விரலில் இருந்து பிறந்தான் என்று கூறினீர்கள். இப்போது பிரசேதர்களால் பிறந்தான் என்கிறீர்கள். சந்திரனுக்குப் பாட்டனான தக்சன் திரும்பவும் அவனுக்கு எப்படி மாமனானான்?'' என்று கேட்டார்.

''**மை**த்ரேயரே, தக்சன் முதலான சகல தேவர்களும் முனிவர்களும் யுகந்தோறும் பிறந்து லயத்தை அடைந்து வருகின்றனர். பூர்வ காலத்தில் வயதும் இல்லை, பெரியவன் சிறியவன் என்ற வேறுபாடுகளும் இல்லை. தவத்தாலும் ஞானத்தாலும் உயர்ந்தவர்களே மேலானவர்களாகக் கருதப்பட்டனர்'' என்றார் பராசரர்.

''**அ**ப்படியானால் குருவே, தேவர்கள் தானவர்கள், கந்தருவர்கள் முதலானோரின் உற்பத்தியை எனக்குக் கூறுங்கள்'' என்று கேட்டார் மைத்ரேயர்.

''**மை**த்ரேயரே, பிரமனின் கட்டளைப்படி தேவர்கள், ரிஷிகள், கந்தர்வர்கள், அசுரர்கள் பலவகையான பூதங்கள் முதலியவற்றை தக்சன் தனது சங்கற்ப மாத்திரத்தாலே சிருஷ்டித்தான். அவை அபிவிருத்தியடையாதிருந்ததைக் கண்ட அவன் மீண்டும் மீண்டும் சிருஷ்டித்தான். அதற்காக வீரனைப் பிரஜாபதியின் மகளான அசுக்கினி என்பவளை மணந்து அவள் மூலம் ஐயாயிரம் பிள்ளைகளைப் பெற்றான். அவர்கள் பிரஜா விருத்தி செய்ய முற்பட்டனர்.

**அ**ப்போது நாதமுனிவர் அங்கு வந்து, ''அரியசுவர்களே, பூமியின் நிலப் பரப்பையும், உயர்வையும், தாழ்வையும் அறியாமல் எதையும் சிருஷ்டிக்க முடியாது. அதனால் அதை அறிந்த பின்பு சிருஷ்டியைத் தொடங்குங்கள்'' என்றார். அதனால் அவர்கள் அதை அறிந்து வருவதாகக் கூறிச் சென்றனரே தவிரத் திரும்பிவரவில்லை. அதை அறிந்த தக்சன், தனது மனைவியான அசிக்கினியோடு சேர்ந்து ஆயிரம் புத்திரர்களைப் பெற்றான். அவர்கள் பிரஜா சிருஷ்டி செய்ய நினைத்தபோது முன்பு போல நாரத முனிவர் வந்து முன் சொன்னவற்றைச் சொன்னார். அதனால் அவர்கள் தமது மூத்த சகோதரர்கள் போல அதை அறியச் சென்று மறைந்து விட்டனர். அதைக் கேள்விப்பட்டுக் கடுங்கோபம் கொண்ட தக்சன் நாரதரை அழைத்து, ''நீ இனிமேல் ஓர் இடத்தில் தங்கியிராது அலைந்து திரிவாயாக'' என்று சாபமிட்டான்.

**மீ**ண்டும் தக்சன், அசிக்கினியோடு கூடி அறுபது பெண் பிள்ளைகளைப் பெற்றான். அவர்களில் பத்துப் பெண்களைத் தருமனுக்கும் பதின்மூன்று பெண்களைக் காசிபருக்கும்

இருபத்தேழு பெண்களைச் சந்திரனுக்கும், அரிஷ்டநேமிக்கு நான்கு பெண்களையும், வெகுபத்திர இரு பெண்களையும், பிருசாகவனுக்கு இரண்டு பெண்களையும் திருமணம் செய்து வைத்தான். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பல பிள்ளைகள் பிறந்தன.

“**இ**னி நான் அக்கினியின் வம்சத்தைச் சொல்கிறேன். அக்கினிக்கு நாணல் புல்லிலே சுப்பிரமணியன் என்ற புத்திரன் உற்பத்தியானான். அவனைக் கார்த்திகைப் பெண்கள் கண்டெடுத்து வளர்த்தமையால் கார்த்திகேயன் என்ற பெயரைப் பெற்றான். பிரத்தியூசனுக்கு தேவன் என்ற முனிவன் பிறந்தான். அவனுக்கு இரு பிள்ளைகள் பிறந்தனர். அவர்களில் ஒருவன் பிரகஸ்பதி. அந்தப் பிரகஸ்பதிக்கு ஒரு சகோதரி இருந்தாள். அவள் யோக சித்தியுள்ளவள். அவள் விரத்தியுற்றுப் பிரமச்சாரியத்தோடு உலகெங்கும் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். பின் அவள் வசுக்களில் எட்டாவதான பிரகாசனுக்கு மனைவியாகி விஸ்வகர்மாவைப் பெற்றாள். அவன் ஒரு சிற்பக் கலைஞன். அவன் தேவதச்சனாகி அனேக திவ்விய ஆபரணங்களைச் செய்தான். விமானங்களையும் நிர்மாணித்தான். அவனுக்கு அனஜகபாத், அகிர்ப் புத்தினியன், துவட்டா, ருத்திரன் என்ற நான்கு பிள்ளைகள் பிறந்தனர். துவட்டாவுக்கு விசுவரூபன் பிறந்தான். ருத்திரனுக்குப் பதினொரு புத்திரர்கள் பிறந்து, ருத்திரர் என்ற பெயரைப் பெற்று, திரிலோகாதிபதிகளாய் விளங்குகின்றனர். இவர்களுக்கு மகா பலசாலிகளான நூறு பிள்ளைகள் பிறந்தனர்.

**கா**சிபருக்கு இருந்த பதின்மூன்று மனைவிகளுள் அதிதி என்ற மனைவிக்கு துசிதர் என்ற பன்னிரண்டு தேவதைகள் பிறந்தனர். அவர்கள் இந்திரன், விஷ்ணு, அரியமன், தாதா, துவஷ்டா, பூஷா, விவசுவான், சவிதா, மித்திரன், வருணன், அமிசு, பகன் என்ற பெயர்களைப் பெற்று, துவாசருத்திரர்களாக விளங்குகின்றனர். வைவஸ்வத மனு வந்தரரத்தில் ஆதித்தியர் என்று சொல்லப்படுவோர், சாட்சமனுவந்தரத்தில் சந்திரனுக்கு மனைவியான அஸ்வினி முதலான இருபத்தேழு பெண்களுக்கும் மக்கள் உண்டாயினர். அரிஷ்ட நேமியின் பத்தினிகள் நால்வருக்கும் பதினாறு பிள்ளைகள் பிறந்தனர். பெருபுத்திரனுக்கு நான்கு மின்னல்கள் உண்டாயின. சகங்திரசுவுக்கு பிரமரிஷிகள் துதிக்கத்தக்க பிரதியங்கிரகங்கள் என்ற மந்திரங்கள் உதித்தன. பிருசாசுவனுக்கு, திவ்வியமான பானங்கள் பிறந்தன.

**இ**வ்வாறு முப்பத்து முக்கோடி தேவதைகளும், ஒவ்வொரு மநுவந்தரத்திலும் பிறந்து கொண்டே இருப்பார்கள். இவர்கள் சுய இச்சைப்படி பிறப்பார்கள். திதி என்பவளிடத்தில் காசிபருக்கு இரணியகசிபுவும், விட்பிரசித்தி என்ற ரக்சதனுக்கு இரணியாகசனும், விட்பிரசித்தி என்ற ரக்சதனுக்கு சிம்மிகை என்ற பெண்ணும் பிறந்தனர். இரணிய கசிபுக்கு அனகிலாதன், கிலாதன், பிரகலாதன், சம்கிலாதன் என்ற நான்கு பிள்ளைகள் பிறந்தனர். அவர்களுள் பிரகலாதன் ஸ்ரீமத் நாராயணனிடத்தில் பெரும் பக்தியுள்ளவனாக விளங்கினான்.

**அ**தனால் ஆத்திரங் கொண்ட இரணியகசிபுவின் கட்டளைப்படி அசுரர் கொளுத்திய அக்கினி, பிரகலாதன் வாசு தேவனுடைய இதயத்தில் இருந்தமையால் அதனால் எதுவும் செய்ய முடியாது போயிற்று. பின் அவனைக் கட்டிக் கடலில் அசுரர்கள் போட்டபோது மலைகளும், காடுகளும் நடுங்கின. பூமண்டலமும் சேர்ந்து நடுங்கியது. அதனால் பிரகலாதனின் உடல் மலைபோல வலிமைபெற்றது. அதனால் அசுரர் விட்ட அம்புகள் அவனைத் தாக்கவில்லை. விஷ சர்ப்பங்கள் கக்கிய அக்கினியும் தாக்கவில்லை. மலைகள் அவனை நசுக்கிய போதும் அவன் பாதிக்கப்படவில்லை. சொர்க்கத்தின் உச்சியில் இருந்து பிரகலாதனை இரணியகசிபு தள்ளி விழுத்திய போது பூமாதேவி அவனைத் தாய்மையுடன் ஏந்திக் கொண்டாள். அதனால் ஆத்திரமடைந்த இரணியகசிபு சம்சேரகன் என்ற வாயுவை ஏவினான். அந்த வாயு பிரகலாதனை அண்மித்ததும் அழித்துவிட்டது. பெரும் மாயாவியான சம்பராசுரன் ஏவிய மாயைகள் அனைத்தும் விஷ்ணு ஏவிய சக்கரத்தால் அழிக்கப்பட்டன. இரணியகசிபுவின் சமையல் காரர்களால் உணவில் கலக்கப்பட்ட விஷம் உணவுடன் சமிபாடடைந்தது''.

## 42. ஒரு சண்டாளனும் ஒரு பிரம்மராட்சதனும்



**அ**ரசனால் நாடுகடத்தப்பட்டவனை அல்லது சமூகத்தவரால் ஒதுக்கிவைக்கப்பட்டவனைச் சண்டாளன் என மக்கள் அழைப்பர். அவந்தி நகரின் ஒதுக்குப் புறமான ஒரு பகுதியில் சண்டாளன் ஒருவன் வசித்து வந்தான். அவனை ஊரவர் சண்டாளன் என ஒதுக்கி வைத்த போதும் அவன் சிறந்த விஷ்ணு பக்தனாக இருந்தான். ஒவ்வொரு ஏகாதசியன்றும் அவன் விரதமிருப்பான். மாலை கோவிலுக்குச் சென்று விஷ்ணுவின் புகழைப்பாடுவான்.

**அ**வந்தி நகரில் சிப்ரா என்ற நதி பாய்கிறது. ஒருநாள் ஏகாதசியன்று அந்தச் சண்டாளன் பூப் பறித்து மகாவிஷ்ணுவுக்கு மாலை கட்டுவதற்காக சிப்ரா நதிக்கரைக்குச் சென்றான். ஆற்றங்கரையில் ஒரு பெரிய மரம் நின்றது. அதில் ஒரு பிரம்ம ராட்சகன் வசித்து வந்தான். இதை அறியாத அச் சண்டாளன் மரத்திற்கு அருகே சென்றான். அவனைக் கண்ட பிரம்ம ராட்சதனுக்குப் பெரு மகிழ்ச்சி உண்டானது. அன்று தனக்கு பெரும் உணவு கிடைத்தது என்ற மகிழ்ச்சியில் அவனைப் பிடித்தது.

**பி**ரம்ம ராட்சகனின் பிடியில் சிக்கிய சண்டாளனுக்குப் பெருங் கவலையாக இருந்தது, "நான் விஷ்ணுவின் பக்தன். இன்று ஏகாதசி விரதமிருந்தேன். விரதமிருக்கும் நாட்களில் நான்

விஷ்ணுவின் ஆலயத்திற்குச் சென்று அவரை வணங்கித் திருப்பாடல்களைப் பாடுவது வழக்கம். அதனால் தயவுசெய்து என்னை விட்டுவிடு” என்று இரந்தான்.

“**நா**ன் இம்மரத்தில் இருப்பது பலருக்குத் தெரியும். அதனால் யாரும் இம் மரப் பக்கம் வருவதில்லை. அதனால் பல நாட்களாக உணவு கிடைக்காமல் பசியோடு இருக்கிறேன். அதனால் உன்னை விடமாட்டேன்” என்றான் பிரம ராட்சகன்.

**ப**லவற்றை எடுத்துச் சொல்லியும் பிரம்ம ராட்சகன் அந்தச் சண்டாளனை விடவில்லை. அதனால் கவலைப்பட்ட அந்தச் சண்டாளன் சொன்னான், பிரம்ம ராட்சகனே, நான் பலகாலமாக ஏகாதசியன்று உபவாசமிருந்து மாலையில் விஷ்ணுவின் புகழைப் பாடுவதை நியமமாகக் கொண்டுள்ளேன். அதனால் என்னை விட்டுவிடு. நான் பறித்த பூக்களை மாலையாகக் கட்டி விஷ்ணுவுக்குச் சாத்திவிட்டு அவரின் புகழைப் பாடிவிட்டு உன்னிடம் வருகிறேன். இது சத்தியம்” என்றான்.

**அ**வனது சத்தியத்தை நம்பிய பிரம்ம ராட்சகன், “நீ சென்று உனது கடமைகளை முடித்துவிட்டு வா” என்று கூறி அச் சண்டாளனை விட்டான். அச் சண்டாளன் விஷ்ணுவின் கோவிலுக்குச் சென்று இரவு முழுவதும் திருமாலின் புகழைப் பாடிவிட்டு விடிந்ததும் ஆற்றங்கரைக்கு வந்தான்.

**ச**ண்டாளன் சொன்னபடி குறித்த நேரத்திற்கு வந்ததைக் கண்டு அதிசயித்த பிரம்ம ராட்சகன், “நீ சண்டாளனாக இருக்க முடியாது. சண்டாளன் ஒருபோதும் உண்மையப் பேசமாட்டான். சத்தியம் செய்தாலும் அதை புறக்கணித்துவிட்டுத் தனது நலனில் அக்கறை கொள்வான். ஆனால் நீ ஒரு பிராமணனைப் போல ஒழுக்கமுள்ளவனாக இருக்கிறாய். எனவே நீ பிராமணன். எனக்கு நீ பொய் சொல்லிவிட்டாய்” என்றான் பிரம்ம ராட்சகன்.

“**இ**ல்லை, நான் சொல்வது உண்மை” என்றான் சண்டாளன்.

“**நீ** சொல்வது உண்மையானால் உன்னிடம் நான் சில கேள்விகளைக் கேட்கிறேன். அதற்குப் பதிலைச் சொல் அதன்பின் நீ சண்டாளனா இல்லையா என்று தீர்மானிக்கலாம்” என்று சொன்ன பிரம்ம ராட்சகன் தனது முதலாவது கேள்வியைக் கேட்டான், “நீ இரவெல்லாம் என்ன செய்தாய்?”

“**ஏ**காதசியன்று உபவாசமிருப்பேன். பின்பு இரவு முழுவதும் விஷ்ணுவின் கோவிலில் அமர்ந்து அவரின் புகழைப் பாடிக் கொண்டிருப்பேன். கடந்த இரவும் அதைத்தான் செய்தேன்” என்றான் சண்டாளன்.

“**அ**ப்படியா? இந்தத் தொண்டை நீ எவ்வளவு காலமாகச் செய்கிறாய். இடையில் எப்போதாவது ஒரு நாளிலாவது விஷ்ணுவின் புகழைப் பாடாதுவிட்டாயா...?” பிரம்ம ராட்சகன் கேட்டான்.

“**இ**ருபத்தைந்து ஆண்டுகளாக இத்தொண்டைச் செய்து வருகிறேன். ஒரு நாள்க் கூட தவறவிட்டவில்லை” என்றான் சண்டாளன்.

“**பெ**ருந்தொண்டு செய்து பெரும் புண்ணியத்தைத் தேடியுள்ளாய். நான் ஒரு பாவி பாவத்தைத் தவிர வேறு எதுவும் செய்யவில்லை. நீ விரும்பினால் நீ செய்த ஒரு நாள்த் தொண்டின் பயனை எனக்குத் தருவாயா..?” என்று பிரம்ம ராட்சகன் கேட்டான்.

**ஒ**ருநாள் என்றாலும் தவறாது விஷ்ணுவின் புகழைப் பாடிக் கொண்டிருகிறேன். அதைத் தவறவிட முடியாது. அதனால் எனது உடலை எடுத்துக் கொள்” என்றான் சண்டாளன்.

**அ**தைக் கேட்ட பிரம்ம ராட்சகன் சொன்னான், “உனது நிலை எனக்குப் புரிகிறது. பொன் பொருளைக் கொடுத்துவிடலாம். ஏனென்றால் அவற்றைத் தேடிக்கொள்ளலாம். தாம் செய்த புண்ணியத்தைக் கொடுத்தால் தேட முடியாது. நீ செய்த ஒருநாள்ப் புண்ணியத்தை எனக்குத் தரவேண்டாம். ஒரு மணித்தியாலம் செய்த புண்ணித்தைத் தா” என்று இரந்தது.

“**பி**ரம்ம ராட்சகனே ஒரு கணம் கூட என்னால் மகாவிஷ்ணுவை நினைக்காது இருக்க முடியாது. அந்த நிலையில் ஒரு மணித்தியாலம் எப்படி நினைக்காமல் இருக்க முடியும். அதனால் நான் தர மாட்டேன். நீ என்னைப் பிடித்து உண்பதையே நான் விரும்புகிறேன். அது சரி நீ அப்படி என்ன பாவம் செய்தாய். அதை எனக்குச் சொல்” என்றான் சண்டாளன்.

“**அ**ன்பரே, நான் தேவசர்மா என்ற அந்தணனின் மகன். எனது பெயர் சோமசர்மா. நான் ஒரு நாளாவது ஒழுக்கமுள்ளவனாக வாழவில்லை. மக்களுக்குச் செய்யத்தகாத தீமைகளையெல்லாம் செய்தேன். நான் பிராமணனாக இருந்தபோதும் வேதங்களைக் கற்கவில்லை. ஆனால் அவற்றையெல்லாம் கற்ற விற்பன்னர்போல வாழ்ந்து வந்தேன். பிராமணன் கட்டாயம் உபநயனம் செய்தல் வேண்டும். உபநயணம் செய்யாத பிராமணன் பிராமணனாகான். அவனும் ஒரு சண்டாளனே. உபநயனம் செய்யாத நான் பல பொய்களைச் சொல்லி ஒரு யாகம் ஒன்றைச் செய்தேன். வேதங்களைப் படிக்காத நான் பணம் பொருளுக்காகவே அந்த யாகத்தைச் செய்தேன். அதன் பயனாகத் தான் எனக்கு இந்த அவலம் நேர்ந்தது. நீ உனது புண்ணியத்தின் ஒரு பகுதியை எனக்களித்தால் எனது துயரங்கள் நீங்கும்” என்று கூறிப் பிரம்ம ரட்சகன் அழுதான்.

**பி**ரம்ம ரட்சகன் மீது சண்டாளனுக்கு இரக்கம் பிறந்தது. அதனால் சண்டாளன் தான் செய்த புண்ணியத்தின் ஒரு பகுதியை பிரம்ம ரட்சகனுக்குக் கொடுத்தான். அதன்பின் பிரம்ம ரட்சகன் சண்டாளனுக்கு நன்றி கூறிவிட்டு ஒரு புனித தீர்த்தக் கரைக்குச் சென்று நெடுங்காலம் தவம் செய்து தனது பாவத்தைப் போக்கிக் கொண்டான்.

**அ**தன்பின் சண்டாளன் தீர்த்தயாத்திரைக்குச் சென்று பல தலங்களையும் தரிசித்துக் கொண்டிருந்தான். இப்படி அவன் தீர்த்த யாத்திரை செல்லும் போது ஒருநாள் அவனுக்குத் தனது முற்பிறப்புப் பற்றிய ஞாபகம் வந்தது.

**அ**வன் முற்பிறப்பில் சகல சாத்திரங்களையும் கற்ற பெரும் பண்டிதனாக இருந்தான். அவன் தினமும் யாசகம் எடுத்தே உண்டு வந்தான். ஒருநாள் அவன் உணவு உண்டு கொண்டிருக்கையில் திருடர்கள் பல பசுக்களைத் திருடி அந்த வழியால் ஓட்டி வந்தனர். பசுக்கள் விரைவாக நடந்து வந்தமையால் நிலத்தில் எழுந்த புழுதி மண் அவனது உணவின் மீது விழுந்தது. அதனால் கோபங்கொண்ட அவன் தானுண்ட உணவை வீசினான். அதனால் தான் அவன் சண்டாளனாகப் பிறந்தான். அதை உணர்ந்த அவன் தீர்த்தக் கரைக்குச் சென்று தவம் செய்து நற்கதியை அடைந்தான்.

## 43. காயத்திரி

**கா**யத்திரி மந்திரம் தோன்றிய வரலாற்றைச் சூத முனிவர் தனது சீடர்களுக்குச் சொன்னார். "சீடர்களே, மூலப் பிரம்மம் தனது நாபியில் இருந்து பிரம்மனைத் தோற்றுவித்தார். அப்போது எழுந்த பிரணவ ஒலி பிரம்மனுக்குக் கேட்டது. அவ்வொலியைக் கேட்டதும் அவருடைய நான்கு முகங்களில் இருந்தும் இருபத்து நான்கு எழுத்துக்கள் தோன்றின. அந்த இருபத்துநான்கு எழுத்துக்களும் பீஜாசரம் எனப்படும். அதுவே காயத்திரி மகாமந்திரமாகும்.

**அ**தன்பின் பிரம்மனது முகத்தில் இருந்து நான்கு வேதங்களும் தோன்றின. அதனால் காயத்திரி மந்திரம் வேதங்களின் தாயாகக் கொள்ளப்படுகிறது. அதை ஜபிப்பவர்கள் பிரம்ம விதியைப் பெறுவர்.

## 44. யோகம்

யோகம் என்பது ஆன்மாவை பரமாத்மாவுடன் இணைப்பது. யோகம் செய்ய விரும்புபவர்கள் வேதங்களையும் புராணங்களையும் விளங்கிக் கற்க வேண்டும். சாத்வீகமான உணவுகளை உண்ண வேண்டும். வேத உபநிடதங்களைக் கற்றவர்களோடு பழக வேண்டும். புலன்களை அடக்கி பொருத்தமான ஆசனத்தில் அமர்ந்து மூக்கின் நுனியைப் பார்த்துப் பயில வேண்டும். விதிப்படி முறையாக யோகம் செய்பவர் எல்லா உயிர்களிலும் ஒரே பரமாத்மா இருக்கிறார் என்று அறிந்து கொள்வார். ஜீவராசிகளைத் தனித்தனியே காண்பது ஒரு மாயத் தோற்றம். எல்லா ஜீவராசிகளையும் ஒன்றாகப் பார்ப்பது பரமானந்தத்தோற்றமாகும். பரமானந்தத்தோற்றம் என்பது எல்லாவற்றிலும் ஒரு பரமாத்மா தான் இருக்கிறார் என்று உணருவதாகும்.

**முற்றும்**